இப்பொழுது
muhavary.com இலும்
படிக்கலாம்



முகவரி
MUHAVARY

மாதாந்த சஞ்சிகை எண்: 7 பாதை: 1 பெப்-மார்ச் 2015



கப்பலோட்டிய ஈழத்தமிழர்









MMUCC
URGENT CARE
Markham McNicoll Urgent Care Centre (MMUCC)
விரைவு மருத்துவ நடுவம்
மார்க்கம்-மக்நிகொல்
* Walk-In Clinic
* Urgent Care
* Lab Services (For our patients)
* X Ray & Ultrasound, Pharmacy & Physiotherapy (In the same building)
*Monday - Friday : 8am - 9pm
*Sat, Sun & Holidays: 9am - 4pm
Our staff can speak English, Hindi, Tamil, Malayalam & other languages.
Unit - 11, 2901 Markham Road, Scarborough, ON M1X 0B6
Call:. 416-609-3333



The Courier Source
We Deliver the Promise
LOCAL SERVICES - NATIONWIDE - GLOBAL SERVICES
905-761-7979
E: sales@thecouriersource.com
8600 Keele Street, Unit 10, Concord, ON.
www. thecouriersource.com



www.idhayamfm.com
இதயம் FM
உற்சாகத்தின் உற்ற நண்பன்




JAI SAI FLORIST
Available for Wedding, Pooja and other Occasions
Wedding Flower, Wedding Bouquet, Funeral Wreaths
Casket Adornment, Casket Spray, Standing Sprays
www.jaisaiflorist.com
416-396-9888/ 416-505-1252/ 647-707-0369
5215 Fish Ave East. # 123 GTA Square, Scarborough, ON
@ GTA Square




For your life Insurance, RESP, Critical Illness & Super Visa Coverage
Vany Jeganmohan
Insurance Advisor
416.670.7436
vany@megafinancial.ca
www.vanyfinancial.ca



TEL: (647) 706-8231
NATHAN TRADERS
பூசைப் பொருட்கள்
சமயப் படங்கள் மற்றும்
வீட்டுப் பாவனைப் பொருட்கள்
Textiles, Fancy, Utensils, ect...
5215 Finch Ave East. UNIT #:156 Scarborough, ON, M1S 0C2
@ GTA Square



Yoga Health Center
RAJI
Yoga Instructor / Yoga Therapist
Yoga
5215 Finch Ave East
Toronto, ON M1S 0C2
UNIT 207
(416)-780-7699
chandraleka28@gmail.com
@ GTA Square



சென்னையில்......
☎ 24512276
Call: 9841094150
VIMALAN TRAVELS
CAR QUALIS OPERATORS
H-53/F3, 57th Steet,
Marutham Apartment,
Thiruvalluvar Nagar, Thiruvanmiyur,
Chennai - 600 041.
N. GANESAN
Proprietor



INEEKA JEWELLERY & GIFTS
இனிகா ஜூவல்லரி & கிவ்ற்
நகைத் திருத்த வேலைகளை உடனுக்குடன் செய்துகொள்ளவும்,
பழைய நகைகளிற்கு அதிக விலையினைப் பெற்றிடவும்
5215 Finch Ave E. UNIT #111
Scarborough, ON, M1S 0C2
BUS: 416-293-0440
CELL: 647-924-5153
@ GTA Square

முகவரியில் குடிகொண்டவை....



பல் சீர்செய்தல் (Braces) உட்பட
சகல பல் வைத்திய
சேவைகளுக்கும்
For all your dental needs
Including braces
Dr. Baheerathan
Thurairajah
& Associates
416-291-1085
HEALTHY SMILE - FOREVER
North West Scarborough Youth Centre
St Nicholas Greek Orthodox Church
Metropolitan Centre
Finch Ave E
(Kennedy & Finch)
3852 Finch Ave., Suite 207 & 208, M1T 3T9

முகவரி

Editor in Chief

Kalasoori A. Sivanesaselvan MA, MSc.

Contact

5215, Finch Ave. E., Unit 218,
GTA Square,
Toronto, Ontario.
M1S 0C2
Canada.

e-mail: info@muhavary.com
phone: (+1) 416 628 6214
fax: (+1) 416 619 0335
web: muhavary.com

நன்றி வரிகள்...

காலத்தில் செய்த உதவி

‘முகவரி’யின் வரவையிட்டு, மகிழ்வுற்று, அது நின்று நிலைக்க ஆக்கமும் ஊக்கமும் வழங்கிய, வழங்க முன்வந்த அனைத்து வாசகர்கள், அபிமானிகள், நண்பர்கள், ஊடகங்கள் மற்றும் விளம்பரதாரர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

முகவரி

தண்ணீர்... தண்ணீர்...

யாழ் குடாநாட்டின் நிலத்தடி நீர் பாதுகாப்பு மிக நீண்டகாலப் பிரச்சினை. அது யாழ் குடா நாட்டு மக்களின் வாழ்க்கைமீது சகல பரிமாணங்களிலும் தாக்கம் செலுத்தத்தக்க அடிப்படையான பிரச்சினை. இன்று இப் பிரச்சினை யாழ் குடாநாட்டு மக்களின் குடிநீர்ப் பிரச்சினை என்ற உடனடிப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. அதிலும்கூட சில குறிப்பிட்ட பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கழிவு எண்ணெய்க் கலப்பு மிகப் பெரும் உடனடிப் பிச்சினையாக உருவெடுத்துள்ளது. பிரச்சினைத் தீர்வுகளுக்கு முறைமையான அணுகுமுறைகளுக்கு அதிகம் பழக்கப்படாத எமது மக்களுக்கான பழக்கப்பட்ட தீர்வு முயற்சி “கவன ஈர்ப்புப் போராட்டம்.” அதனையே மக்கள் இவ்விடயத்திலும் கடைப்பிடித்து வருகிறார்கள்.

யாழ் குடாநாட்டின் நிலத்தடிநீர்ப் பிரச்சினைக்கான பல தீர்வு முயற்சிகள் பலகாலமாக முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன. தொண்டைமானாறு முதல் நாவற்குழி, சுண்டிக்குளம் வரையான முக்கோண நன்னீரேரித் திட்டம் அவற்றில் பழமையானதும் முக்கியமானதும் சாத்தியமானதுமான ஒன்று. அதனைவிட மகாவலி திசைதிருப்பும் திட்டம், இரணைமடுத் திட்டம், கடல்நீர் சுத்திகரிப்புத்திட்டம் எனப் பல சாத்தியமான திட்டங்கள் உள்ளன.


தமிழ் அரசியல் தலைமைகள் என்று தம்மைக் கூறிக்கொண்ட தலைமைகள் அனைத்துமே மக்களுடைய உணர்ச்சிக்குத் தீனிபோட்டுத் தமது கதிரைகளைப் பாதுகாப்பதிலேயே குறிப்பாக இருந்து வந்துள்ளன.

இன்று இப் பிரச்சினை இனியும் தாமதிக்க முடியாத, கைமீறிய நிலையை எட்டியிருக்கிறது. உணவு நிவாரணம் என்ற நிலையிலிருந்து நீர் நிவாரணம் என்ற அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள மக்களது பிரச்சினைக்கான ஊற்று எது என்பது தெளிவாக அடையாளம் காணப்படவேண்டும். பிரச்சினைக்கான தீர்வு தெளிவான காலவரையறைகட்குட்பட்ட பல்வேறுகட்டங்களில்பல்வேறு தளங்களில் மேற் கொள்ளப்படவேண்டும்.

இதற்கான தீர்வைத் தந்திருக்கக்கூடிய நிறுவனங்கள் ஒருங்கிணைந்து செயற்படத் தவறியிருக்கின்றன. உலகெங்கும் பரந்து வாழுகின்ற புலம் பெயர் தமிழ்ச் சமூகம், இதுபற்றிய அக்கறை கொள்ள வேண்டும். இச் சமூகத்தில் கல்வியில் சிறந்து விளங்குபவர்கள் இணைந்து அரசியலுக்கு அப்பாற்பட்ட ‘சிந்தனையாளர் குழாம்’ (Think tank) ஒன்றை ஏற்படுத்த முன்வர வேண்டும். என்றும்போல் இன்றும் உள்நாட்டில் மட்டுமன்றி புலம்பெயர் தேசங்களிலும் பிரிந்து நின்று செயற்படுகின்ற அரசியல்வாதிகள் இதில் அக்கறை கொள்ள மாட்டார்கள் என்ற வரலாற்று உண்மையை உணர்ந்து அரசியல் சார்பற்ற, சமூக நோக்குள்ள கல்விசார் சமூகம் ஒரு ‘சிந்தனையாளர் குழாமை’ ஏற்படுத்த உடனடி முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். அவ்வாறான ஒரு நிறுவனமே யாழ் குடாநாட்டின் நிலத்தடி நீர்ப் பிரச்சினை போன்ற ஈழத் தமிழர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகட்கு உடனடியானதும் நீண்டகால அடிப்படையிலானதுமான தீர்வுகளை முன்வைக்க முடியும் என்பது முகவரியின் தாழ்மையான கருத்து.


அரசியல் பிழைப்புவாதம் ஈழத்தமிழர் அரசியலின் சகல பரிமாணங்களிலும் வேர்விட்டுக் கிளைத்து பரப்பி நிற்கிறது. தமிழ் மக்களின் அரைப்பங்கினர் வெறுமனே அவர்களது நேர்மையான கருத்து களுக்காகவே துரோகிகளாக்கப்பட்டுள்ளனர். துரோகிப் பட்டம் கிடைத்துவிடுமோ என்ற அச்சத்திலேயே ஒரு பெரும்பகுதி அறிவு ஜீவிகள் குழாம் ஓடி ஒழித்து ஒதுங்கி வாழத் தலைப்படுவிட்டது.

ஆசிரியர்.




யாழ் குடிநீரில் கழிவெண்ணை

மகிந்த தோற்றார், மைத்திரி வென்றார். அரசியல் மாற்றம் தமிழர்களுக்கு விடிவு, பசில் தலைமறைவு, டக்லஸ் தேவாநந்தாவுக்கு ஆப்பு, கோத்தா வெளியில் வந்தார் என்றகதை பரபரப்பு தொடரும் இவ்வேளையில் எம் வாழ்வாதாரத்துக்கு ஏற்படும் அச்சுறுத்தல் குறித்து கவனிப்பார் எவருமில்லை. சுன்னாகம் பகுதியில் உள்ள கிணறுகளில் பரவி வரும் கழிவு ஒயில் கலப்பு தற்போது கட்டுவன், தெல்லிப்பழை பகுதியில் உள்ள கிணறுகளுக்கும் பரவத் தொடங்கியுள்ளது. தற்போது பல ஆயிரக்கணக்கான குடும்பங் கள் குடிநீரின்றி அவதிப்பட்டு அல்லாடும் நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. இக் கழிவு ஒயில் கிணறுகளில் கலப்பதினால் பாரிய ஆபத்துக்களை இம் மக்கள் அனுபவிக்க நேரிடு கிறது. குறிப்பாக நுரையீரல், இரத்தப் புற்றுநோய், சிறுநீரக செயலிழப்பு, வலிப்பு போன்ற பல குணப்படுத்த முடியாத நோய்கள் ஏற்படும் என மருத்துவர்கள் கூறியுள்ளனர். அத்துடன் பிறக்கப் போகும் குழந்தைகளும் இவ்வாபத்தை அனுபவிக்க நேரிடும் என்று வைத்தியர்கள் அறிவித்துள்ள போதிலும் கூட உடனடியான நடவடிக்கைகள் எதுவும் ஏற்படவில்லை.



கிணறுகளில் கழிவு ஒயில் கலப்பதினால் பொது மக்களுடைய வாழ்க்கை பாதிக்கப்படுவதுடன் அவர்களுடைய விவசாய நடவடிக்கைகளும் ஏனைய செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டுச் செல்லும் நிலைமை காணப்படுகின்றது. மயிலிட்டி, ஏழாலை தெற்கு, மேற்குப் பகுதியில் உள்ள வீடுகளின் கிணற்று நீரிலும் ஒயில் கலந்துள்ளதால் பிரதேசசபைகள் ஆங்காங்கே தாங்கிகளை நிறுவி, நீரை வழங்கி வருகின்றன. இது நுகர்வுக்கு போதுமான வகையில் அமையவில்லை. இதனால் அப்பகுதி மக்கள் குடிநீருக்காக பல்வேறு இடங்களுக்கும் சென்று பெற்றுவரும் நிலையில் உள்ளனர். கிணற்று நீருக்கு பெயர் போன ஏழாலை மக்களே தமது அத்தியாவசிய தேவையான குடி நீருக்காக வேறு இடங்களுக்கு அலைந்து திரிய வேண்டிய துர்ப்பாக்கிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.மேலும் கிணற்று நீரில் ஒயில் கலந்துள்ளதால் அப்பகுதி விவசாயிகள் தாம் விவசாயம் செய்ய முடியாத சூழ்நிலை காணப்படுவதுடன் சுத்தமான மரக்கறிகளை பெற முடியாத நிலையும் காலப்போக்கில் ஏற்படலாம்.



2009ம் ஆண்டு முதல் இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான மின் உற்பத்தி நிலையத்தில் நொதேன் பவர் கம்பனி (பிறைவற்) லிமிட்டட் என்ற தனியார் நிறுவனம் டீசலில் இயங்கும் மின் பிறப்பாக்கிகளைப் பொருத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்து வருகின்றது. இந்த மின் பிறப்பாக்கிகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு ஒயில் பாதுகாப்பற்ற முறையில் வெறுமனே நிலத்தில் கிடங்கு வெட்டி அதற்குள் விடப்படுகிறது. 2012ம் ஆண்டு இவ்வாறான எண்ணை கசிவுகள் கொண்ட இரண்டு கிணறுகள் அடையாளம் காணப்பட்டிருந்தன. ஆனால் இன்று ஐந்து கிலோமீற்றர் சுற்றளவில் உள்ள கிணறுகளுக்கு கழிவு எண்ணெய் படிமங்களின் கசிவால் பாதிப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன. 2013 முதல் பாராளுமன்றச் சட்டத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட உத்துறு ஜெனனி என்ற நிறுவனமும் மேற்கூறியது போல இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தது. தற்போது யாழ் குடாநாட்டிற்கான மின்சார விநியோகம் நீர் மின்சாரத்தில் இயங்கும் தேசிய மின் வலையமைப்பிலிருந்தே வழங்கப்படுகின்றது. மேற்கூறிய இரு நிறுவனங்களினாலும் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் மின் அழுத்த சீராக்கலுக்கு மட்டுமே பயன்படுத்தப்படுகின்றது.

சுன்னாகப் பிரதேச மக்கள் 2013ல் கிணறுகளின் எண்ணெயைக் கண்டு எண்ணெய் வளம் இருப்பதாக நம்பினர். ஆனால் 2014 ஆடியில் அந் நீரை பரிசோதித்தபோதுதான் எண்ணை படிமங்கள் கலந்திருப்பதை அறிந்தனர்.

நொதேன் பவர் கம்பனி (பிறைவேற்) லிமிட்டட் நிறுவனமும், உத்துறு ஜெனனி நிறுவனமும் உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது சுற்றாடல் அதிகாரசபை சட்டத்திற்கேற்ப சுற்றாடல் பாதிப்பு தொடர்பான மதிப்பீடுகள் எவற்றையும் செய்யாததோடு பிரதேசசபைகள் சட்டத்திற்கேற்ப வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் அனுமதியினையும் பெறவில்லை.

இப் பிரதேச மக்கள் 2013ம் ஆண்டு காலப்பகுதியில் இங்கு இருக்கின்ற கிணறுகளின் எண்ணெய் படிமங்களை அறிந்து சுன்னாகப் பிரதேசத்தில் எண்ணெய்வளம் இருப்பதாக நம்பினர். அதன் பின்னர் 2014ம் ஆண்டு ஜூலை மாதமளவில் இப்பகுதி விவசாயிகள் தமது கிணற்று நீரை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் மூலம் பரிசோதனை செய்து பார்த்தபோது அப்பகுதி மக்களினது சுகாதாரத்தையும் உடல் நலத்தையும் பாதிக்கக்கூடிய வகையிலும் விவசாயத்திற்கு பயன்படுத்த முடியாத வகையிலும் கிணறுகளில் எண்ணை படிமங்கள் கலந்திருப்பதைக் கண்டனர். இதனைத் தொடர்ந்து குறித்த தனியார் மின்உற்பத்தி நிறுவனத்தை தடை செய்யக்கோரி 2014 நவம்பர் 11ம் திகதி பதினொரு விவசாயிகள் குறித்த நிறுவனத்திற்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கலை மேற்கொண்டனர். இதுவரை காலமும் இந்த வழக்கிற்கு எந்த தீர்வும் இல்லாமல் காலம் தாழ்த்தப்பட்டுக்கொண்டே சென்றது. (தற்போதுதான் இதன் செயற்பாட்டை நிறுத்தும்படி ஒரு தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.)

சிதம்பரநாதன் ரமேஸ்

வடமாகாண சபையின் செயற்பாடு

கழிவு எண்ணை நாளுக்கு நாள் இப்பகுதி நிலத்தடி நீரினை ஆக்கிரமித்து வருகிறது. ஆனால் வடமாகாண சபையின் செயற்பாடுகளானது வெறுமனே அறிக்கை வடிவங்களிலும் ஆய்வு செய்வதாகவுமே இருக்கின்றன. மாகாணசபையில் இருக்கின்ற அமைச்சர்கள், உறுப்பினர்களின் வாதப்பிரதி வாதங்களும், அறிக்கைகளும் குறித்த அனர்த்தத்தை தடுப்பதாக அமையவில்லை. சுன்னாகத்தில் ஆரம்பித்த எண்ணைப்பரவல் சூராவத்தை, ஏழாலை ஊடாக தற்போது கட்டுவன், தெல்லிப்பழை வரை பரவியுள்ளது. இது மக்களின் இருப்பைக் கேள்விக்குறியாக்கியுள்ளது.

தீர்வு யோசனை

தற்போது இங்கு பரவிவரும் அனர்த்தத்திற்கு உடனடியாக தீர்வு தேட வேண்டும். குடாநாட்டின் மின்சாரத்தேவைக்குதேசியவலையமைப்பிலிருந்து கிடைக்கும் மின்சாரத்தை பயன்படுத்தலாம். அது போதாவிட்டால் சூரியமின்சாரம், காற்று மின்சாரம், உயிரியல் மின்சாரம் என்பவற்றை பெற்றுக் கொள்வதற்கு முயற்சி செய்யலாம். ஆனால் நீர் மாசடைவதற்கு மின்னிலையங்கள் காரணமானால் பாதுகாப்பான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்வரை

அவற்றை நிறுத்துவது அவசியம். அதேவேளை விஞ்ஞான ரீதியான ஆய்வுகள் மூலம் இம் மின் நிலையங்கள் தான் நிலத்தடிநீரில் எண்ணெய் கலப்பதற்கு காரணமா, இல்லையேல் வேறு காரணங்கள் உள்ளனவா என்பதை முதலில் கண்டறிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

யாழ் குடாநாட்டில் வளமான நிலங்களும், நன்னீர்ப் பிரதேசங்களும் மிகவும் குறைவு. சுன்னாகம் பிரதேசம் அமைந்துள்ள வலி. வடக்குப் பிரதேசம் இவ்வளங்களையுடையது. இதன் ஒரு பகுதியை உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் இராணுவம் ஆக்கரமித்து நிற்கின்றது. மீதிப்பகுதிக்கு தற்போது நஞ்சூட்டப்படுகின்றது. சுன்னாகத்திலிருந்துதான் முன்னர் காரைநகர் பிரதேசத்திற்கு குடிநீர் அனுப்பப்பட்டது. மற்றவர்களுக்கு நீரை வழங்கிய மக்கள் தற்போது தமக்கு நீரில்லாமல் தவிக்கின்றனர்.

ஆபத்து தலைக்குமேல் வந்து விட்டது. இனிமேலும் நாம் அக்கறையற்றிருந்தால் எல்லோரும் சேர்ந்து அழிய வேண்டியதுதான் என்பதைக் கருத்தில் கொண்டு சுன்னாகம் மேற்கு பகுதியில் உள்ள கிணறுகளில் தற்போது பரவும் கழிவு ஓயில் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று சுன்னாகம் சிவன்கோவில் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. கடந்த எட்டு வருடங்களுக்கு மேலாக சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்திலிருந்து வெளியேற்றப்படும் கழிவு ஓயில் குறித்து மக்கள் விசனம் தெரிவித்தபோது அதிகாரிகள், அரசியல்வாதிகளின் துணையுடன் இந்த பிரச்சினையை வெளிவராது தடுத்தனர். இதன் காரணமாகவே இன்று பொதுமக்கள் குடிதண்ணீருக்கு அலைய வேண்டியுள்ளதாக அங்கு குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் மாகாணசபை உறுப்பினர் ஒருவர் உட்பட சுமார் நூற்றி ஐம்பதுக்கும் மேற்பட்ட பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் கலந்துகொண்டு தமது நிலைமையை எடுத்துரைத்தனர். கடந்த காலத்தில் இந்தப் பிரச்சினை எழுந்த போதிலும், சுகாதார அதிகாரிகளும், அரச ஊழியாகளும் இதுவரையில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை என்று குற்றச்சாட்டையும் முன்வைத்திருந்தனர். ஆனல் இப்போது அரசியல் சூழ்நிலைகள் மாறிவிட்ட நிலையிலாவது உரிய அவசிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு எம் தலைவர்கள் வழிசெய்வார்களா?

காசி ஆனந்தன் கதைகள்

தோல்கள்

பாம்பு தோலைக் கழற்றி வைத்துவிட்டுப் புறப்பட்டது.

ஆடுகள் மேய்ந்துகொண்டிருந்த பக்கம் அது போனது.

அங்கே நின்ற தனியன் ஆட்டிடம் "அதோ பார்.... பாம்பு உன்னுடையவர்கள் இருக்கும் இடத்தை நோக்கித்தான் போகிறது. நச்சுப் பாம்பு - பல் பட்டாலே போதும்..." என்று கூறியது சேவல்.

"அப்படி ஒன்றும் நடந்துவிடாது.... பாம்பு தோலைக் கழற்றிப் புதிதாகப் பிறந்திருக்கிறது..." என்றது தனியன் ஆடு.

சிறிது நேரத்தில் -

ஆடுகளின் அலறல் புல்வெளியை உலுக்கியது.

ஓசை வந்த திசையை நோக்கித் தனியன் ஆடும் சேவலும் ஓடின.



அங்கே -

பாவம்... அப்பாவி ஆடுகள் இரண்டு பாம்புக்குப் பலியாகிச் செத்துக் கிடந்தன.

சேவல் சொல்லியது:

"பல்லைக் கழற்றாத பாம்பு
தோலைக் கழற்றி என்ன?
வாலைக் கழற்றி என்ன?"

ஏன் இந்தப் புத்தி? தமிழ் வேட்பாளர்களே..



ஐந்து தமிழர்கள் இருந்த ஒரு கூட்டில், சொறி சொறி, மாறிச் சொல்லிவிட்டேன். ஐந்து குரங்குகள் இருந்த ஒரு கூட்டில், உச்சியில் வாழைப்பழக் குலையொன்றைக் கட்டி, அதை அடைய ஏணியொன்றையும் வைத்தார்கள். ஆனால் ஏதாவது ஒரு குரங்கு ஏணியில் ஏறத் தொடங்கும் ஒவ்வொரு தடவையும் மற்றக் குரங்குகள் மீது குளிர் தண்ணீர் ஊற்றினார்கள்.

ஏணியில் ஏறும்போதுதான் தண்ணீர் ஊற்றுகிறார்களெனக் கண்டு, அப்படி ஏற முயற்சிக்கும் குரங்கை மற்றக் குரங்குகள் தாக்கித் தடுத்தன. அப்படித் தடுத்தால் தண்ணீர் ஊற்றப்படாதெனக் கண்டு ஒரு கட்டத்தில் ஐந்து குரங்குகளும் ஏணியில் ஏறுவதை தவிர்த்து, வாழைப்பழ ஆசையை அடக்கிக் கொண்டன. தண்ணீர் ஊற்றப்படுவதும் நின்றுவிட்டது.

இந்நிலையில் கூண்டுக்குள் இருந்து ஒரு குரங்கை வெளியே எடுத்து விட்டு, அதற்குப் பதிலாக புதிய குரங்கொன்றை உள்ளே விட்டனர். புதிய குரங்கு முதல் வேலையாக ஏணியில் ஏற, மற்றக் குரங்குகள் பாய்ந்து அதைத் தாக்கி தடுத்து நிறுத்தின. அது வாழைப் பழத்தை தின்ன முயற்சித்த போதெல்லாம் தொடர்ந்து தாக்குதலுக்கு உள்ளானதால் புதிய குரங்கும் பயந்து ஏணியில் ஏறுவதை நிறுத்திவிட்டது - காரணம் ஏனென்று புரியாமலே.

அடுத்து மீண்டும் பழைய குரங்கொன்றை நீக்கிவிட்டு இரண்டாவது புதிய குரங்கொன்றை உள்ளேவிட்டார்கள். இந்தக் குரங்குக்கு ஏணியில் ஏறாதவாறும் முதலில் மாற்றப்பட்ட குரங்கும் மற்றைய குரங்குகளுடன் சேர்ந்து தாக்கியது காரணம் ஏனென்று தெரியாமலே.

இவ்வாறு எனைய மூன்றாம் நான்காம் ஐந்தாம் பழைய குரங்குகளும் ஒவ்வொன்றாக புதிய குரங்குகளால் மாற்றப்பட்டன. இப்படிக் கூண்டுக்குள் விடப்பட்ட புதிய குரங்குகள்யாவும் ஏணியில் ஏறாதவாறு மற்றைய குரங்குகள் தாக்கின.

இப்போது எல்லாமே புதிய குரங்குகள்தான். அவற்றுக்கு ஏணியில் ஏறினால் குளிர் தண்ணீரால் தண்டிக்கப்பட்டும் என்ற விடயமே தெரியாது. தண்ணீர் ஊற்றப்படும் என்று தெரிந்த குரங்குகளெல்லாம் ஒன்றென்றாக மாற்றப்பட்டுவிட்டன. ஆனாலும் இப்போதிருக்கும் புதிய குரங்குகளும் காரணம் தெரியாமலே எந்தக் குரங்கும் ஏணியில் ஏறுவதை அனுமதிக்க மறுக்கின்றன. குரங்கென்றால் வாழைப்பழத்தைக் கண்டதும் பாய்ந்து சென்று பிடுங்கி உண்ணும் என்ற அதன் அடிப்படை இயல்புக்கே அவை காரணமறியாமலே தமக்குத் தாமே தடை விதித்துக் கொண்டன.

முன்னர் நாம் எடுத்த முடிகளை புதிய தலைமுறையின் தலையிலும் கட்டி அரைப்பது இப்படித்தானோ?



கனடிய பாராளுமன்றுக்கான(2015) ""ஸ்காபுரோ வடக்கு"" தொகுதியின் லிபரல் கட்சி வேட்பாளர் தேர்வில் தமிழ் வேட்பாளர்கள் தங்களுக்குள் மோதி வாய்ப்பைக் கோட்டை விட்டுவிட்னர். இதுபோலவே அண்மையில் உள்ளூர் அவைகளுக்கும் கல்விச் சபைகளுக்குமான தேர்தலிலும் விட்டுக்குடுப்புச் செய்யாது 30ற்கும் மேற்பட்ட பெருந்தொகையான தமிழ் வேட்பாளர்கள் மோதி ஆக மூன்று பேரே தெரிவு செய்யப்பட்டனர். அதில் இருவர் ஏற்கெனவே பதவிவகித்தவர்கள்.

இம்முறை, ஸ்காபுரோ வடக்குத் தொகுதியின் வேட்பாளரர் நியமனம் பெற, தமிழர் தரப்பில் லோகன் கணபதி போட்டியிட்ட அதேவேளையில் நிர்மலன் வடிவேல் என்ற இன்னொரு தமிழரும் களமிறங்கியிருந்தார். லோகன் கணபதி 600 வாக்குகளையும், நிர்மலன் 300 வாக்குகளையும் பெற சீன சமூகத்தைச் சேர்ந்தவரான ஷான் ஷென் என்பவர் இவர்கள் இருவரையும் வேி 825 வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டி லிபிரல் கட்சி வேட்பாளராகத் தெரிவானார். இதில் வருந்தத்தக்க விடயம் என்னவென்றால், இரு தமிழ் வேட்பாளருக்கும் கிடைத்த மொத்த வாக்குகள் 900 அதாவது இதில் யாராவது விட்டுக்கொடுத்து தமது வாக்குகளை மற்றைவருக்குக் கிடைக்க வழிகோலியிருந்தால் தமிழ் வேட்பாளர் ஒருவர் தெரிவாகியிருப்பார். அந்த மனப்பான்மை என்று வருமோ என்பதே கேள்வி.

ஆனால், கனேடியப் பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில், வெவ்வேறு கட்சிகளிலுள்ள தமிழ் வேட்பாளர்கள் ஒருவருக்கொருவர் மேதி, மற்றவர் வெற்றிபெறும் வாய்ப்பைக் குறைக்கும் வேடிக்கை தொடரத்தான் போகிறது. ஏற்கெனவே, ஒரேயொரு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினரான ராதிகா சிற்சபேசன் உள்ள தேர்தல் வட்டாரம் இரண்டாகப் பிரிக்கப்பட்டுவிட்டது. அங்கு அவர் சார்ந்திருக்கும் என்டிபி கட்சி பெரிய மனதோடு அவ் இரு வட்டாரத்திலும் ஒன்றில் அவர் மற்றயதில் முன்னாள் துடுப்பாட்ட வீரரான சாந்திகுமார் என இரண்டிலுமே தமிழ் வேட்பாளர்களையே நிறுத்தியிருக்கிறது. இதை முன்னிட்டு தமிழ்த் தரப்பினர் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையோடு யோசித்து, அப் பகுதிகளில் தமிழ் வேட்பாளர்களைத் தவிர்ப்பார்களேயானால் அப் பகுதி தமிழ் வாக்காளர்களின் வாக்குகள் பிரிந்து தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவாகும் சாத்தியம் இழக்கப்படுவதைத் தவிர்க்கலாம். ஆனால் அவ்வாறன்றி, ஏற்கெனவே இதர கட்சிகளிலும் அப் பகுதிகளுக்கு தமிழ் வேட்பாளர்கள் போட்டியிடவே முன்னிற்கின்றனர்.

தற்போது லிபரல் கட்சியின் ஸ்காபுறோ வடக்குத் தெகுதி வேட்பாளருக்காகப் போட்டியிட்டு தோல்வியுற்ற இரு தமிழ் வேட்பாளர்களில் யார் வென்றிருந்தாலும் அவர் தற்போதய தமிழ் பாராளுமன்ற உறுப்பினருக்கு எதிராக போட்டியிடுபவர்களாகவும், அதனால் அவருக்கான தமிழ் வாக்குகளைப் பிரித்து அவர் தெரிவாகும் வாய்ப்பைக் குறைப்பவராகவுமே செயற்பட்டிருப்பார்.

அதனால் தமிழர்களுக்கிடையே போட்டி ஏற்படாதவாறு தமக்கிடையே பேசிக்கொண்டு, வட்டாரங்களை தெரிவுசெய்துகொள்வதே உகந்தது.

கிறிஸ்தவமும் இந்துவும் ஒன்றா?


ந. முத்துமோகன்

மத உருவாக்கங்கள்

நமது மதங்களை உருவாக்கியவர்கள் யார்? இது ஒரு மோசமான கேள்வி என்பது எனக்கே தெரிகிறது. நமது மதங்களை நாம்தான் சொந்தமாக உருவாக்கிக் கொண்டதாக நம்பிக்கொண்டிருக்கிறோம். கொஞ்சம் மரியாதையாகச் சொன்னால், நமது முன்னோர்கள் தாம் இந்த மதங்களை வடிவமைத்து நமக்குத் தந்ததாக நம்பிக் கொண்டிருக்கிறோம். அப்படியிருக்கையில், அந்த நம்பிக்கையில் கீறலை ஏற்படுத்துவது போல இந்த கேள்வி அமைகிறது. நமது மதங்கள் மிகப் பழமையானவை. 2000-2500-3000 ஆண்டுகள் எனப் பழைய வரலாறுகளைத் தாராளமாகக் கிளரமுடியும். வெவ்வேறு வரலாற்றுக் காலகட்டங்களில் வெவ்வேறு அழுத்தங்களுடன், வெவ்வேறு திசைகளை நோக்கி அவை ஆடி அசைந்து அலைந்து வளர்ந்திருக்கின்றன. நமது மதங்களின் சொந்த வரலாற்றில், அவை இப்படித் தான் இருக்கவேண்டுமென்று அவற்றுக்குக் கறாரான கட்டுப்பாடுகள் எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை. ஒரு கூட்டம் யாகங்களை வளர்த்து மந்திரங்களை உச்சரித்துக்கொண்டிருந்த வேளையில் இன்னொரு கூட்டம் பக்திப் பரவசத்தில் ஆடிப்பாடி பூசைகளை செய்துகொண்டிருந்தது. நமது மதங்களைப் பற்றி ஒவ்வொரு இருநூறு வருடத்திற்கும் ஒவ்வொரு கதை சொல்லமுடியும்.

இந்த நீண்ட நெடிய வரலாற்றினூடே, காலனித்துவ ஆட்சிக் காலம் என்பது காத்திரமான மாற்றங்களை ஏற்படுத்திய காலகட்டம் ஆகும். கீழைநாடுகளின் வரலாறு அக்காலத்தில் சில அடிப்படையான திருப்பு முனைகளைச் சந்தித்ததாகக் கூறுவார்கள். குறிப்பிட்ட அக்காலகட்டத்தில், நமது மதங்களும் தீவிரமான மாற்றங்களைச் சந்தித்துள்ளன. நீங்கள் நம்புவீர்களோ நம்பமாட்டீர்களோ, குறிப்பிட்ட இக்காலத்தில் நமது மதங்கள் முன்னெப்போதுமில்லாத அளவில் மாற்றமடைந்து முழுக்க புதுவடிவங்களை ஈட்டியுள்ளன. ஐரோப்பியர்கள் நமது நாடுகளுக்கு வந்தபோது இங்கிருந்த மக்களையெல்லாம் நாகரீகப்படுத்தப் போகிறோம் என்றுதான் சொல்லிக்கொண்டார்கள். மக்கள் ஒருபுறமிருக்க, நமது மதங்களெல்லாம் நவ நாகரீக மதங்களாக மாறிவிட்டன. அந்த மாற்றங்களைத் தொகுத்தே நவீன மத உருவாக்கங்கள் என்று இங்கு குறிப்பிடுகிறோம்.


காலனி ஆட்சிக்காலத்தில் நம்மூர் மதங்களில் ஏற்படத் தொடங்கிய ஒருவகையான மாற்றங்கள், 19, 20 ஆம் நூற்றாண்டுகளைக் கடந்து, இன்று உச்சக் கட்டத்தை எட்டியுள்ளன. வெளிநாட்டுச் சக்திகளுக்கு எதிராக மட்டுமின்றி, உள்ளூர் சகபாடிகளுக்கு எதிராக மதப்பெரும்பான்மையைப் பயன்படுத்துவது, மதச் செல்வாக்கைப் பயன்படுத்தி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவது, மதத்துறவிகளே அரசியல் தலைவர்களாக உருவெடுப்பது, சிறுபான்மையினர் மீது இனப் படுகொலைகளை ஏவி விடுவது என மத அரசியல் பெருகி வளர்ந்து வந்துள்ளது. இந்தியாவிலும் இலங்கையிலும் ஒருசேர மதப்பெரும்பான்மையை ஆதாரமாகக் கொண்ட கட்சிகள் ஆட்சியில் அமர்ந்துள்ளன என்பது அச்சமூட்டக்கூடிய சூழலை உருவாக்கியுள்ளது. அறியப்பட்ட உலக வரலாற்றின் இரண்டு மிகப் பெரிய அதிகார வடிவங்களான மதமும் அரசியலும் ஒன்றுகூடி ஆட்சிக்கட்டிலில் அமர்ந்திருக்கின்றன. பொருளாதார உடைமை உணர்வே ஆகப்பெரிய ஆதிக்க சக்தி என்று கார்ல் மார்க்ஸ் கருதினார். ஆயின் மதமும் அரசியலும் இணைந்து பொருளாதாரத்தை விஞ்சி நிற்கின்றன. காலனி ஆட்சிக் காலத்திலிருந்து, நாடு விடுதலை பெற்ற நாட்களிலிருந்து, இந்தச் சூழலை நோக்கித்தான் வேகவேகமாக ஓடி வந்தோமா, என்று எண்ணத் தோன்றுகிறது! மீண்டும் அதேகேள்வி முன்னுக்கு வருகிறது, இந்த மதங்களை உண்மையில் நாமேதான் விரும்பி வடிவமைத்தோமா? இந்த மதங்களைச் செய்தவர்கள் யார்?



மேற்கத்திய அறிவாளிகள்

குறைந்தபட்சம் இரண்டு காரணங்களுக்காக காலனிய ஆட்சியாளர்கள் தெற்கு ஆசியாவின் மதங்களை மறு உருவாக்கம் செய்தார்கள். ஒன்று, அவர்களது நிர்வாகத் தேவைகளுக்காக. சாலை ஓர மரங்களின்மீது எண்களைப் பொறித்துவைத்து கணக்கெடுப்பதைப் போல இந்தியா, இலங்கை போன்ற நாடுகளின் மக்களை ஓர் "ஒழுங்கிற்குள்" கொண்டு வருவதற்கு மதக்கணக்கெடுப்பு அவர்களுக்குத் தேவைப்பட்டது. மக்கள் கூட்டங்களை ஒழுங்குபடுத்த, கட்டுப்படுத்த, அடிமைப்படுத்த, "நாகரீகப்படுத்த" எண் ணிக்கைக் கணக்கு தேவைப்பட்டது. ஆற்றில் கொட்டினாலும் அளந்து கொட்ட வேண்டுமல்லவா? மதங்கள் சமூக ஒழுக்கங்களை, கட்டுப் பாடுகளை நோகாமல் நொறுங்காமல் மக்களிடையில் வழக்குக்குக் கொண்டுவந்துவிடுகின்றன. எவ்வளவோ கடினமான விடயங்களை மதங்கள் உளவியல்ரீதியாக நெகிழ்வாக ஏற்புடமை கொண்டனவாக மாற்றிவிடுகின்றன. அதனால் மதங்கள் முக்கியமாகின்றன. எந்த மதம் பெரும்பான்மை மதம்? ஆட்சியாளர்கள் எந்தமதத்தவருக்கு எவ்வளவு இடம் கொடுக்க வேண்டும்? எந்த மதத்தவரை அதிகமாக அனுசரித்துக் கொள்ளவேண்டும்? என்பவையெல்லாம் இந்தக் காலத்தில்தான் முக்கியமாகின. மதப்பெரும்பான்மை என்ற விடயத்திற்கு நாம் அறிமுகமாகிக்கொண்ட காலமும் இதுதான். மதச்சார்பற்ற சனநாயக அரசியலின் கருத்தாக்கமான பெரும்பான்மையை நமது வசதிக்கேற்ப மத அரசியலோடு ரசவாதம் செய்து மதப் பெரும்பான்மை என்ற ஒன்றை உருவாக்கிவிட்டோம். காலனி ஆட்சியாளர்கள்சொல்லிக்கொடுத்ததைத் தாண்டி, மதப்பெரும்பான்மையை இன்னும் பல நோக்கங்களுக்கு லாவகமாகப் பயன்படுத்த இந்த நாட்களில் நாம் கற்றுக்கொண்டுவிட்டோம் என்பதையும் சொல்லியாக வேண்டும்.

19ம் நூற்றாண்டின் மத்தியிலிருந்து தெற்கு, தென்கிழக்கு ஆசியாவின் பெரிய மதங்களான பௌத்தம், இந்து மதம் ஆகியவற்றைக் கிறித்தவ மதத்தின் நோக்கிலிருந்து மறு உருவாக்கம் செய்யத் தொடங்கினார்கள். இது நவீன மத உருவாக்கங்களின் இரண்டாவது சூழலாகும். ஐரோப்பாவில் கத்தோலிக்கக் கிறித்தவத்தைத் தீவிரமாக விமர்சித்து சீர்திருத்தக் கிறித்தவம் தோன்றி நிலைகொண்ட காலம் அது. கத்தோலிக்கத்திற்கு சுமார் 1500 ஆண்டுகால இறையியல் உண்டு. ஆயின் சீர்திருத்தக் கிறித்தவம் அப்போதுதான் சுமார் 200-300 ஆண்டுகளாகத் தனது இறையியலை எழுதிக் கொண்டிருந்தது. தனது சொந்த இறையியல் உருவாக்கத்திற்காகக் கீழைநாட்டு மதங்களைச் சீர்திருத்தக் கிறிஸ்தவம் அக்கறையோடு அணுகியது என்றும் கூறுவார்கள். கத்தோலிக்கத்தின் சடங்குகள், உருவ வழிபாடு ஆகியவற்றைத் தாண்டி அருவமான இறைக் கொள்கை, அற உணர்வு ஆகியவை தூக்கலாக அமைந்த சீர்திருத்தக் கிறித்தவம் காலனியவாதிகளில் பலரால் (ஆங்கிலேயர்கள், ஜெர்மானியர்கள் ஆகியோரால்) ஆதரிக்கப்பட்டது. ஐரோப்பாவில் கத்தோலிக்கத்திற்கும் சீர்திருத்தக் கிறித்தவர்களுக்கும் இடையில் வெளிப்பட்ட வேறுபாடுகள் தெற்காசிய சமய உருவாக்கங்களிலும் வெளிப்பட்டன. இன்னும் சரியாகச் சொல்லுவதானால், ஐரோப்பியர்களுக்கிடையில், கத்தோலிக்கர், சீர்திருத்தக் கிறித்தவர், ஆங்கிலேயர்,




Shan Sarvananthan
Call: 416 - 720 - 1184
CIVIC
Formula Honda
Where You're Treated Like Family
2240 Markham Road,, Scarborough, ON, M1B 2W4 Off: 416 -754-4555 Fax: 416-754-9465 atheesans@formulahonda.com www.formulahonda.com


Take the advantage of low inventory,
Call us for free market evaluation
வீடு வாங்க விற்க இலவச ஆலோசனைகளுக்கு
மோட்கேஜ் தேவைகளுக்கும்
நட்பான அனுபவமுள்ள எம்மை
நம்பிக்கையுடன் அழையுங்கள்
BAD CREDIT - NO CREDIT
NO PROBLEM
Better Results! Better Life!
Thamil Suberamaniam
Sales Representative
416-358-6200
RE/MAX
Crossroads Realty Inc. Brokerage
1055 McNicoll Ave. Toronto, ON. M1W 3W6
Independently Owned and Operated.
Siva Sangarappillai
Broker
647-448-6464
www.thamilhome.com
www.sivashomes.com

ஜெர்மானியர், அயர்லாந்துக்காரர், ஸ்காட்லாந்துக்காரர், பழமைவாதி, தாராளவாதி, தொழிற் கட்சியாளர் என்பது போன்ற ஒவ்வொரு வேறுபாடும் இந்து மதம், பிராமணியம், பௌத்தம், சைவ சித்தாந்தம் ஆகியவற்றின் மீளுருவாக்கங்களில் வேறுபாடுகளை ஏற்படுத்தியது. இருப்பினும் மேற்கத்திய சிந்தனை, கிறித்தவம், காலனிய நலன் ஆகியவற்றின் நோக்கங்கள்துலாம்பரமாக வெளிப்பட்டன.

ஒரு மதம் என்பது இறைச் செய்தியைச் சுமந்து நிற்கும் புனித நூல் ஒன்றை மையமாகக் கொண்டிருக்க வேண்டும் என்பது மேற்கத்தியரின் நம்பிக்கை. எனவே இந்தியா, இலங்கை, சீனா போன்ற நாடுகளைக் காலனிப் படுத்தியிருந்த ஐரோப்பியர்கள் நமது புனித நூல்களைத் தேடினார்கள். அவை அவர்களுக்குக் கிடைத்துவிட்டன! வேதங்கள், உபநிடதங்கள், திரிபிடக நூல்கள், பகவத் கீதை, திருமுறைகள், சாத்திரங்கள் என வரிசைப் படுத்தினார்கள். நவீன மத உருவாக்கங்களில் மக்களை விட, புரோகிதர், பூசாரி, பிக்கு போன்றோரை விட புனித நூல்கள்தாம் முக்கியப்படுகின்றன என்று சொல்லுகிறார்கள். இது ஓர் ஆச்சரியம்தான். கோயில்கள், புத்த விகாரைகள் அல்லது வழிபாட்டு முறைகளுக்கு இல்லாத மரியாதை திடீரென அச்சடித்த புத்தகங்களுக்குக் கிடைத்துவிட்டன. நமது மதங்களின் வரலாற்றில் புத்தகங்களுக்கு இவ்வளவு மரியாதை எப்போதுமே இருந்தது கிடையாது. அவரவர் ஊரில் அவரவர் வசதிக்கேற்ப மதச்சடங்குகளை மனம்போல வளைத்துக் கொள்வார்கள்.

வேதங்களைப் பழைய ஏற்பாடு எனக் கொண்டால் உபநிடதங்களைப் புதிய ஏற்பாடு எனச் சொல்லலாம் என்று மேற்கத்திய அறிஞர்கள் ஒப்பிட்டார்கள். வைதீக இந்துமதத்தைக் கத்தோலிக்கக் கிறிஸ்தவம் என்று சொன்னால், அதன் சடங்காசாரங்களைக் கேள்விக் குள்ளாக்கிய பௌத்த சமயத்தைச் சீர்திருத்தக் கிறித்தவத்தோடு ஒப்பிடலாம் என்றார்கள். அத்வைத வேதாந்தமும் பௌத்தமும் அருவமான சீர்திருத்தக் கிறித்தவ இறையியலுக்கு மிகவும் நெருங்கி வந்தன. பௌத்தத்தின் அறக் கோட்பாடுகள் சீர்திருத்தக் கிறித்தவர்களுக்கு மிகவும் பிடித்திருந்தன. இயேசுவின் வாழ்க்கையையும் புத்தரின் வாழ்க்கையையும் ஒப்பிட்டு மேற்கில் பல நூல்கள் வெளிவந்தன. புத்தரே இந்தியாவின் மார்ட்டின் லூதர் என்று மேற்கத்திய அறிஞர்கள் எழுதினார்கள். துக்கம், துயரம், துன்பத்தின் வழியாக விடுதலை என்ற கருத்து கிறித்தவத்தையும் பௌத்தத்தையும் பக்கத்தில் கொண்டு வந்தன. பௌத்தத்தின் நடைமுறை வடிவங்களிலிருந்து பெரிதும் விலகிய தூய அறவடிவம் மேற்கு நாடுகளில் பிரபலம் அடைந்தது. கடலில் கரைத்த பெருங்காயம் போல இருந்த வேதாந்தத்தை மேற்குநாட்டவர்கள் இந்தியாவின் மிகப்பெரிய தத்துவம் என வரைந்து காட்டினார்கள். இந்தியர்கள் ஒவ்வொருவரின் வீட்டு முற்றத்திலும் ஒரு யானை கட்டிப் போடப்பட்டிருக்கும் என்று இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் ஐரோப்பியர்கள் நினைத்தார்களாம். அதுபோல, இந்து மதத்தவர் எல்லோருமே அத்வைத வேதாந்திகள் என்பது போன்ற கருத்தும் மேற்கில் பிரசித்தி பெற்றது. சைவம், வைணவம், சாக்தம், ஊருக்கு ஊர் வேறு வேறான அம்மன் கோவில்கள், ஆவேச தெய்வங்கள், குல தெய்வ வழிபாடுகள் ஆகியவற்றை எல்லாம் சேர்த்துத் தைத்து இந்து மதம் என்ற ஒரு புதிய மதத்தையே மேற்கத்திய அறிஞர்கள் உருவாக்கினார்கள். இந்து மதம் என்பது அறிஞர்களுக்கிடையில் மட்டும் தான், பெரும்பாலும் புத்தகப் பயன்பாட்டில் மட்டும் தான் நிலவுகிறது என்று இப்போது ஓர் அறிஞர் எழுதுகிறார்.

வெள்ளைக்காரன் தான் நம் எல்லோரையும் ஒரே மதத்திற்குள் வைத்துப் பூட்டினான் என்று காஞ்சி காமகோடி சங்கராச்சாரியார் "தெய்வத்தின் குரல்" நூலில் கூறுகிறார். பிராமணனையும் சூத்திரனையும் ஒரே மதத்தினுள் வைத்துப் பூட்டியதில் இன்றுவரை அவருக்கு வருத்தம் உண்டு. கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் இப்போது வேதங்களை "யார் யாரோ" படித்துப் பாடம் எடுக்கிறார்கள், ஆனால் பிரபஞ்ச வெளியில் ஒலியாக விரவிக்கிடந்த வேதங்களைக் காதால் கேட்டு நினைவில் வைத்துக்கொண்டவர்கள் பிராமணர்கள் தாம் என்பதை மறந்துவிடாதீர்கள், என்று அவர் சொல்லுகிறார். பிராமண மதம் என்பது ஒரு தனி மதம். 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம் என்ற பெயர்கள்தாம் பிரபலமாக இருந்தன. எல்லா மக்களையும் பிராமண மதத்திற்குள் இணைக்க வேண்டும் என்று எந்தவொரு ஆச்சாரியாரும் எப்போதுமே ஆசைப்பட்டது கிடையாது. இப்போதுகூட 19 ஆம் நூற்றாண்டின் கடைசியில் "எண்ணிக்கைப் பெரும்பான்மை" என்ற அரசியல் சொல்லாடல் முதன்மைப்பட்ட போதுதான் "இந்து மதம்" என்ற விரிந்த சொல் அரங்கத்திற்கு வந்தது.

(அடுத்த இதழில் முடியும்)

தமிழ் மரபுரிமைத் திங்கள் விழா

தை மாதம் தமிழ் மரபுரிமை மாதமாக அங்கீகரிக்கப்பட்டதை சிறப்பிக்கும் வகையில் ஒன்டாரியோ முது தமிழர் மன்றத்தினர் தை மாதம் 19ம் திகதி முதல் 24ம் திகதி வரை ஸ்காபரோ சிவிக் சென்டர் முன் அரங்கில் ஒரு வாரகால சிறப்பு நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தனர். தை மாதம் 19ம் திகதி பாரம்பரிய கண்காட்சியுடன் ஆரம்பமான நிகழ்வுகள் இறுதி நாளான 24ம் திகதியன்று பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளுடன் சிறப்பாக நடந்தேறின.


தலைவர் திரு. சே. சிறீஜெயனாதன் வரவேற்புரை நிகழ்த்தினார். கலை நிகழ்வுகள் நாதஸ்வர இசையுடன் ஆரம்பித்து பாரம்பரிய நடனங்களான கரகம், கும்மி, பொம்மலாட்டம், உழவர் நடனம், பொங்கல் நடனம் என தொடர்ந்தது. இதனைவிட செவிக்கு விருந்தாக வீணா கானம், தமிழிசைப் பாடல்கள் இசைக்கப்பட்டன. நிகழ்ச்சிகளின் உச்சக்கட்டமாக இசையோடு கூடிய ஒரு நடைபவனி இடம்பெற்றது.

கௌரவ ராதிகா சிற்சபையீசன்–ரூஜ்ரிவர் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர், கவுன்சிலர்களான திரு. சின் லீ, ஜிம் கரிஜியானிஸ் சிறப்பு விருந்தினராக டாக்டர் விக்டர் பிகராடோ மற்றும் பல சிறப்பு விருந்தினர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சிகளைச் சிறப்பித்தனர்.

மேலும் திரு. குமார் புனிதவேல் எழுதிய இலங்கைத் தமிழர்களின் வாழ்வில் சடங்குகள் என்ற புத்தகமும் ஒன்ரரியோ முது தமிழர் மன்றத்தால் வெளியிடப்பட்டது.







A tradition of trust......



Toronto,Link 2-storey
Price $579,900
3 +2 bedroom ,finish basement, 4washroom.Close to school, Go station,fully renovated



Toronto, Price $599,000
4+1bedroom,2 kitchen, finished basement with sep. entrance,Close to 401hwy, TTC,Hospital,UofT.



Ajax
Price $ 650,000
detached 2-storey,4Bedrooms,3 washrooms,close to all amenities, hey,mall & school



Price $610,000
Detached Bungalow,3+1 Bedrooms, Washrooms,Finished basement w/o, Fully renovated,pot light through out,mature trees feels like cottage living,.



Price $ 599,900
detached 2 storey ,6 +1 Bedroom, Finished basement,Prime corner lot,close to all amenities.



Price $539,900
3 bedroom,3 washroom,finish basement w/o,close to all amenities,schools,shopping mall

HomeLife Today Realty Ltd., Brokerage*

*Independently owned and operated.

Higher Standard Agents. Higher Results™

**உங்கள் முழு மன நிறைவுடன் வீடு
வாங்க, விற்க, முதலிட...**

Charles A . Arulanandam

Sales Representative



Business : 416 298 3200
Dircect: 416 459 0445

charlesantonysa@gmail.com
www.homelifetoday.com

210 - 31 Progress Ave ., Toronto. ON M1P 4S6



புதிய ஆட்சிமாற்றம் தமிழர்களின் எதிர்கால அரசியலில் செலுத்தப் போகும் பாத்திரம் குறித்து தற்போது அதிகமாக பேசப்பட்டு வருகிறது. அதிலும் குறிப்பாக அரசியல் களத்தில் 13வது திருத்தச்சட்டம் குறித்த வாதப்பிரதிவாதங்கள் தலைதூக்கியிருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது.

இனப்பிரச்சினைக்கு தீர்வாக 1987ஆம் ஆண்டு இலங்கை-இந்திய உடன்படிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட 13வது திருத்தச்சட்டதிற்கூடாக மாகாணசபை முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தியாவின் பிராந்திய வல்லாதிக்கத்தை உறுதிசெய்வது இந்தியாவின் தலையீட்டுக்கான நோக்கங்களில் ஒன்றாக இருந்தாலும் கூட அதனைத் தொடர்ந்து நிகழ்ந்த அரசியல் நிலைமைகள் இந்தியாவின் இறைமைக்கும் வல்லாதிக்கத்துக்கும் அவமானமாகவே இருந்தன. குறிப்பாக எதிர்பார்த்தபடி சகல இயக்கங்களையும் சரிக்கட்ட முடியாமல் போனமை, விடுதலைப்புலிகளுடனான யுத்தத்தில் கண்ட இழப்புகள், இந்திய அமைதி காக்கும் படை நற்பெயரை இழந்தமை, அன்றைய ஜனாதிபதி பிரேமதாச இந்தியப்படைகள் வெளியேறவேண்டும் என்று பகிரங்கமாக அறிவித்தமை போன்றவற்றை முக்கியமாக குறிப்பிடலாம். அது போலவே வரும்போது கொண்டுவந்த மாகாணசபையை 1990இல் போகும்போது இரண்டே வருடங்களில் அந்த மாகாணசபையைக் கலைத்துவிட்டு போகும் நிலைக்கு தள்ளப்பட்டது. இத்தனைக்கும் மேல் அடுத்த வருடமே தமது பிரதமர் ராஜீவ் காந்தியை இழக்கவும் நேரிட்டது.



இத்தனை நிகழ்வுகளும் இந்தியாவுக்கு அரசியல் பிரச்சினையாகவும், ராஜதந்திர பிரச்சினையாகவும் மாத்திரம் இருக்கவில்லை. அது ஒரு மானப் பிரச்சினையாகவும் தொடர்ந்து இருந்துகொண்டே வந்தது. இதற்காக எந்த விலையை கொடுத்தும் சரிசெய்வதற்கு எத்தனையோ முயற்சிகளையும் மேற்கொண்டது. விடுதலைப் புலிகளையும், அதன் தலைவர் பிரபாகரனையும் அழிப்பதும், தம்மால் அறிமுகப்படுத்தப்பட்ட இனப்பிரச்சினைத் தீர்வை அமுல்படுத்தி காட்டுவதும் இந்தியாவின் முன் இருந்த பணிகளாக இருந்தன.

ஆனால் தாம் அறிமுகப்படுத்திய மாகாணசபையை அமுல்படுத்துவது என்பதை விட புலிகளை இல்லாமல் செய்வது நிகழ்ச்சிநிரலின் முதன்மை இடத்திலேயே இருந்தது. ராஜீவ் காந்தியை இராணுவ அணிவகுப்பின் போது தாக்கியும், தமது படையை விரட்டிய செயலாலும் தென்னிலங்கை அரசாங்கத்தின் மீது இருந்த வெறுப்பு கூட இரண்டாம் இடத்திற்குத் தள்ளப்பட்டு புலிகளை அழிக்கும் விடயத்தில் இலங்கை அரசுடன் கைகோர்த்தது இந்தியா. புலிகளை சர்வதேச அளவில் தனிமைப்படுத்துவதற்கான முதல் அடியை புலிகளை தடை செய்ததன் மூலம் எடுத்து வைத்தது. பின்னர் அதனை முன்னுதாரணமாகக் கொண்டு உலக அளவில் 30 நாடுகள் புலிகளை தடை செய்தன. ஆக அதன் மூலம் புலிகளின் அழிவுக்கான அத்திவாரத்தை இட்டது.

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வின் பேரில் தென்னாசிய பிராந்தியத்துக்குள் அந்நிய நாடுகளின் ஊடுருவலை சகிக்கமுடியாத நிலையில் காலப்போக்கில் சமாதான பேச்சுவார்த்தைகளிலும், தீர்வு யோசனைகளிலும் தமது பாத்திரத்தையும் வகிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டது இந்தியா. பேட்டையின் தலைவனாக தமது அனுசரணையின்றி இனப்பிரச்சினைக்கு விமோசனமில்லை என்கிற நிலையை உறுதிப்படுத்திக் கொண்டது. காலப்போக்கில் அரசு-புலிகள் பேச்சுவார்த்தையும் முறிந்தது. சமாதானத்தில் தமது பாத்திரம் எப்படியோ அதைப் போலவே போரிலும் தமது முழு ஆதரவையும், அனுசரணையையும் வழங்கி ஈற்றில் தமது நோக்கத்தை நிறைவேற்றிக்கொண்டது இந்தியா. விடுதலைப்புலிகளும் தோற்கடிக்கப்பட்டனர்.

சரி. இனி அதன் அடுத்த இலக்கான தமது மாகாண சபை முறையை நிர்ப்பந்திப்பது என்கிற இடத்தை வந்தடைந்தது இந்தியா. அந்த இலக்கில் தொடர்ச்சியான நிர்ப்பந்தத்தை சகல வழிகளும் செய்துகொண்டிருந்ததை அனைவரும் அறிவோம். தற்போது இந்திய ஆட்சி மாற்றமும் இலங்கையின் ஆட்சிமாற்றமும் அதற்கான சாதகமான சூழலை திறந்துவிட்டிருக்கிறது.

இரு நாட்டு சமிக்ஞை

தற்போதைய பிரதமர் ரணிலும், வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீரவும் மாகாண சபை அமுல்படுத்துவதில் தமிழர்களுக்கு சாதகமான நிலையில் இருப்பவர்கள். அதன் எல்லை எது என்பது தனியாக ஆராயப்படவேண்டிய விடயமாக இருந்தாலும் கடந்த மகிந்த ஆட்சியை விட சாதகமானவர்கள் என்று கொள்ளலாம். அதை விட தற்போதைய இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் மங்கள சமரவீரவுடன் நீண்டகாலமாக தனிப்பட்ட நட்பை கொண்டிருப்பவர். மங்கள சமரவீர பதவியேற்ற அன்றே சுஷ்மா மங்களவுக்கு தனது டுவீட் மூலம் "வாழ்த்துக்கள் என் நண்பனே!" என வாழ்த்து தெரிவித்ததுடன் இந்தியாவுக்கு வருமாறு அழைப்பு விடுத்தார். மங்கள சமரவீர 18 ஆம் திகதி தனது முதல் விஜயமாக இந்தியாவுக்கு விஜயம் செய்வதை அறிவித்திருப்பதாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சின் பேச்சாளர் செயித் அக்பருதீன் அன்றே டுவீட் மூலம் அறிவித்திருந்தார்.

என்.சரவணன்

அதன்படி தனது முதல் விஜயமாக இந்தியாவுக்கு இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்ட மங்கள இந்தியப் பிரதமர் மோடியுடனும், வெளிவிகார அமைச்சர் சுஷ்மாவுடனும் நீண்டநேர பேச்சுவார்த்தைகளை நடத்தினார். அந்த பேச்சுவார்த்தையில் 13வது திருத்தச்சட்டம், மற்றும் வடக்கு கிழக்கில் இராணுவத்தை குறைப்பது, தமிழ் நாட்டிலுள்ள அகதிமுகாம்களில் வாழ்பவர்களை மீள இலங்கையில் குடியேற்றுவது உள்ளிட்ட விடயங்கள் உரையாடப்பட்டுள்ளன. இந்த சுமுகமான உரையாடலின் பின்னர் இலங்கைக்கு வரும்படி பிதமர் மோடிக்கு விடுக்கப்பட்ட அழைப்பும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மார்ச் மாதம் இலங்கை விஜயம் செய்யவிருப்பதாக பின்னர் அறிவிக்கப்பட்டது. அந்த விஜயத்தின் போது 13வது திருத்த சட்டம் குறித்து அழுத்தம் தெரிவிக்கவிருக்கிறார் என்று இப்போதே திவயின பத்திரிகை உள்ளிட்ட பல சிங்கள ஊடகங்கள் சிங்கள மக்களுக்கு பீதியை கிளப்பத் தொடங்கியுள்ளன.

ஏற்கெனவே சென்ற வருடம் ஒகஸ்ட் மாதம் 23 அன்று டில்லியில் பிரதமர் மோடியை இரா.சம்பந்தன் சந்தித்து உரையாடிவிட்டு வந்ததன் பின்னர் 13வது திருத்தச்சட்டத்துக்கு அப்பால் சென்று அதிகாரம் வழங்கப்படவேண்டும் என்று அறிவித்தார் பிதமர் மோடி. அந்த அறிவித்தலிற்கு ஜேவிபி உள்ளிட்ட ஏனைய இனவாத சக்திகள் தமது எதிர்ப்பை வெளியிட்டிருந்தன.

இந்தியாவின் மீள்வருகை?



இந்தியா 13வது திருத்தச் சட்டத்துக்கு பச்சைக்கொடி காட்டியிருப்பதோடு மறு புறம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இந்திய NDTV

தொலைக்காட்சிக்கு வழங்கிய பேட்டியில் ஒற்றையாட்சிக்கு குந்தகமில்லாமல் 13வது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தப் போவதாக அறிவித்திருக்கிறார். பொலிஸ் அதிகாரம் குறித்து உள்ள அச்சத்தை நீக்கும் வகையில் அதற்கான ஏற்பாடுகள் குறித்து ஆராய்ந்து வருவதாகவும் அப்பேட்டியில் தெரிவித்திருந்தார். 13வது திருத்தச்சட்ட விடயத்தில் இந்தியா தமிழர்களுக்கு ஒரு பலம். அதேவேளை மீண்டும் உள்நாட்டில் எதிர்நோக்கப் போகும் சவால்கள் ஏராளம்.

புதிய நெருக்கடிகள்

நடந்துமுடிந்த தேர்தலில் மகிந்த அணி, மைத்ரிபால அணிக்கு எதிராக பயன்படுத்திய முக்கிய ஆயுதமே தமிழர்களுக்கு நாட்டை தாரை வார்க்கப் போகிறார்கள் என்பதே. இராணுவத்தை வெளியேற்றப்போகிறார்கள், புலிகள் பலமடையப்போகிறார்கள், தமிழீழம் அமைக்கப்போகிறார்கள் போன்ற பீதிகளை அவர்கள் வெளிப்படையாக பிரச்சாரம் செய்திருந்தார்கள்.



இப்போதும் கூட புதிய அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளை அப்படித்தான் தொடர்ந்தும் பிரச்சாரம் செய்து வருகிறது மகிந்த அணி. இன்னும் ஒருசில மாதங்களில் நடக்கவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலில் சிங்கள வாக்கு வங்கியை இலக்காக வைத்து அவர்கள் இந்த பிரசாரத்தை தொடர்ந்தும் முன்னெடுக்க வாய்ப்புகள் அதிகம்.

மகிந்த தரப்பில் இருக்கும் விமல் வீரவங்ச, தினேஸ் குணவர்தன, உதய கம்மன்பில போன்றோர் இப்படியான இனவாத பிரசாரத்தில் முன்னணி பாத்திரம் வகிக்கிறார்கள். கூடவே பொதுபல சேனா, ராவணா பலய போன்ற இனவாத அமைப்புகளும், நளின் டி சில்வா, தயான் ஜயதிலக்க போன்ற "சிங்கள புத்திஜீவிகளும்" களத்தில் இறக்கப்பட்டுள்ளார்கள்.

மகிந்தவின் அரசாங்கத்தில்தான் 13வது திருத்தச்சட்ட யோசனை மேலும் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டதை கவனத்தில் கொள்ளவேண்டும். வடக்கு கிழக்கு பிரிப்பு, கண்துடைப்புக்காக மாகாணசபைத் தேர்தலை வடக்கு கிழக்கில் நடத்தியது, இராணுவ அதிகாரிகளை ஆளுநராக நியமித்தது, மாகாண சபை இயங்க முடியாதபடி ஆளுனருக்கூடாக முட்டுக்கட்டைகளை போட்டுக்கொண்டேயிருந்தது போன்றவற்றை அடுக்கிக்கொண்டு போகலாம். வடக்கு கிழக்கு மாகாணங்களில் மாகாண சபை தேர்தலோ, ஆட்சியோ நடக்கக்கூடாது என்பது குறித்து மகிந்தவின் அரசாங்கத்துக்கு வெளியிலிருந்து வந்த அழுத்தங்களை விட அரசாங்கத்துக்குள்ளேயே இருந்த நிர்ப்பந்தங்கள் தான் அதிகம். ஆனாலும் சர்வதேசத்துக்கு பதில் சொல்வதற்காக மகிந்தவுக்கு கிடைத்த கண்துடைப்பு உத்தி இதுவொன்றாகத்தான் இருந்தது. எனவே தான் ஆட்சியை கொடுத்து விட்டு அதிகாரத்தை பறித்து பாக்கெட்டில் வைத்துகொள்ளும் உத்தியைக் கையாண்டு வந்தது.



நல்லாட்சி அலை

நடந்துமுடிந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால தரப்பு விஞ்ஞாபனத்திலேயோ, 100 நாள் வேலைத்திட்டதிலேயோ 13வது திருத்தச் சட்டம் குறித்தோ அதிகாரப் பரவலாக்கம் குறித்தோ ஒன்றும் கூறவில்லை. ஆனால் மாறாக ஒற்றையாட்சிக்கு உத்தரவாதம் என்று அறிவித்தது. அது சிங்கள வாக்குகளின் மீதிருந்த அச்சத்தினாலேயே அப்படி கூறியது. ஆனால் தேர்தல் முடிவுகள் தமிழர் வாக்கு வங்கியின் பலத்தை மீண்டும் நிரூபித்தது.

இப்போது ஏற்பட்டிருக்கும் புதிய நிலைமை என்னவென்றால் "நல்லாட்சி அலை" நாளுக்கு நாள் வாக்கு வங்கியை பல கோணங்களிலும் பலப்படுத்திக்கொண்டே போகிறது. இந்த போக்கு சிங்கள வாக்கு வங்கியை இலக்காக வைத்து இனப்பிரச்சினை தீர்வை இனவாத தரப்புக்கு விட்டுகொடுக்கும் நிலை உருவாகுமா என்கிற அச்சம் தவிர்க்க முடியாதது. "நல்லாட்சி" அணியிலுள்ள சிங்கள பேரினவாத அணிகளின் அமைதி மேலும் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.




தற்போதைய இலங்கையின் அரசியல் நிகழ்ச்சிநிரலானது இலங்கைக்கு வெளியில் உள்ள சக்திகளாலேயே நகர்த்தப்படுகிறது என்கிற புரிதலின் படி, தற்போதைக்கு அது 13வது திருத்த சட்டத்துக்கு சாதகமானது என்று எடுத்துக்கொள்ளலாம்.

தமிழர்களின் அடிப்படை அரசியல் உரிமை கோரிக்கைகளை சிறிதாக்கி வெறும் சலுகை கோரிக்கைகளாகவும், அன்றாட அத்தியாவசிய தேவைகளோடு குறுக்கி விட்டுள்ளது கடந்தகால போக்கு. பிரதான நிகழ்ச்சிநிரலை பின்தள்ளிவிட்டு, "லிகிதரை நியமிக்க கவர்னர் கடிதம் கொடுக்கிறார் இல்லை" என்பது போன்ற பிரச்சினைகளுக்குள் கவனக்குவிப்பை செலுத்த தள்ளப்பட்டிருக்கிறது மாகாணசபை அரசியல்.

இதில் உள்ள வேடிக்கை என்னவென்றால் கடந்த கால தமிழீழ கோரிக்கை, தாயக கோட்பாடு, சுயாட்சி, சுயநிர்ணய உரிமை, வடக்கு கிழக்கு இணைப்பு, சமஷ்டி போன்ற பதங்கள் சமகால தமிழர் அரசியல் களத்தில் அரசியல் நீக்கம் செய்யப்பட்ட ஒன்றாக மாறியிருப்பது தான். அவை ஆபத்து மிக்க பதங்களாகவும், இனவாதிகளை சீண்டி விடுமென்றும், இணக்க அரசியலுக்கு இடைஞ்சலாகிவிடும் என்றும் ஒரு சுயதணிக்கை நிலை வளர்ந்துவிட்டிருக்கிறது. இது பேரினவாத நிகழ்ச்சிநிரலின் கைதேர்ந்த வெற்றி என்றே கூற வேண்டும். இறுதியில் எப்போதோ நிராகரித்த 13வது திருத்த சட்டத்தை இப்போது தாருங்கள் என்று பிச்சை கேட்கும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறது தமிழர் அரசியல்.

சிங்கள பௌத்தர்களின் பொதுப்புத்தி தமிழர்களுக்கு எதிரான உளவியலாக கட்டமைக்கப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது. அது இன்று நிறுவனமயப்பட்டுள்ளது. அரச அனுசரணையுடன் அது நடந்தேறியுள்ளது. இன்று அது அரசின் கட்டுப்பாட்டுக்குள் கூட இல்லை என்று நிரூபணமாகியுள்ளது. இன்று அரசே அதனை அனுசரித்து போகும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. நிறுவனமயப்பட்ட இந்த அடிப்படை கட்டமைப்பை மாற்றுவதென்பது சடுதியாக மாற்றக்கூடியதல்ல. நீண்ட கால வேலைத்திட்டத்தின் அடிப்படையிலேயே அது சாத்தியமாகும். எந்த "நல்லாட்சியாலும்" இந்த நாட்டை இனவாதத்திலிருந்து குறுகிய காலத்தில் மீட்க முடியாது. இந்த புதிய "தேசிய அரசாங்கம்" அதற்கான ஒரு முன்னுதாரணமாக இருக்குமா அல்லது மைத்திரிபால அரசாங்கம் "மகிந்தபால" அரசாங்கமாக ஆகிவிடுமா என்பதையே அனைவரும் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள்.

☺☺



CAPS
இலங்கையில் தொடர்பு கொள்ள
077-386-7458
021-205-2240
வெளிநாட்டுக் கல்வியையும்
வேலைவாய்ப்பையும் இலக்காகக்
கொண்ட பாடத்திட்டங்கள்.
இமிகிரேசன் உதவிகள்.
IELTS
NURSING
Etc.
யாழ்
திருநெல்வேலி
சந்திக்கருகில்
Canadian Academy of Professional Studies
52, Palaly Road, Thirunelvely, Jaffna.

கிழக்கு முதல்வருக்கான குதர்க்க மோதல்

சாந்தி சச்சிதானந்தம்

எப்பொழுதும் உடன் பிறந்த சகோதர சகோதரிகள் மத்தியில்தான் போட்டியும் பொறாமையும் அதிகளவு இருக்கும் என எனது தாயார் அடிக்கடி சொல்லுவார். எங்களது உறவினர்கள் மத்தியில் ஏற்படும் சண்டை சச்சரவுகளைக் காலங்காலமாக அவதானித்து வந்த அறிவு அவருடையது. போட்டிகள் எப்பொழுதும் போட்டி போடக் கூடியவர்கள் என ஒருவர் மதிக்கும் நபர்களுடன்தான் ஏற்படும். உதாரணமாக, ஒரு சாதாரண மனிதன் தனது நாட்டு ஜனாதிபதியுடன் போட்டி போடத் துணியான். ஆனால் தனது நண்பனுடன், தனது சகோதரனுடன் தயங்காமல் போட்டியிடுவான். அருகில் வசிப்பவர்கள், எம்மைப் போல் அதே வலுவாற்றல் கொண்டவர்கள், நாம் அடிக்கடி ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்ளக்கூடிய நிலையில் இருப்பவர்கள் இவர்களுடன்தான் எங்களுக்கு பொறாமைப் போட்டிகள் உருவாகலாம்.

கிழக்கு மாகாணத்தில் முதலமைச்சர் பதவி தொடர்பாக ஏற்பட்ட துரதிர்ஷ்ட நிலைமைகளுக்கும் இதுதான் காரணம். பின்னே, சுதந்திரம் பெற்ற காலந்தொட்டு சிங்களவர்கள்தானே நாட்டின் பிரதம மந்திரியாகவும் ஜனாதிபதியாகவும் இருக்கின்றார்கள், தமிழ் முஸ்லிம் மக்களும் நாட்டின் தலைமைப் பதவிகளுக்கு வரக்கூடிய வகையில் அரசியலமைப்புச் சட்டம் மாற்றப்பட வேண்டும் என்று அவர்களுடன் சண்டைக்குப் போகின்றோமா? இல்லையே. அவர்களுடன் போட்டி போட எங்களால் முடியாது, எனவே அவர்களோடு சண்டை பிடிக்க மாட்டோம். கிழக்கு மாகாணத்தில் சாதாரண மக்களிடம் போய்க் கேட்டுப் பார்த்தால், சிங்களவர்களோடு வாழலாம் ஆனால் முஸ்லிம்களோடு வாழவே முடியாது என்று தமிழர்களும் சிங்களவர்களோடு வாழலாம் ஆனால் தமிழர்களோடு வாழவே முடியாது என முஸ்லிம்களும் கூறுவது இதனால்தான். சிங்களவர்களோடு போட்டியே இல்லையே. அப்போ பிரச்சினை இருக்காதுதானே.

இரு சாராருக்கிடையில் ஒரு முரண்பாடு ஏற்படும்போது அது அனேகமாக அவரவர்களின் நிலைப்பாடுகளினால்தான் ஏற்படுகின்றது. "தமிழ் முதலமைச்சர் வேண்டும்" அல்லது "முஸ்லிம் முதலமைச்சர் வேண்டும்" என்பது ஒரு நிலைப்பாடாகும் (Position). நிலைப்பாடுகள் தீர்க்க முடியாதவை. இந்த விடயத்தில் ஒரு முஸ்லிம் நபரிடம் இந்தக் கேள்வியைக் கேட்டால் அவர் நிச்சயமாக முஸ்லிம் முதலமைச்சர்தான் வேண்டும் என்பார். தமிழர் தமிழ் முதலமைச்சருக்குத்தான் வாக்களிப்பார். இதனை எப்படித் தீர்ப்பது? தவிரவும், நிலைப்பாடுகள் மக்களை சிந்திக்க விடமாட்டா. நிலைப்பாடுகளின் நிலையிலேயே இருந்தால் பேசுவது அறிக்கை வெளியிடுவது எல்லாமே உணர்ச்சி மயமாகத்தானிருக்கும். கடைசியில் அது கைகலப்பில் போய்த்தான் முடியும். ஒவ்வொரு நிலைப்பாட்டிற்குப் பின்னாலும் சில தேவைகள் இருக்கின்றன. ஏன் இந்த முதலமைச்சர் கோரிக்கையை விடுகின்றனர் என ஆராய நாம் முற்பட்டால் அந்நிலைப்பாட்டிற்குப் பின்னாலுள்ள தேவைகள் வெளியில் வரும். தேவைகள் தீர்க்கக்கூடியன, அவற்றை வைத்து எந்தப் பேச்சுவார்த்தையையும் நடத்தலாம். எனவே தற்போதைய நிலைப்பாட்டின் பின்னாலுள்ள தேவைகள் என்னவென்று சிறிது பார்ப்போம்.

தற்போதைய மாகாணசபை முறைமையின்படி ஒரு மாகாணத்தின் முதலமைச்சருக்கு எந்தவித அதிகாரங்களும் இல்லையென்பது எல்லோருக்கும் தெரியும். கடந்த ஒன்றரை ஆண்டுகளாக வட மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியமைத்து ஒன்றும் செய்ய முடியவில்லை என மக்களுக்குக் கையை விரித்ததுதான் மிச்சம். 2014ம் ஆண்டு மாச் மாதம் யாழ் மாவட்டத்தின் விதவைகள் அமைப்பான அமரா வலையமைப்பினர் முதலமைச்சர் விக்கினேஸ்வரனுக்கு தமது பிரச்சினைகளும் கோரிக்கைகளும் அடங்கியதொரு மனுவினைக் கையளித்து விட்டுக் காத்துக் கிடந்தார்கள். அதற்குப் பிறகு அவரைச் சந்திக்கக்கூட அவர்களுக்குக் கிடைக்கவில்லை. கடைசியாக ஆற்றாமையினால் கடந்த டிசம்பர் மாதம் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் சென்றனர். அந்தக் கடைசி நேரத்திலும் உடனேயே அவர்களுக்கு ரூபா 10 இலட்சம் அவர்களுடைய அவசர வாழ்வாதாரத் தேவைகளுக்காக அவர் ஒதுக்கித் தந்தார். இப்படி ரூ 10 இலட்சம் கூடக்கொடுக்க முடியாத, அதற்கு ஒன்றும் செய்ய முடியாத முதலமைச்சர் பதவிக்கா அடிபிடிப்படுகின்றது கூட்டமைப்பு? முதலமைச்சர் பதவியினால் என்னதான் இலாபம் பெற முயல்கின்றது?

கூட்டமைப்பின் மாகாணசபை அரசியல்வாதிகளுக்கு தாமும் வரி விலக்கு வாகனங்கள் சகிதம் அதிகாரத்துடன் உலா வரும் அவா முதல் தேவையாகும். முஸ்லிம்கள் இரண்டு வருடங்கள் இருந்தால் போதும் இனி எங்களுக்கு விட்டுத் தரவேண்டும் என்கின்ற கூற்று அத்தேவையிலிருந்துதான் ஆரம்பிக்கின்றது. அத்துடன், முஸ்லிம்கள் அமைச்சுப் பதவிகளை எடுத்திருக்கின்றார்கள் எனவே மாகாணசபையினை தமிழர்களுக்கு விட்டுத் தரவேண்டும் என்றெல்லாம் சிறுபிள்ளைத்தனமாக அவர்களைப் பேச வைக்கின்றது. மத்திய அரசில் அமைச்சுப் பதவிக்கும் மாகாண சபையில் அமைச்சுப் பதவிக்கும் ஒரு தொடர்பும் இல்லையாகும். கூட்டமைப்பு ஏனைய கட்சிகளைக்கொண்டு ஆட்சியமைக்க ஏதுவாக இருந்தால் அதற்கு யாரும் தடை போட முடியாது. ஆனால் அப்படி ஆட்சியமைக்க முடியாது இதில் நீதி நியாயம் பார்க்க வேண்டுமெனில் இப்படிக் கேட்கலாமே. ஏன், அதற்கு முன்பு பிள்ளையான் ஆட்சி கிழக்கு மாகாணத்தில் நடக்கவில்லையா? அவருடைய ஆட்சியும் கூட இராஜபக்ச தயவினால்தானே ஏற்படுத்தப்பட்டது? அக்காலத்தில் தமிழ் அரசியல்வாதிகள் பதவியுடனும் பட்டாடோபத்துடனும் இருந்தவர்கள்தானே? ஒரு தமிழர் அப்போது முழுக்காலமும் பதவி வகித்தால் இப்பொழுது முஸ்லிம்கள் இந்த பதவிக்காலம் முழுவதும் பதவி வகித்தால் என்ன என்று தான் எதிர்க்கேள்வி போட வேண்டும். இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் போனவுடன் அடுத்த பிரச்சினையைத் தூக்கிப் போடுகின்றனர். இதுவரை மாகாணசபையின் கீழுள்ள பதவி நியமனங்களெல்லாம் முஸ்லிம் சமூகத்தினருக்கே போயிருக்கின்றன, அபிவிருத்தித் திட்டங்களும் அவர்களுக்கே செய்யப்பட்டிருக்கின்றன, இந்நிலையை நிவர்த்தி செய்ய வேண்டும் என்பதுதான் அந்தப் பிரச்சினையாகும்.



ஓர் முஸ்லிம் அரசியல் தலைமைக்குக் கீழ் அபிவிருத்தியின் நன்மைகளெல்லாம் முஸ்லிம் சமூகத்தினருக்கே செல்கின்றது என்பது ஒரு பாரதூரமான பிரச்சினையாகும். ஆனால் அதற்காக, இப்பொழுது ஒரு தமிழ் அரசியல் தலைமைத்துவம் ஆட்சியிலேறி இனி தமிழ் மக்களுக்கு நன்மைகளைத் தூக்கிக் கொடுக்க வேண்டும் என்பது அப்பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வாகாது. பொது மக்களுக்குச் செல்லவேண்டிய நன்மைகளை, தகுதியானவர்களுக்கு செல்ல வேண்டிய பதவிகளை, அரசியல் தலைவர்கள் தமது இனத்தவர்களுக்கும் வேண்டப்பட்டவர்களுக்கும் கொடுப்பது ஒரு நாகரிகமற்ற காட்டுமிராண்டிச் செயலாகும். இங்கு, அந்த அடிப்படைப் பிரச்சினையை மாற்றுவதே எங்களது அணுகு முறையாக இருக்க முடியும். இப்பிரச்சினையை ஓர் குறுகிய கால அடிப்படையிலும், பின்னர் ஒரு நீண்டகால அடிப்படையிலும் நாம் தீர்த்துக்கொண்டு போகும் தேவையிருக்கின்றது. குறுகிய கால அடிப்படையில் தீர்வு பெறுவதற்காக, இப்போதுள்ள முஸ்லிம் அரசியல் தலைமைகளுடன் இந்தப் பிரச்சினையைத் தெளிவாகவும் திறந்த முறையிலும் விவாதிக்க வேண்டும். இதுவரை இரண்டு வருட காலங்களாக கிடைக்கப்பெற்ற பதவிகளும் திட்டங்களும் யாருக்குச் சேர்ந்தன என்பது பற்றிய புள்ளி விபரங்களுடன் இப்பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டும். எழுந்த மானமாக பொதுப்படையாகக் குற்றச்சாட்டுக்களை வீசுவது ஆரோக்கியமான பேச்சு வார்த்தைகளுக்கு இட்டுச் செல்லாது. அதனால்தான் எந்த சந்தர்ப்பத்திலும் சரியான புள்ளி விபரங்கள் அவசியமாகும். தமிழ் மக்களுக்கும் நாட்டின் அபிவிருத்தியில் பங்கிருக்கின்றது என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். அப்படியானால் பாகுபாடுகளின்றி அவர்களும் நன்மைகளைப் பங்கு போட்டுக்கொள்வதற்கு என்னென்ன கொள்கைகளை கிழக்கு மாகாண சபை அனுசரிக்க வேண்டும் என்பது பற்றி பேசலாம். இது எவருமே ஏற்றுக்கொள்ளக்கூடிய, இலகுவில் தீர்க்கக்கூடிய பிரச்சினையாகும்.



அயல்வீட்டவர்: என்னங்க, உங்க வீட்டுல எப்பவும் சிரிப்பு சத்தமா கேட்டுக் கிட்டே இருக்குது? நல்ல சந்தோஷமான குடும்பமோ?

வீட்டுக்காரர்: ஆமாசார்: எம் பொண்டாட்டி எம் மேல ஏதாவது பாத்திரத்த தூக்கி வீசுவா. .எம் மேல பட்டா அவ சிரிப்பா... படாட்டா நான் சிரிப்பேன் .... ஒரே டமாசுதான் போங்க


அடுத்து நீண்டகால அணுகுமுறையில் வேலைக்கு இறங்க வேண்டும். தற்சமயம் எமக்குள்ள தேர்தல் முறையானது இனரீதியான பிரதிநிதித்துவங்களையே ஆதரிக்கும் முறைமையாகும். வாக்காளர்களை அவரவர் இனங்களுக்குள் சிறைப்பிடித்து வைத்தாகி விட்டது. விரும்பினாலும் அதனை விட்டு அவர் வெளியே வரமுடியாது. இந்த நிலையில் இனவாதம் பேசி, தமது இனத்தவர்களுக்கே சலுகைகளெல்லாம் வழங்குவதில் அரசியல்வாதிகளுக்கு நிரம்ப இலாபம் உண்டு. இப்படித்தான் அவர்கள் தங்களுக்கான வாக்கு வங்கிகளைத் தக்க வைத்துக்கொள்ளலாம். இனங்களுக்கான பிரதிநிதித்துவம் வேண்டும்தான். ஆனால் அந்தப் பிரதிநிதித்துவமே ஏனைய இனங்களுக்கெதிரான அராஜகமாக மாறக்கூடாது. இதுதான் எமது நோக்கமாக இருக்க வேண்டும். பல நாடுகளில் இதற்குப் பல்வகையான தீர்வுகளைக்கொண்டு வந்திருக்கின்றனர். ஒரு தீர்வானது, எந்த இன அடிப்படையிலான கட்சியும் தனியே ஆட்சியமைக்க முடியாது என்பதாகும். அது ஏனைய இனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளுடன் சேர்ந்தால்தான் ஆட்சியைக் கைப்பற்றலாம். பெல்ஜியத்தில் இவ்வகை போன்ற கட்டமைப்பு இருக்கின்றது. பல்லினங்கள் வாழ்கின்ற சில ஐரோப்பிய நாடுகளில் தேர்தல் தொகுதிகள் ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் ஏறக்குறைய சம அளவில் வாழும் பிரதேசங்களை இணைத்த தொகுதிகளாக உருவாக்கப்பட்டிருக்கின்றன. இங்கு போட்டியிடும் அரசியல்வாதிகள்

கட்டாயமாகவே பல இனங்களுடைய ஆதரவினைப் பெற்றால்தான் வெல்லலாம். அவ்வாறு ஒரு இனத்தவர் வென்றால், அப்பிரதேசத்தில் வாழும் மற்றைய இனத்தவருக்கான பிரதிநிதித்துவமாக அந்த இனத்தில் அடுத்த வெற்றிவாக்குகளைப் பெற்ற போட்டியாளர் தெரிவு செய்யப்படுவார். இந்த முறையில் இனத்துவ பிரதிநிதித்துவம் வழங்கப்படும் அதே வேளையில் அரசியல்வாதிகள் எல்லோருக்குமாகவும் கடமை புரிய நிர்ப்பந்திக்கப்படுவார்கள். இப்படி ஆராயப் போனால் எண்ணிறந்த தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளலாம். அவற்றைக் கண்டு பிடிப்பதற்கு நாம் புதிய விழுமியங்களுடன் புதிய சிந்தனைகளுடன் செல்லும் மக்களாக மாற வேண்டும். இப்பொழுது அரசியலமைப்புச் சீர்திருத்தங்களுக்கு ஏதுவான காலமாகிறது. தேர்தல் முறைமைகளில் இவ்விதமான சீர்திருத்தங்களையும் கொண்டுவர வேண்டுமென்று நாம் கோரிக்கை விடுகின்றகாலமும் இதுவாகும்.

தாம் எதிர்நோக்கும் ஒவ்வொரு சவாலிலும் உள்ளார்ந்த பிரச்சினைகளை இனம் காண்பதும், அவற்றிற்கான குறுகிய கால மற்றும் நீண்டகால தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதும்தான் ஒரு சிறந்த அரசியல் தலைமைத்துவத்தின் பண்பாகும். தாம் எடுக்கும் எந்த நிலைப்பாடும் இனபேதங்களுக்கும் முரண்பாடுகளுக்கும் இட்டுச் செல்கின்றதெனில், அது எதுவாக இருந்தாலும் அதனை உடனடியாகத் தவிர்க்க வேண்டுமேயொழிய அதனை வைத்து மென்று அரைப்பது ஒரு நாட்டின் மக்களின் எதிர்காலத்தினையே பாழடிக்கும் நடவடிக்கையாகும். தமது வரலாற்றின் அடிப்படையில், இலங்கைச் சமூகத்தில் தமது நிலைமையின் அடிப்படையில் முஸ்லிம் மக்கள் ஒரு குறிப்பிட்ட அரசியல் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கின்றார்கள். அதனை மாற்றுவது மாற்றாதது அவர்களின் முடிவாகும். அதனை மதித்துச் செல்லும் வகையில் தமிழ் மக்களுக்கு ஒரு பண்பான தலைமைத்துவத்தினைக் கொடுப்பது எமது அரசியல் தலைவர்களின் கடமையாகும். தமிழ் முதலமைச்சர் வேண்டும் எனப் பதட்டப்படும் கிழக்கு மாகாண மக்கள் முதலில் தமது கட்சியான கூட்டமைப்பின் தலைமைத்துவத்தினைப் பற்றித்தான் கவலை கொள்ள ஆரம்பிக்க வேண்டும்.

அக்கட்சி தன்னை ஒரு பண்புத்தரம் வாய்ந்த முதிர்ந்த கட்சியாக உருவாக்குவதற்கு என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றது? கிரமமாக கட்சி உறுப்பினர்களுடன் சந்தித்து எமது சமூகத்தினதும் அரசியலினதும் அடிப்படைப் பிரச்சினைகளைப் பற்றிக் கலந்துரையாடுகின்றார்களா? ஒரு பல்லின சமூகத்தில் ஜனநாயகக் கட்டமைப்புக்களை எவ்வாறு வலுப்படுத்தலாம் என வேறு நாடுகளின் அனுபவங்களைத் தமது கட்சித் தொண்டர்களுடன் பகிர்ந்து கொண்டு அவர்களின் கருத்தாடல்களை ஆழப்படுத்துகின்றார்களா? இனங்களின் ஒற்றுமைக்கான என்ன அரசியல் கல்வி நடவடிக்கைகளைத் தமது கட்சிக்குள்ளும் கிழக்கு மாகாண சமூகத்தினர் மத்தியிலும் அவர்கள் மேற்கொள்ளுகின்றனர்? ஒன்றுமேயில்லை. இந்த விடயத்திலும் சிங்கள அரசியல் தலைவர்களிடம் முறையிடச் சென்று எமது மானத்தை இழந்ததுதான் நடந்தது. அந்த ஒரு நடவடிக்கையிலேயே எமது சிங்கள ஆட்சியாளர்களுடனான எமது அதிகார உறவு முறையில் குறையேற்படச் செய்து விட்டோமே. இப்படியே போனால் இனவாதம் பேசித்தான் தமது அரசியலையும் அவர்கள் கொண்டு போக வேண்டி வரும். அப்படியான அரசியலைத் தொடர்ந்து தொடர்ந்து செய்வதற்கு தமிழ் மக்கள் ஒத்துக்கொள்கின்றனரா?


AGR
AGR FOREX
Currency Exchange
இலங்கை, இந்தியா, மற்றும் ஐரோப்பிய
நாடுகளுக்கு பணம் அனுப்பவும் எடுக்கவும்
US DOLLARS, EURO, POUNDS, SWISS FRANCS, RUPEES
நாணயங்களை வாங்கவும், விற்க்கவும்
Tel:- 416-261-0003 Fax:- 416-261-9592
Email: info@agrforex.com www.agrforex.com
1143 Morningside Ave., Unit #5, Scarborough, ON


ARUN BAKERY
ARUN BAKERY
TAKEOUT & CATERING
905 303 4141
சுவை மிகு இலங்கை, இந்திய
சைவ. அசைவ உணவுவகைகள்
பாண், கேக் போன்றவற்றையும்
தரமாகவும், மலிவாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
தங்கள் வீட்டில் நடைபெறும்
அனைத்து விசேட
வைபவங்களுக்கும் தேவையான
உணவு வகைகளை முன்கூட்டியே ஓடர்
செய்து பெற்றுக்கொள்ளலாம்
9699 Jane Street,
Unit 23 Maple, ON. L6A 0A4
Jane&Major Mackenzie


Ancaster, ON
Brand new 4 Bedroom home in Ancaster, open layout. 9ft ceilings. Main floor office.
Mccowan/401
Monarch Built Condo. 1+1 bedroom. Stunning Unobstructed View, Walk to STC
Mississauga
4 Bedroom Great Gulf build Home with Walkout Basment in high demand neighbourhood
Oakville
4 Bedroom house In Prestigious Pocket In Westoak Trails
I can find you the right home faster!
DINESH JEGANATHAN
Sales Representative
Cell: 647-895-3466
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife Today
Realty Ltd.,Brokerage*
talk2dinesh@live.com

மகிந்தவின் சரிவும் மைத்திரியின் எழுச்சியும்

–கேணல் ஹரிஹரன்–

நடந்து முடிந்த ஸ்ரீலங்கா ஜனாதிபதி தேர்தல்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவின் நம்பிக்கையை பொய்யாக்கியதுடன், அவருடைய நீண்டநாள் சகபாடியும் முன்னாள் சுகாதார அமைச்சருமாகிய மைத்திரிபால சிறிசேனவினால் அவர் தோற்கடிக்கப்பட்டார். தேர்தல் பேரணிகளில் மகிந்த தெரிவித்தபடி "தெரிந்த பிசாசு" ஆகிய ராஜபக்ஸவினைவிட "தெரியாத தேவைதை"யாகிய சிறிசேனவையே மக்கள் விரும்பியிருக்கிறார்கள்.

மக்களின் ஆணையை மூன்றாவது தவணையும் வெல்ல முடியும் என்கிற மிகுந்த நம்பிக்கையில், ராஜபக்ஸ தனது இரண்டாவது தவணைக் காலம் முடிவடைவதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்பே தேர்தல்களை நடத்த அறிவிப்புச் செய்தார். ஆனால் ஸ்ரீலங்காசுதந்திரக் கட்சியின் (எஸ்.எல்.எஃப்.பி) பொதுச் செயலாளரான சிறிசேன, தேர்தல்கள் அறிவிக்கப்பட்ட அன்று மாலையே அவருக்கு ஒரு சவாலாக உதயமானார்.

உத்தியோகபூர்வ முடிவுகளின்படி மைத்திரிபால சிறிசேன 3.7 விகித பெரும்பான்மையால் மிகவும் தந்திரசாலியான மகிந்த ராஜபக்ஸ வினை வென்றார், மற்றும் மொத்த 121 மில்லியன் வாக்குகளில் 51.38 வீத வாக்குகளை விருப்புரிமையாகப் பெற்றுக் கொண்டார்.

2005ல் ராஜபக்ஸ, தனது போட்டியாளரான ரணில் விக்கிரமசிங்கவைவிட மிகக் குறைந்தளவிலான 1.86 வீத பெரும்பான்மையான வாக்குகளை சுவீகரித்து ஜனாதிபதியானதுடன் ஒப்பிடுகையில் இது ஒன்றும் குறைவான செயல்திறனாகத் தோன்றவில்லை. ஆனால் ஒரு தசாப்தத்துக்குப் பிறகு ஏராளமான நிறைவேற்று அதிகாரங்களுடன் ஆட்சியில் உள்ள ஜனாதிபதி என்கிற தோரணையில் ராஜபக்ஸ தேர்தலுக்குச் சென்றார்.

2009ல் ஈழப் போரில் அவர் சம்பாதித்த வெற்றியை, தனது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு (யு.பி.எஃப்.ஏ) பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெறவும் மற்றும் இரண்டாவது தடவை ஜனாதிபதியாக வருவதற்கு 2010ல் நடந்த ஜனாதிபதி தேர்தலில் கணிசமான வெற்றியை பெறுவதற்கும் கூடப் பயன்படுத்தினார்.

இந்த முன்னேற்றங்கள் இருப்பினும், ராஜபக்ஸ வழி மாறிச் செல்வதாக தோன்றியதால் இந்த தேர்தலில் அவர் ஜனாதிபதி பதவியை இழக்க நேரிட்டது. ஆனால் அவரது தேர்தல் தோல்வி பற்றிய விவாதத்துக்கான முக்கிய காரணம், அவர் தனது சொந்தக் கட்சி மற்றும் மக்கள், குறிப்பாக பெருமளவு சிறுபான்மை மக்களின் ஆதரவை இழந்ததேயாகும்.

இரண்டுபாரிய பிறழ்ச்சிகள் - ராஜபக்ஸ குடும்பத்தினரது கைகளில் ஆட்சியின் பலம் சென்றது மற்றும் நிறைவேற்று அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தியது என்பன அவரது இரண்டாவது தவணைக் கால ஆட்சியில் குறிப்பிடத்தக்கதாக இருந்தன. 2010 முதல், தனது அதிகார அடித்தளத்தை உறுதியாக்குவதற்காக அவர் தனது பாராளுமன்ற பலத்தைப் பயன்படுத்தினார். அந்த நடவடிக்கையில், நீதிச்சேவை, தேர்தல் ஆணையம் போன்ற தேசிய நிறுவனங்களில் இடம்பெறும் நியமனங்களில் பாராளுமன்றத்துக்கு ஒரு பங்கினை வழங்குவதுடன் ஜனாதிபதியை மிகவும் பொறுப்புடமையானவராகவும் ஆக்கும் அரசியலமைப்பின் 17வது திருத்தத்தை நீர்த்துப்போகச் செய்யும் 18வது திருத்தத்தை நிறைவேற்றவும் அவர் அதனைக் கையாண்டார். ஆனால் 18வது திருத்தம் இச்சேவைகளுக்கான உறுப்பினர்களை நியமிக்க ஜனாதிபதிக்கு அளவுக்கு மீறிய அதிகாரத்தை மேலதிகமாக வழங்கியதால் மோசமான ஆட்சி காரணமாக ஏற்படும் சேதங்களை கட்டுப்படுத்த முடியாதவரானார்.



சீனாவின் இருப்பு

பொதுவாக பல பிரமாண்டமான திட்டங்கள், அம்பாந்தோட்ட துறைமுகம் மற்றும் விமானநிலைய கட்டிடத் தொகுதிகள் மற்றும் கொழும்பு துறைமுக அபிவிருத்தி போன்றவை சீனாவின் கடும் வட்டி வசூலிக்கும் கடன்கள் மூலமாகப் பெற்ற நிதியுதவியுடன் மேற்கொள்ளப் பட்டதுடன் அவற்றை சீன ஒப்பந்தக்காரர்களே நிறைவேற்றினார்கள். அவற்றில் திறந்த ஒப்பந்தக் கேள்விகள் இல்லாததால் முழு நடவடிக்கையுமே வெளிப்படைத் தன்மை குறைவானதாக இருந்தது. மேலும் அரச துறைகளிலும் பரவலான ஊழல்கள் நடத்தி அரச கஜானாவை வடிகட்டியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.



ஊழல் சம்பந்தமான குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் எதிரணியின் முயற்சிகளால் பயன் ஏற்படவில்லை. மாறாக அவர்களது ஊக்கத்தை தடுப்பதற்கு அடிக்கடி மிரட்டல்களும் மற்றும் அச்சுறுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டன. உதாரணத்துக்கு எதிர்க்கட்சியான ஐதேக வினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு அம்பாந்தோட்ட திட்டங்களில் இடம்பெற்ற ஊழல் சம்பந்தமான குற்றச்சாட்டுகளை பார்வையிடச் சென்றபோது, எஸ்.எல்.எஃப்.பி உதவி மேயரினால் பகிரங்கமாக துப்பாக்கியைக் காட்டி அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. அப்படியான விடயங்களில் இலஞ்ச ஆணைக்குழு மற்றும் காவல்துறை என்பன உடனடி கண்காணிப்பை மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கு செயலற்றவர்களாக இருந்தனர். இந்த பிறழ்ச்சிகளைப் பற்றி குறையாக எழுதிய ஊடகவியலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறும்வரை வேட்டையாடப் பட்டார்கள். காவல்துறையினருக்குப் பதிலாக இராணுவமே தொழிற்சங்க எதிர்ப்புகள் மற்றும் ஏனைய குடிசார் செயற்பாடுகளை கையாண்டதால், பொதுமக்கள் விவகாரங்களில் அதிகரித்த இராணுவமயமாக்கல் அடையாளம் காணப்பட்டது.

ஜனாதிபதியின் இரண்டு சகோதரர்களான பசில் மற்றும் கோட்டபாயா ஆகியோர், முறையே பொருளாதார அமைச்சர் மற்றும் பாதுகாப்புச் அமைச்சு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக இருந்தார்கள். பெரும்பான்மையான அரசாங்க முடிவுகளில் இவர்களின் ஆணையே செல்வாக்கு செலுத்தியதாகத் தோன்றியது.











தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளால் பெரும்பாலும் வழி நடத்தப்படும் குண்டர்கள் மற்றும் ஆளும் கட்சி அடியாட்கள் பெரும்பாலான குற்றவியல் வழக்குகள் மற்றும் எதிர்க்கட்சியின் அரசியல் கூட்டங்களுக்கு இடையூறு விளைவித்தல் மற்றும் சுயாதீன ஊடகங்களை அச்சுறுத்தல் போன்ற நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டிருந்தார்கள். தேர்தலுக்கு முந்தைய காலங்களிலும் இது நிறுத்தப்படவில்லை. ஆளும்கட்சி அடியாட்கள் முன்னாள் ஜனாதிபதியும் மற்றும் தனிமைப் படுத்தப்பட்ட எஸ்.எல்.எப்.பி தலைவருமான சந்திரிகா குமாரதுங்கவின் வீட்டை தாக்கியதுடன் சிறிசேன மற்றும் ஐதேக தேர்தல் அலுவலகங்களையும் தாக்கினார்கள். நீதிக்கும் மற்றும் சுதந்திரத்திற்குமான தேர்தலுக்கான பிரச்சாரசபை தேர்தல் தொடர்பான வன்முறைகள் பற்றிய முறைப்பாடுகளில் ஒரு சாதனையாக வன்முறை குறைவான 500 தேர்தல் முறைப்பாடுகள் உட்பட 574 முறைப்பாடுகளைப் பெற்றிருந்தது. அவற்றில் 47 வழக்குகள் தேர்தல் வன்முறை தொடர்பாக தொடரப்பட்டுள்ளது, 16 சம்பவங்கள் சுடுகலன்களைப் பயன்படுத்தியது தொடர்பானது.

ஓரங்கட்டப்பட்ட தலைவர்கள்

ஒட்டு மொத்தமாக ராஜபக்ஸ குடும்பத்தின் மகத்தான செல்வாக்கு மற்றும் அதன் ஆணவம் என்பன அதிகாரத்தில் பயன்படுத்தப்பட்டது, சிறிசேன போன்ற அநேக எஸ்.எல்.எஃப்.பி தலைவர்களை தனிமைப்படுத்தியது, முடிவுகளை மேற்கொள்வதில் அவர்கள் ஓரங்கட்டப்பட்டார்கள். தனது குழுவை வழி நடத்துவதில் தோல்விகண்டதுடன் புகழ்பெற்றிருந்த ராஜபக்ஸவின் பொதுவான தோற்றமும் சரிவடையத் தொடங்கியது, அநேகமாக இதன் காரணமாக விரக்தி நிலையிலிருந்த சிறிசேன மற்றும் கிட்டத்தட்ட 26பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஏராளமான யு.பி.எஃப்.ஏ மாகாணசபை உறுப்பினர்கள் ஆகியோர் எதிர்க்கட்சிக்குத் தாவினார்கள்.

இது சந்திரிகா பண்டாரநாயக்காவின் விசுவாசிகளுக்கு ஜனாதிபதிக்கு எதிராக போட்டியிடுமாறு சிறிசேனவுக்கு ஊக்கம் கொடுக்க ஒரு வாய்ப்பை வழங்கியது. சந்திரிகா, ஐதேக தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுடனும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுடனும் கரம் கோர்த்துக் கொண்டார், அவர்கள் தங்களது ஜனாதிபதியாகும் சொந்த இலட்சியத்தை கைவிட்டு சிறிசேனவை பொது எதிரணி வேட்பாளராக களமிறக்கினார்கள்.

ஆச்சரியப்படத் தக்க விதத்தில் கட்சியின் கட்டுப்பாட்டுக்காக கருத்து மோதலில் ஈடுபட்டிருந்த ஏனைய ஐதேக தலைவர்களும் இதன் காரணமாக சக்தி பெற்றதாகத் தோன்றியது. சிறிசேனவை பயன்படுத்தி ராஜபக்ஸவை தோற்கடிப்பதுதான் அவர்களது ஒரே இலட்சியமாக இருந்தது.

ராஜபக்ஸ மற்றும் யு.பி.எஃப்.ஏ கூட்டணியின் நீண்ட கால அங்கத்தவரான பௌத்த வலதுசாரிக் கட்சியான ஜாதிக ஹெல உருமய கூட மோசமான ஆட்சி, குடும்ப ஆட்சி மற்றும் ஊழல் பற்றிய தனது புகார்களுக்கு அவர் திருப்தியான பதிலை வழங்காததால், அவர்களும் சிறிசேனவுக்கு ஆதரவளிப்பதற்காக அவரைக் கைவிட்டு வெளியேறினார்கள்.

அவருக்கு பொதுவாகவே ஆதரவு வழங்கிவந்த முஸ்லிம் கூட்டணிகளையும் ராஜபக்ஸ நன்கு கவனிக்கவில்லை. 20 மில்லியன் சனத்தொகையை கொண்ட தீவின் சனத்தொகையில் சுமார் 10 வீதமான முஸ்லிம்கள் ராஜபக்ஸமீது கொண்டிருந்த நம்பிக்கை பௌத்த உதிரிக் குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட முஸ்லிம் எதிர்ப்பு நடவடிக்கைகளை தடுக்க அவர் நடவடிக்கைகள் மேற்கொள்ளாததினால் ஆட்டம் காண ஆரம்பித்தது. அழுத்கமவில் பொதுபல சேனாவினால் மேற்கொள்ளப்பட்ட முஸ்லிம் எதிர்ப்பு செயற்பாடுகள் விரைவாகவே பேருவலவுக்கு(கொழும்புக்கு அருகில்) 2014 ஜூன் 15ல் பரவியதால் மூன்றுபேர் கொல்லப்பட்டு, 80க்கும் மேற்பட்டோர் காயமடைந்து மற்றும் 200க்கு மேற்பட்ட முஸ்லிம்களின் வீடுகளும் உடமைகளும் எரியூட்டப்பட்டு அழிக்கப்பட்டன. 2,000க்கும் மேற்பட்டோர் வீடற்றவர்கள் ஆனார்கள். இது யு.பி.எஃப்.ஏ இல் அங்கம் வகித்த இரண்டு பிரதான முஸ்லிம் பங்காளிக் கட்சிகளான ஸ்ரீலங்காமுஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பனவற்றை ஆளும் கூட்டணியுடனான நட்பை துண்டிக்க வைத்தது. சிறிசேனவுக்கு அவர்கள் வழங்கிய ஆதரவு முழு முஸ்லிம் மக்களின் ஆதரவு வாக்குகளை அவருக்குப் பெற்றுக் கொடுத்தது.

புறக்கணிக்கப்பட்ட தமிழர்கள்

ஈழப் போருக்குப் பின்னர் ராஜபக்ஸவுக்கு சவால் விடமுடியாத அதிகார பலம் இருந்தபோதும், சிறுபான்மைத் தமிழர்களின் நீண்டகால மனக்குறையாக உள்ள அரசியல் நடவடிக்கைகளுக்குத் தீர்வுகாணும் வகையிலான ஒரு ஆரம்பத்தை ஏற்படுத்த அவர் முயற்சிக்கவில்லை. வட மாகாணசபைத் தேர்தல்கள் மூலம் மாகாணசபையை கைப்பற்றிய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் (ரி.என்.ஏ), அடிப்படைக் கோரிக்கைகளைக்கூட அவர் நிறைவேற்றவில்லை. சிறிசேன, தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பாக தனியான திட்டங்கள் எதனையும் முன்வைக்காத போதிலும் ரி.என்.ஏ ராஜபக்ஸவை அகற்றுவதற்காக சிறிசேனவை ஆதரிக்க தீர்மானித்தது, மற்றும் தமிழர்கள் அவருக்கு ஆதரவாக வாக்களித்ததால் இது அவருக்கு நல்ல பலனைக் கொடுத்தது.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டபடி சிறிசேன ஜனாதிபதியாகவும், ரணில் விக்கிரமசிங்கா பிரதமராகவும் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்கள்.



சிறிசேனவின் தேர்தல் விஞ்ஞாபனம் ராஜபக்ஸ ஆட்சியின் மூன்று பலவீனங்களை கவனத்தில் கொண்டிருந்தது. ஊழல், குடும்ப ஆட்சி மற்றும் ஜனாதிபதியும் அவரது குடும்பமும் அதிகாரத்தை தங்கள் கைகளில் எடுத்துக் கொண்டது என்பனவே அந்த மூன்று விடயங்களும். தற்போதுள்ள சர்வாதிகார நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை ஒழித்து அதற்குப் பதிலாக அமைச்சரவை மூலமாக பாராளுமன்றத்துக்கு நிறைவேற்று அதிகாரங்களை வழங்கும் ஒரு அரசியலமைப்பு முறையை ஏற்படுத்தப் போவதாகவும் அதில் வாக்குறுதி வழங்கப்பட்டிருந்தது.

100 நாட்களுக்கிடையில், தான் சகல கட்சியையும் சேர்ந்த தேசிய ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஒன்றை உருவாக்கி அவசரப் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டதின் பின்னர் பாராளுமன்றத் தேர்தல்களை நடத்தி 18வது திருத்தத்தை ரத்துச் செய்வதற்காக 19வது திருத்தம் ஒன்றைக் கொண்டுவந்து அடுத்த ஆறு வருடங்களும் தேசிய நிறுவனங்களை ஜனாதிபதியின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிப்பதற்கு சிறிசேன நம்பிக்கை கொண்டுள்ளார்.

இது ஒரு கடினமான திட்டம் ஏனெனில் புதிய ஜனநாயக முன்னணிக்கு பாராளுமன்றில் பெரும்பான்மை பலம் இல்லை. எனினும் யு.பி.எஃப்.ஏ யில் பிளவுகள் ஏற்பட்டதின் பின்னர் அதன் பலமும் குறைந்துள்ளது. எனவே அடுத்த 100 நாட்களும் சிறிசேன ஒரு கொந்தளிப்பான நேரத்தை சந்திக்கும் வாய்ப்பு உள்ளது.

அவர் வெற்றியடைவாரோ அல்லது இல்லையோ, ராஜபக்ஸவின் ஆட்சியில் இருந்து விடுதலை பெற்றதால் ஸ்ரீலங்காவில் ஜனநாயகம் வெற்றி பெற்றுள்ளது. சிறிசேன விடயங்களை ஜனநாயக முறையில் சரியாக ஒழுங்கு படுத்தி மக்களின் நம்பிக்கையை மீட்டெடுப்பாரா என்பதற்கு காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

(நன்றி: இந்தியா லீகல்)

பத்திரகாளி சோதிட நிலையம்

BADRAKALLI ASTROLOGY CENTER



Pandit Sri Hanuman

Kerala (Choddankiri)

416.846.2798

100% Guaranteed Result



The Pandith can read the Past, Present & Future by Hand prediction, name, date of birth relating to love, education, marriage, money. I will help in all problems and work with god and holy spirit. Are you suffering in silence and nobody knows your pain or sorrow, but you and god know. Well you are not alone, the holy spirit will guide you tome and convince you. I will remove and destroy all bad, witchcraft, jealously and black magic permanently with superior strength & holy given power to protect to you and your family from evil things.

கேரளாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பண்டித் **Pandit Sri Hanuman** சாஸ்திரிகள் பல இடங்களுக்குச் சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, ஜாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றையெல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒருமுறை இவரைச் சந்தியுங்கள்.

கண்ணூறு, நாவூறுக்கு வெள்ளிக்கிழமை இலவசமாக நூல் கட்டப்படும்.

- கைரேகை
- நாம நட்சத்திரம்
- கல்வி, உத்தியோகம்
- தொழில், வியாபாரம்
- இலட்சுமி வசீகரம்
- வதிவிடப் பிரச்சனைகள்
- வெளிநாட்டுப் பயணங்கள்
- நீதிமன்ற வழக்குகள்
- பெண் பிள்ளைகள் – பெற்றார் பிரச்சனைகள்
- திருமணயோகம்
- குழந்தை பாக்கியம்
- கணவன் – மனைவி ஒற்றுமையின்மை
- எதிரிகள் கண்ணூறு, நாவூறு
- சர்ப்பதோஷம்
- கர்ப்பதோஷம்
- கஷ்ட – நஷ்டங்கள்
- வாகனப் பொருத்தம்
- ஒன்றுகூடுதல்

- **Business Investments**
- **Jealousy**
- **Childless Couples**
- **Depression**
- **Worries About Loved Ones**
- **Enemy Problems**
- **Money Problems**
- **Sexual Problems**
- **Love Problems**
- **House Protection**
- **Work Problems**
- **Money Blessing**
- **Family Arguments**
- **Drinking Problems**

பிளெக் மெஜிக் அகற்றி பாதுகாப்புக் கொடுக்கப்படும்.

5215 Finch Ave. East, Unit #257, Upstairs, Scarborough ON M1S 0C2

GTA Square Mall (2nd Floor) (Middlefield & Finch)

அழியாத வடுக்கள்

கொக்கட்டிச்சோலை

படுகொலை

கொக்கொட்டிச்சோலை என்பது மட்டக்களப்பு நகரின் மேற்கே, பெருநிலத்துடன் இணைந்து மூன்று பக்கங்களிலும் வாவியினால் சூழப்பட்ட பிரதேசமாகும். கொக்கட்டிச்சோலை என்றவுடன் எமக்கு அப் பிரதேசத்தின் பெருமைக்குரிய தான்தோன்றீஸ்வரர் ஆலயமோ, அல்லது அந்த நிலத்தின் பால் வழமோ, விவசாய வழமோதான் முன்னர் எம் மனக்கண்ணில் எழும். ஆனால் இப்போதோ அங்கு நிகழ்ந்த இனப்படுகொலையே முதலில் மனதில் எழுமளவுக்கு அப் படுகொலை மிகப் பயங்கரமானது.

கிழக்கு மாகாணத்தின் நிலவமைப்பு வடமாகாணம் போலல்லாமல் ஒடுங்கிய நீண்ட நிலப்பரப்பைக் கொண்டிருக்கிறது. வாவிகள், ஆறுகள், குளங்கள், மேச்சல் நிலங்கள் எனப் பல்வேறு நிலவமைப்புகள் கிராமங்களையும் நகரங்களையும் தனித்தனியாகப் பிரித்து வைத்திருக்கின்றன. இவற்றில் மக்கள் குடியிருப்புக்கள் என்பன பெருமளவு காட்டை அண்டி இருக்கின்றன. கிராமங்களுக்கிடையில் நீண்ட இடைவெளி கொண்டதாகவும் இப் பிரதேச அமைப்பு காணப்படுவதனால் கிராமங்களை சிங்கள இராணுவமும், ஊர்காவல் படையினரும் சுற்றிவளைக்கும்போது வெளித் தொடர்புகள் அறுக்கப்பட்டுவிடுகின்றன. இன்றைய காலங்களில் உள்ளதுபோல் தொலைத் தொடர்பு வசதிகள் இவ்வாறான படுகொலைகள் இடம்பெற்ற காலங்களில் அங்கு இருக்கவில்லை. எனவே படுகொலைகள்கூட அவை இடம்பெற்று சில நாட்களின் பின்னரே வெளித்தெரிந்த சம்பவங்கள் பல உள்ளன.

1987 தை மாதம் 28ம் நாள் வரலாற்றில் மறக்கமுடியாத கோரமான படுகொலையொன்று இங்கே நிகழ்ந்தது. இப் பிரதேசத்தில் இருந்ததாக நம்பப்படும் போராளிகளைச் சுற்றிவளைக்கும் நோக்குடன் அண்மையிலிருந்த இராணுவ முகாம்களிலிருந்து, பயங்கரவாத எதிர்ப்பு இஸ்ரேலிய மொசாட் உளவு அமைப்பினால் பயிற்றுவிக்கப்பட்ட இராணுவத்தினர் சகிதம் 2000 படையினர் ஹெலிகொப்டர் உதவியுடன் கொக்கட்டிச்சோலை, மகிழடித்தீவு, முனைக்கண்டு, முதலைக்குடா போன்ற பிரதேசங்களை நேக்கி அதிகாலை வேளையில் இரு முனைகளினூடாக முன்னேறி வந்தனர். அதன்போது வலையிறவு பாலத்தினூடாக இராணுவத்தின் ஒரு பிரிவினரும் வெல்லாவெளியினூடாக இன்னொரு பிரிவினரும் முன்னேறி வந்தனர். இதன்போது இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக ஸ்ரீலங்கா அரசு அறிவித்தது.

இதனைத் தொடர்ந்து இப் பிரதேசங்கள் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டன. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திற்கும் அப் பிரதேசத்திலுள்ள நிலவுடமையாளர்களுக்கும் சொந்தமான நிலத்தில் ஹொங்கொங்கைத் தலைமையாகக்கொண்ட செரண்டிஃப் கடலுணவு நிறுவனம் அமைந்திருந்தது. இப் பண்ணையுள் புகுந்த எஸ்.டி.எப் படையினர் அங்கு பணிபுரிந்த ஊழியர்களையும் அங்கே அடைக்கலம் தேடி வந்திருந்த பொதுமக்கள் உட்பட பெருமளவான மக்களை உழவு யந்திரத்தில் ஏற்றிச் சென்று அண்மையிலிருந்த சந்தி ஒன்றில் வைத்து சகட்டு மேனிக்கு சுட்டுக்கொன்றனர். கொலையுண்டவர்களில் 4 வயதிலும் குறைந்த 7 சிறுவர்களும் உள்ளடங்குவர்.

இதன்பின் தேடுதல் என்ற பெயரில் மூன்று நாட்களாகத் தொடர்ந்த இப் படுகொலையின்போது பெருமளவு மக்கள் நோயுற்ற குழந்தைகளுடன், உணவோ நீரோ இன்றி உயிருக்கு அஞ்சி காடுகளில் வாரக்கணக்காக பதுங்கியிருந்தனர். கொல்லப்பட்ட மக்களின் உடல்களை, மட்டக்களப்பு பஸ் தரிப்பிடத்திலிருந்து கொண்டுவரப்பட்ட டயர்களில் போட்டு எரித்தனர். இப் படுகொலையின்போது சுமார் 150 முதல் 175 வரையிலானவர்கள் கொல்லப்பட்டனர். மேலும் 20ற்கு மேலான பொதுமக்கள் காணமற்போயிருந்தனர்.


இப் படுகொலைகளை ஸ்ரீலங்கா அரசாங்கம் மறுத்தது. வெளியில் கூறப்படுகின்றவாறு படுகொலைகள் எதுவும் இடம்பெறவில்லை என்றும் பொதுமக்கள் கொல்லப்பட்டிருந்தால், அவர்கள் அங்கு இடம்பெற்ற சண்டைக்கிடையில் சிக்கி மாண்டிருக்கலாம் என்றும் கூறியது.


ஆனால் செரண்டிஃப் கடலுணவு நிறுவனத்தின் பங்காளரான புறூஸ் சைர் என்பவரும் ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் ஊழியரும் இந் நிறுவனத்தின் பிரதான முகாமையாளருமான விக்டர் சந்தியாப்பிள்ளை என்பவரும் இப் படுகொலைகள் இடம்பெற்றதை உறுதிப்படுத்தியதுடன் கொல்லப்பட்டவர்களில் தமது நிறுவனத்தில் பணி புரிந்தவர்கள் 22 பேரும் உள்ளடங்குவதாக சாட்சியம் அளித்தனர். அவர்கள் இவ்வாறு உறுதிப்படுத்தியதால் கோபமடைந்த ஸ்ரீலங்கா அரசு அவர்கள் மீது அவசரகாலச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்க முற்பட்டபோது கொழும்பிலிருந்த அமெரிக்க தூதரகத்தின் அழுத்தத்துக்குப் பணிந்து அதனைக் கைவிட்டது.


இந்தப் படுகொலைகளை மட்டக்களப்பு பிரஜைகள் குழுவினரும் உறுதிப்படுத்தி பல ஆதாரங்களை வெளிக்கொணர்ந்தனர். இது நிகழ்ந்து 28 வருடங்கள் கழிந்துவிட்ட நிலையிலும் இப் படுகொலையின் பயங்கரம் பற்றி அப்பகுதி மக்கள் இப்போதும் அப்படியே விபரிப்பர். அந்தளவு ஆழப்பதிந்த காயம் அது.













FLIGHT CENTRE Associates
We'll take care of all your travel needs
• Airfares
• Cruises
• Packages
• Travel Insurance
• Business Travel
• Hotels
• Tours
• Car Rental
• Honeymoons
• Group Travel
உங்கள் அனைத்து பயணத் தேவைகளுக்கும் 15 வருடத்துக்கு மேலான அனுபவம் கொண்ட பவன் லோகா வை 416-854-5436 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளுங்கள்.
LOWEST AIRFARE GUARANTEE
We will beat any airfare quote or you fly free!
Bavan Loga | 416 854 5436
bavan.logo@flightcentreassociates.com
flightcentreassociates.com/bavanloga




GTA Square
Friends MATRIMONY
திருமணத்
✓ 5000 மேற்பட்ட பொருத்தமான வரன்கள் உங்கள் தெரிவுக்கு
info@friendsmatrimony.com
www.friendsmatrimony.com
Choose Your Life Partnar Here
Sri Lanka
Ph: 94-112-363663
No-11- 2/1, 33rd lane,
Wellawatta,
Canada
info: 647-709-1536
GTA Square
5215 Finch Ave. E. Unit 257



குடும்பப் பல் வைத்தியர்
அவசர பல் சிகிச்சை நிலையம்
முழுக் குடும்பத்திற்குமான பல் வைத்தியம்
• கிளிப் போடுதல்
• முரசு கரைதலை நிறுத்துதல்
• பல் வேர்களை அடைத்தல்
• அழகுபடுத்தும் பல் சிகிச்சை
• முதியோர் பல் பராமரிப்பு
• பற்களை வெண்மையாக்கல்
• கட்டுப்பற்கள்
• நிரந்தரமான செயற்கைப்பற்கள்
• பவுண்பல் கட்டுதல்
• குழந்தைகளுக்கான பல் சிகிச்சை
• வாய் துர்நாற்றம் அகற்றல்
• பல்அடைத்தல், ஞானப்பல் எடுத்தல்
New patients are welcome
பிரபல பல் வைத்திய நிபுணர்
DR. ஆதிகணபதி சோமசுந்தரம்
416-750-9969, 647-888-8788
2191 Warden Ave.(Warden & Sheppard)
OPEN 7 DAYS A WEEK

அண்ணாச்சி பதில்கள்



யோகன், ஏஜெக்ஸ்: இலங்கையில் மஹிந்தவை வீழ்த்தியது தமிழர்கள்தானே? இனியாவது தமிழனை மிதித்தால் என்ன கதி என்பதை சிங்களவன் புரிந்துகொள்வானா?

அண்ணாச்சி: மஹிந்தவீழ்ந்தது மகிந்தவால்தான். அவரது தரப்பினரிடையேயே அதிருப்தியை அமோகமாச் சம்பாதித்து. அங்கிருந்தே ஆபத்து வருமென்பதை அறிய முடியாதவராகவே இருந்துவிட்டார். மைத்திரி அவரது கட்சிக்குள் இருந்து உடையாவிட்டால், அவர் உடைத்த வாக்குகள் மகிந்தவசம் இருந்திருந்தால், தமிழரின் வாக்குகள் பயனற்றுப் போயிருக்கும். மைத்திரியுடன்சேர்ந்த யுஎன்பி, சந்திரிகா, ஹெல உறுமய, ஜேவிபி, முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் என்ற ஒவ்வொரு கூறினதும் வாக்குகளில் எவை குறைந்திருந்தாலும் மஹிந்த ஜெயித்திருக்கலாம். அதுபோல் தமிழ் வாக்குகள் இல்லாவிட்டாலும் மகிந்த ஜெயித்திருக்கலாம். அதனால் தமிழ் வாக்கால் மட்டுமே அவர் தோற்றகடிக்கப்டார் என்று கூறமுடியாது. அப்படி வீழ்த்த முடியுமாயிருந்தால் கடந்த தேர்தலிலேயே வீழ்த்தியிருக்க வேண்டும். உண்மையில் கடந்த தேர்தலிலிருந்து இந்தத் தேர்தலில் மகிந்த 15 வீதம் சிங்கள வாக்குகளை இழந்துவிட்டிருந்தார். இந்த இழப்புத்தான் அவரின் தோல்வியின் மூலவேர். அந்த வேரை அறுத்துக்கொண்டது அவரேதான். சரி, யார் குத்தியாவது அரிசியாகிவிட்டது. இனி அரிசியை சோறாக்குவோமா, பாழாக்குவோமா?

கோகிலா, மிஸிஸாக்கா: மருத்துவக் குறிப்புகள் அடிக்கடி மாறுகின்றனவே? முட்டை நல்லதென்று நம் பாட்டி ஊட்டி ஊட்டி வளர்த்தாள். பின்னர் அது கொலஸ்ரோல் என்றார்கள். பின்னர் திரும்பவும் அது நல்லதென்றார்கள். தேங்காய்க்கும் அதே கதை. எதை நம்புவது?

அண்ணாச்சி: உலகில் அதிக காலம் வாழ்ந்த மூதாட்டி சிகரெட் பிடித்தாள். சிரரெட் பிடித்ததால் அதிககாலம் வாழ்ந்தாளென்று சொல்லலாமா இதை? ஒரு விஞ்ஞானி தவளையொன்றைப் பழக்கி "ஜம்ப்" என்றதும் பாயவைத்தார். அதன் ஒற்றைக்காலை வெட்டிவிட்டு "ஜம்ப்" என்றபோதும் அது பாய்ந்தது. அப்படியே ஒவ்வொன்றாக 3 கால்கள்வரை வெட்டிவிட்டு "ஜம்ப்" என்றபோதும் அது ஒற்றைக்காலுடன் பாய்ந்தது. இறுதியாக நான்காவது காலையும் வெட்டிவிட்டு "ஜம்ப்" என்றார். அதனால் பாய முடியவில்லை. ஆராய்ச்சி முடிவை இப்படி எழுதினார். "தவளைக்கு நான்கு கால்களும் இல்லையென்றால் காது கேட்காது!" ஆராய்சிகள் வெவ்வேறு சூழ்நிலைகளில் நிகழ்கின்றன. காலமாற்றத்துடன் சூழ்நிலைகளும் மாறுகின்றன. அதனால் இவ் ஆராய்ச்சி முடிவுகள் பொதுப்படையாக இருப்பதில்லை. விடுங்கள். ஆராய்ந்து அவ்வப்போது என்ன சொல்கிறார்களோ அதன்படி நடந்துகொண்டு போவோம். எனக்குத் தெரிந்ததெல்லாம் ஒரே பழமொழிதான். அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு! (அந்த அளவு எதுவெண்டு கேட்காதீர்கள். அளவுக்கு மிஞ்சிக் கேள்வி கேட்டால் நான் அழுதுடுவேன்!)

ராகவன், ஸ்காபுரோ: என்ன அண்ணாச்சி, உங்கள் முகவரி என்ன டைப்பென்றே பிடிபடுதில்லை. ஸீரியஸ் டைப்பா இல்லை ஜாலி டைப்பா?

அண்ணாச்சி: ஜாலியாய் இருக்கத்தாங்க எல்லோருக்கும் ஆசை "பாம்பு வந்து கடிக்கையில், பாதியுடல் துடிக்கையில் யார் முகத்தில் பொங்கி வரும் சிரிப்பு?" ஜோக்குகள், படங்கள், குட்டிக்குட்டி துணுக்குகள் எண்டு வேலைக் களைப்பால வந்தவங்களுக்கு ரிலாக்ஸ் பண்ண நிறைய விடயங்கள் சேர்த்து வைத்திருப்போம். ஆனால் சீரியஸான உலக நடப்புக்கள் திரண்டு வந்து அவற்றையெல்லாம் அடித்துச் சென்றுவிடுகின்றன. பார்ப்போம். எல்லாம் மாறும் விரைவில்!


மதன், மார்க்கம்: முகவரியே, நடுநிலை என்றால் என்னவென்று இந்த அறியாத் தமிழனுக்கு உபதேசிப்பாயா?

அண்ணாச்சி: இதோ உபதேசிக்கிறேன், கேட்பாய் மகனே! காகம் கறுப்பா வெள்ளையா என்ற கேள்வியில் கறுப்புக்கும் வெள்ளைக்கும் பொதுவாக சாம்பல் எனலாமா பிள்ளாய்? நடுநிலை என்பது சமரசமல்ல. சரியைச் சரியென்பதும் அதுவே பிழையாகும்போது பிழையென்பதும், பிழை சரியாகும்போது சரியென்று ஏற்பதும் நடுநிலையின் பண்பாகும் பிள்ளாய். அதுசரி, அந்த சரியும் பிழையும் நடுநிலைக்கு எப்படித் தெரியும் என்று கேட்டால், நான் செய்தால் சரி நீ செய்தால் பிழை என்று எடுத்துக்கொள்வாய் மகனே!



சுபா, பிரம்டன்: காதல் அட்வைஸ் என்று ரொம்ப சைக்கோலஜி பேசுறீங்களே, ஒரே கேள்வி. காதலுக்கு முதல் எதிரி யார்?

அண்ணாச்சி: இதே கேள்வியை நான் படித்த லிட்ரேச்சர் வகுப்பின் டீச்சரும் கேட்டா. ஆளாளுக்கு விழுந்தடித்துப் பதில் சொன்னோம். பெற்றோர் என்றாள் ஒருத்தி. அண்ணன் என்றாள் இன்னொருத்தி. சமூகம் என்றான் ஒருத்தன். மதம் என்றான் ஒருத்தன். எல்லாவற்றையும் நிராகரித்துவிட்டா டீச்சர். அப்போ நீங்களே சொல்லுங்கோ என்றோம். டீச்சரின் முகம் சற்று சீரியஸானது. பின்னர் இரகசியக் குரலில் சொன்னா, "அது யாருமில்ல, என்ர கணவன் தான்!"



புரட்சிதாஸன், ஸ்கார்புரோ: சீனாவும் ரஷ்யாவும் சேர்ந்து இந்தியாவுடன் கைகோர்த்தால் அமெரிக்கா என்ன செய்யும்?

அண்ணாச்சி: கைகோர்த்தால் என்ன? அமெரிக்காவுக்கு கால்தடம் போடத்தான் நன்றாய்த் தெரியுமே! சரி சீரியஸாய்க் கேட்கிறீர்கள் போலும். இந்த வியூக மாற்றம்பற்றி நாம் பின்னர் ஒரு சிறப்புக் கட்டுரையில் அலசுவோம்.

எதிரும்

எந்தவொரு
விடயத்துக்கும்
குறைந்தது இரு
மாறுபட்ட கருக்துக்கள்
இருக்கத்தான் செய்யும். எப்போதும் ஒன்று மட்டுமே
சரியாக இருப்பதில்லை. எனவே மாறுபாட்ட கருத்துக்களை
மோதவிட்டுப் பார்க்கும் இவ் "எதிரும் புதிரும்" பகுதியின்
நோக்கம் இதில் எந்தத் தரப்பினரிடமிருந்தும் கிடைக்கும் தர்க்க
நியாயங்கள் எம் கருத்துக்களைச் செழுமையூட்ட உதவும்
என்பதே. கவனிக்கவும், இத் தர்கங்கள் சர்ச்சைக்குரியவையாக
இருக்கக் கூடும். இவை எவையும் முகவரியின் சொந்தக்
கருத்தல்ல, அத்தோடு அக்கருத்துக்களுக்கு ஆதரவோ,
எதிர்ப்போ, எமக்கில்லை - அவற்றுக்குப் புறம்பாக நின்று
அவற்றை செவிமடுக்கும் மூன்றாம் தரப்பாகவே நாம்.
கருத்துக்கள் கருத்துக்கூறுபவர்களுக்கே உரியவை.
எந்தக் கருத்துக்களோடும் உடன்படுவதும்,
விடுவதும் உங்களைப் பொறுத்தது.

சுதந்திர தினத்திற்கு சம்பந்தன் சென்றது

1972ம் ஆண்டிற்குப்பின், அதாவது 43வருடங்களின் பின் தமிழரசுக் கட்சி - தழிழர் விடுதலைக் கூட்டணி - அதைத் தொடர்ந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு கடைப்பிடித்து வந்த, "இலங்கையின் சுதந்திரதின விழாவில் கலந்துகொள்வதில்லை" என்ற தமிழினத்தின் எதிர்ப்பை வெளிக்காட்டும் நிலைப்பாட்டை அவ்வழிவந்த இன்றைய தமிழ்த் தலைவரான திரு. சம்பந்தன் உடைத்துவிட்டார். அவர் தன்னிச்சையான முடிவெடுத்து இலங்கையின் சுதந்திர தின நிகழ்வில் கலந்துகொண்டிருக்கிறார். இதன்மூலம் தந்தை செல்வா தொடக்கிவைத்த இந்த எதிர்ப்புக்கான அர்த்தத்தை அவர் நிராகரித்துவிட்டார். அன்று, இத்துணை பாரதூரமான அளவு தமிழ் மக்கள் மீதான கொடுமைகள் நிகழ்த்தப்படாத நிலையிலும், இனப்பிரச்சினைக்கு இலங்கை அரசாங்கம் தீர்வைத் தரும்வரை இந் நாட்டின் சுதந்திரதினம் தமிழ் மக்களுக்கு சுதந்திரதினமில்லை என்ற கொள்கையடிப்படையில் தந்தை செல்வா சர்வதேச சமூகத்துக்கான செய்தியாக இந்தப் புறக்கணிப்பை ஆரம்பித்து வைத்தார். ஆனால் இப்போது அன்றைய நிலையிலும்பார்க்க நிலமை தீவிரமடைந்துள்ளதுடன் இந்த எதிப்புக்கான நியாயாதிக்கம் வலுவடைந்தே உள்ளது. ஆனால் அதிர்ச்சியடையவைக்கும் வகையில், திரு. சம்பந்தன் சுதந்திரதினத்தை அங்கீகரித்து, அதில் சென்று கலந்துகொண்டுள்ளார்.

தப்பு – துருபரன்

இந்த நீண்ட நெடுங்கால இடைவெளிக்குள் பல அனர்த்தங்கள் நடந்து தமிழ் மக்கள் தரப்பில் பாரிய இழப்புகள், சேதங்கள், அகதிகளாகி உலக நாடுகளெங்கும் புலம்பெயர்வுகள் என்று நிகழ்ந்து இறுதியில் எல்லாவற்றிக்கும் சிகரம் வைத்தாற்போல் மாபெரும் முள்ளிவாய்க்கால் பேரழிவும் நிகழ்ந்துள்ளது. இப் பேரழிவை தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலைதான் என்றுகூறி மிக அண்மையில் வடக்கு மாகாணசபை ஏகோபித்த தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. ஆனால் அது இனப்படுகொலை என்பதை இப் புதிய அரசாங்கம் உடனடியாக நிராகரித்துவிட்டது. இந்த நிலையில் சுதந்திர தினத்தில் சம்பந்தர் பங்குகொண்டது வலிந்த வக்காலத்தாகவன்றி வேறென்னவாகிப் போயுள்ளது? இத் தீர்மானத்தின்போது உரையாற்றிய வட மாகாணசபை முதலமைச்சர் திரு. சி. வி. விக்னேஸ்வரன், தான் உச்ச நீதிமன்ற நீதியரசராக இருந்தபோதும், அப் பதவி வகிப்பவர் சுதந்திர தினத்துக்கு சமூகம் தரவேண்டுமென்ற விதிமுறை இருந்தபோதும், தான் இதுநாள்வரை இலங்கையின் சுதந்திர தினத்துக்குச் செல்லவுமில்லை, இனிச் செல்லப் போவதுமில்லை என்று கூறியிருந்தார். முதலமைச்சரே இப்படிக் கூறியிருக்கும்போது, அவர் உள்ளடங்கிய கட்சியின் தலைமையை வகித்து, தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தின் அடையாளமாக தான் விளங்குவதையிட்டுக் கொஞ்சமும் சிந்திக்காமல் திரு. சம்பந்தன் இந்த சுதந்திரதின விழாவில் கலந்துகொண்டுள்ளார். இப்படிக் கலந்துகொள்வதன் அர்த்தம் என்வென்பது அவருக்கு நன்கு தெரியும், ஆனால் சாதாரண தமிழ் மக்களுக்கு அது ஒரு விழாத்தானே, அதில் கலந்துகொண்டதைப் பெரிதுபடுத்தலாமா என்ற எண்ணத்தில் அதை கணக்கெடுக்க மாட்டார்கள் என்று எண்ணியே இதைச் செய்துள்ளார். இப்படிக் கலந்து கொண்டதால் அவர் உலகுக்கு அறிவிப்பது என்ன? எமக்கும் அரசாங்கத்துக்கும் இப்போது அந்நியோன்யம் ஏற்பட்டு விட்டது, நாமே நமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வோம், இனி நீங்கள் இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கத் தேவையில்லை என்பதைத்தானே. இப்படி நமது தலைமையே அரசாங்கத்துக்குச் சாமரம் வீசினால் சர்வதேசம் போர்க்குற்ற விசாரணைகளை மேற்கொள்வதில் அக்கறை எடுக்குமா? இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நெருக்கடி கொடுக்குமா? இந்தியாதன்னும் தன்னுடன் இலங்கை மேற்கொண்டிருந்த இலங்கை இந்திய ஒப்பந்தத்தை மதித்து மாகாணசபைத் தீர்வைத்தன்னும் முழு மையாக வழங்குமாறு எமக்காகக் குரல்கொடுக்க உந்தப்படுமா? முன்னர் பிரேமதாசாவுடன் சேர்ந்துகொண்டு இந்தியாவை வெளியேற்றியதுபோல் இப்போது இலங்கை அரசாங்கத்துடன் நாம் சேர்ந்து நிற்கும்போது எனக்கேன் வம்பு என்று அது வாழாவிருந்துவிடாதா? நாம் இலங்கை அரசோடு கைகுலுக்கிக்கொண்டு தழிழ்நாட்டுத் தலைவர்கள் இந்திய அரசுக்கு இலங்கையை நிர்ப்பந்திக்கும் அழுத்தம் கொடுக்கும்படி கோருவார்களென எதிர்பார்க்க முடியுமா?

இப்போதென்ன எல்லாம் முடிந்து விட்டதா? புலிகள் அழிக்கப்பட்டதைத் தவிர என்ன நிகழ்ந்து விட்ட தென்று சமாதானம் வந்து விட்டதுபோல் அரசாங்கத்துக்குத் தேவையான ஒரு போலித் தோற்றப்பாட்டை உலகுக்குக் காட்டும் கென்ராக்டை சம்பந்தர் எடுத்துக்கொண்டிருக்கிறார்? இனப்பிரச்சினை க்கான தீர்வு குறித்து இலங்கை அரசின் புதிய தலைவர்கள் என்ன உத்தரவாதம் தந்திருக்கிறார்கள்? தேர்தல் விஞ்ஞாபனத்திலும் அதுபற்றி இல்லை. நூறு நாள் வேலைத் திட்டத்திலும் அதுபற்றி இல்லை. அதுபற்றிப் பேசினால் சிங்கள மக்கள் குழம்பி விடுவார்களென்பதால் அவர்கள் பேசவில்லை என்று இவர்கள் அவர்களுக்கான நியாயம் சொல்வதைத்தான் நாம் கேட்கிறோம். அப்படியானால், இதோ, அடுத்து பொதுத் தேர்தல் வரப்போகிறது. அப்படித் தேர்தல் ஒன்று வரும்போது எப்படி இனப்பிரச்சினை பற்றி தீர்வை முன்வைக்கப் போகிறார்கள்? ஒருவேளை அத் தேர்தலில் சாதகமான பாரளுமன்றப் பலம் அரசாங்கத்துக்கு கிடைக்காது போனால் எப்படி அரசியல் தீர்வைத் தரப்போகிறார்கள்? சாதகமான பலம் கிடைத்துவிட்டாலும், இனி தமிழ்த் தரப்பின் உதவி தேவையில்லை என்று உதாசீனப் படுத்த மாட்டார்களென்பது என்ன நிச்சயம்? பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம் எல்லாம் ஆசை காட்டி மோசம் செய்து கிழித்தெறியப்பட்டவைதானே? எனவே இனப்பிரச்சினையின் தீர்வுக்கான எந்த நிட்சயமான உறுதிமொழியோ, நிலைமையோ, ஏற்பாடோ இன்றி இவர் ஏன் சுதந்திர தின விழாவில் மேடையேறி தமிழ்த் தலைமை தன் 43 வருடப் புறக்கணிப்பைக் கைவிடுமளவு திருப்தியடைந்துவிட்டது என்ற அறிவிப்பை உலகுக்கு வெளிப்படுத்தினார்?

அதையே அவர்கூட தனது பேட்டியில் ஒப்புக்கொள்கிறார். "இலங்கை அரசு எந்த வாக்குறுதியும் தரவில்லை. அவர்கள் அதைத் தருவார்களென்றுகூட நான் சொல்ல மாட்டேன். ஆனால் நமக்கு நம்பிக்கை இருக்கிறது. அதனால்தான் பங்குபற்றினேன்," என்கிறார். இப்படி ஆரூடத்தனமாக முடிவு செய்வதற்கு எங்கள் இனப்பிரச்சினையா கிடைத்தது? அரசியலில் நிரந்தர நண்பனும் இல்லை பகைவனும் இல்லை என்பார்களே, அரசியலில் நம்பிக்கை வைக்க நண்பர்களல்ல அவர்கள். இங்கு சூழ்நிலைக் கைதிகள். எமக்கு ஆதாரங்கள்தான் தேவை. இந்த அவரது ஆதாரமற்ற "நம்பிக்கைக்"காக 43 வருட சங்கல்பத்தை அப்படியே தூக்கிப் போட்டு உடைப்பதற்கு எப்படித் துணிந்தார் சம்பந்தன் ஐயா? இப்படி நம்பிக்கை வைத்துத்தானே சந்திரிகா அம்மையாரோடு சம்பந்தனும் நீலன் திருச்செல்வமுமாகச் சேந்து ஒரு தீர்வுக்கான வரைவை வரைந்தார்கள்? அப்படியானால் அப்போது ஏன் இவர் சுதந்திரதினத்தில் கலந்துகொள்வில்லை. வெறும் நம்பிக்கை வேலைக்காகாது என்று தெரிந்துதானே? இல்லையேல் அப்போதிருத்த புலிகள் அமைப்புக்குப் பயந்தா? இல்லை, ஏனெனில் அந்த வரைவை சந்திரிகா 1995ல் அறிவித்தபோது, புலிகள் அதை நிராகரிக்க, இவரும் இவர் சார்ந்திருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியும் அதை ஆதரித்து அறிக்கை விட்டிருந்தார்களல்லவா. (தாமே சேர்ந்து எழுதிய வரைபை தாமே எப்படி நிராகரிப்பது..?) ஆனாலும் அது ஓரளவு அர்த்தமுள்ள வரைபுதான். இருந்தும் சுதந்திரதினத்தில் பங்குகொள்ளுமளவு ஒரு நம்பிக்கை ஒளி அவருக்கு அப்போது தெரியவில்லை. ஆனால் இப்போது தெரிந்தது எப்படி?

ம்ருதிபு

விடயம்:

இலங்கையில் புதிய அரசாங்கம் பதவியேற்றபின்னர், அங்கே தமிழ்த் தரப்பைப் பிரதிநிதப்படுத்தும் பிரதான கட்சியாகிய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமையின் அரசியல் அணுகுமுறை மாற்றங்கண்டு வருகிறது. இந்த மாற்றங்கள் மக்கள் மத்தியில், புலம்பெயர் தமிழர் மத்தியில், ஏன் அக் கூட்டமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் இதர கட்சிகள், மற்றும் முக்கியஸ்தர்கள் மத்தியில் பலதரப்பட்ட அபிப்பிராய பேதங்களைத் தோற்றுவித்துள்ளது. அதில் முக்கிய பிரச்சினையாக உருவெடுத்துள்ள விடயம் இது.72ம் ஆண்டுக்குப்பின் இலங்கையின் சுதந்திரதின விழாவில் பங்குபெற்றாது, அதை துக்கதினமாக அனுஷ்டித்து வந்த தமிழர் விடுலைக் கூட்டணியின் முடிவை மாற்றி, அதன் தொடர்சியில் வந்த இன்றைய தமிழ் தேசியக் கூட்டமைப்பைத் தலைமை வகிக்கும் திரு. சம்பந்தன் சுதந்திர தின விழாவில் கலந்துகொண்டுள்ளார். இது சரியா தப்பா?

சரியா? தப்பா?

சரி – தமிழினி

எங்கள் மக்கள் மத்தியில் எதற்கெடுத்தாலும் எதிர்க்கும் மனோபாவத்தை வளர்த்துவிட்ட சில சக்திகளே இன்று நாம் எல்லாம் இழந்து நிற்பதற்கு வழிகோலியுள்ளன. சம்பந்தன் ஐயா இலங்கை சுதந்திர தின விழாவில் கலந்துகொண்டதில் என்ன பிழை? எல்லாத் தமிழ் அரசியல்வாதிகளும் பிரிவினையை ஏற்கவில்லை என்று சத்தியப் பிரமாணம் செய்துவிட்டுத்தானே பாராளுமன்றத்துக்கென்ன, மாகாண சபைக்கென்ன, உள்ளுராட்சி மன்றங்களுக்கென்ன சென்றிருக்கிறார்கள்? அப்படியானால் எவரும் பிரிவினை பேசக்கூடாதல்லவா? அப்படிச் சத்தியப்பிரமாணம் செய்யாவிட்டால் இவற்றில் நாம் பிரதிநிதித்துவம் வகிக்க முடியாது - இது யதார்த்தம். இந்த யதார்த்தமறிந்து நாம் சத்தியப் பிரமாணம் செய்துவிட்டு அதற்கு மாறாக நடந்துகொள்கிறோம். இப்படிப் பொய்ச் சத்தியம் செய்யலாமென்பதை ஒரு அரசியல் வழியாக நாம் மறைமுகமாக அங்கீகரிக்கலாமென்றால், ஏன் சுதந்திர தின விழாவில் பங்குபற்றுவது மட்டும் கொள்கையைக் கைவிட்டதாகிவிட்டது?

83 ஜூலைக் கலவரத்தை அடுத்து இப் பிரிவினை எதிப்புச் சட்டம் கொண்டுவந்ததால் இச் சத்தியப்பிரமாணம் செய்ய இயலாது என்று கூறித்தான் ஐயா அமிர்தலிங்கத்தின் தலைமையில் அன்றைய எதிர்க்கட்சியாக இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் தங்கள் பாராளுமன்றப் பதவிகளைத் துறந்தவர்கள். ஆனால் காலமாற்றத்தோடு, ராஜதந்திரம் கருதி இப்போது சத்தியப்பிரமாணத்தை நாம் மேற்கொள்ளவில்லையா? அப்போது சட்டத்தரணியான அமரர் குமார் பொன்னம்பலம், இலங்கையில் சத்தியப்பிரமாணம் செய்தால் தமிழ் மக்களின் அரசியலில் அம்பலப்பட நேருமென அஞ்சி மலேஷியா சென்று இலங்கைத் தூதரகத்தில் சத்தியப்பிரமாணம் செய்ததும் எம் ராஜதந்திரத்தில் அடங்குமாக்கும். அத்தனை தூரம் போவானேன், அண்மையில் வட மாகாணசபையில் தமிழ் உணர்ச்சிப் பிரளயம் செய்யும் சிவாஜிலிங்கம் ஏதோ ஈழப் பிரகடனம் செய்வதைப்போல் முள்ளிவாய்க்கால் சென்று தன் சத்தியப்பிரமாணத்தைச் செய்தாரே, அவர் அந்த இறந்த வீரர்களின் ஆவிமீது செய்து கொண்ட சத்தியம் என்ன, - தான் பிரிவினையை ஏற்கமாட்டேன் என்பதைத்தானே! பிரிவினைக்காய்ப் போராடி மடிந்தவர்கள் மீதே இப்படிப் பொய்ச் சத்தியம் செய்வது ஒன்றும் தப்பில்லை, இதெல்லாம் கேலிக்கூத்தில்லை என்றால், எப்படி சுதந்திரதின விழாவில் கலந்துகொள்வது தப்பாகும்?

நாம் நிராகரிப்பு வாதத்தை எமது வறட்டுக் கொள்கையாக வைத்துக்கொண்டு, திம்புப் பேச்சுவார்த்தை முதல் இன்றுவரை வருவதெல்லாவற்றையும் ஆராயமலே நிராகரிக்கும் பழக்கத்தை பழகிவிட்டோம். அதனால் இணக்க அரசியல் பற்றி எமக்கு அரிச்சுவடியே தெரியவில்லை. இப்போதுதான் அதுபற்றி எமது வடமாகண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் நாம் இணக்க அரசியல் வழிவகையை கையாள வேண்டும் என்று கூறியுள்ளார். அப்படியானால் சுதந்திர தினத்தில் பங்குபற்றுவதும் அவ்வகை இணக்க மார்க்கம்தானே!

எல்லாக் காலத்திலும் நாம் ஒரே வழியில்தான் செல்வோம் என்று இருக்க முடியாது. காலத்துக்கேற்ப, வழிவகைகளையும் மாற்றிக்கொள்ள வேண்டும். புலம்பெயர்ந்து நின்று சம்பந்தரின் இச் செயலுக்கு எதிராக கோஷமிடுபவர்கள் யாவருமே, புலம்பெயர்ந்த நாட்டில் தங்கள் நடை உடை பாவனைகளை மட்டுமன்றி, அந் நாட்டு சட்ட திட்டங்கள், வழக்கங்களுக்கேற்ப தம்மையே மாற்றிக்கொள்ளவில்லையா? தாமெல்லாம் மாறிவிடலாம் ஆனால் எம் தலைமை மட்டும் மாற்று வழிகளை முன்னெடுக்கக்கூடாது என்று மிரட்டுவது வேடிக்கையாக இருக்கிறது. முதலில் இவர்கள் தூக்கி வீசிய மாகாணசபையை இன்று திரும்பவும் குப்பைத் தொட்டியிலிருந்து கிளறியெடுத்து, அதற்கு அதிகாரத்தைத் தா என்று கேட்பது மாற்றமில்லையா? அப்படி மாகாண சபையை சந்தடியின்றி மீண்டும் ஏற்று, அதில் தேர்தல் கேட்டு, பெரும் ஆதரவோடு வெற்றியீட்டியதை இணக்க அரசியலாக அன்றி வேறென்னவென்று கொள்வது?

புண்ணுக்கு வலியா மருந்துக்கு வலியா என்று நாம் எண்ணுவதில்லை. நாம் தான் தேடிச்சென்று நமது பிரச்சினைகளுக்காகப் பேசவேண்டும். எந்த வெளிநாடும் நீ "கண்ணக்கட்டிக் கோபம்" என்று முறைத்துக்கொண்டு நில்லு, நான் உனக்காக அரசாங்கத்தை அதட்டி தீர்வு பறித்துத் தருகிறேன் என்று தரப்போவதில்லை. பிணக்கு வழியிலிருந்து இணக்க வழிக்கு நாம் நம்மை மாற்றிக்கொள்ளாவிட்டால் எமக்கு வேறு வழியே இல்லை. எங்கள் உணர்ச்சியாளர்களின் ஆத்திரமும் முறுகலும் ஒரு "காதற்ற ஊசியையும் கடை வழிக்கு" கொண்டுவந்து சேர்க்கவில்லை.

முதலில் நாம் ஒரு அரசியல் பக்குவத்தைப் பெறவேண்டும். அது என்னவென்றால் நாம் ஒரு தலைவரைத் தெரிந்து எடுத்து எமது விடயங்களைக் முன்னெடுக்கும் பொறுப்பை ஒப்படைத்துவிட்டால், அவர் அதை தன் அரசியல் முதிர்ச்சிக்கேற்ப, இருக்கும் நிலைமைகளை ஆராய்ந்து, வெளிநாட்டு ராஜதந்திரிகளோடு ஆலோசித்து தனக்கான ஒரு மார்க்கத்தை நிர்ணயித்து முன்னெடுப்பதற்கான சுதந்திரத்தையும், அவரது முயற்சியின் பலாபலன்களை ஈட்டுவதற்கான கால அவகாசத்தையும் அவருக்கு வழங்க வேண்டும். தலைவராக்கிவிட்டு, நூலில் வைத்து ஆட்டும் பொம்பலாட்டப் பொம்மைபோல அவரை ஆட்டிப்படைக்க விளையக்கூடாது. அப்படி ஒவ்வொரு காரியத்திலும் குறுக்கிட்டு அவரைச் சந்தேகப் பார்வையுடன் கேள்வி கேட்டு முடக்க முற்படுவதானால் அவரைத் தலைவராக தெரிந்தெடுத்திருக்கக் கூடாது. உங்களுக்கு, அவரை விட்டால் வேறு தலைவரும் இல்லை. அதேவேளை அவரது அரசியல் அனுபவம், அவருக்கு சர்வதேசத் தலைவர்களிடமிருக்கும் மதிப்பு, அங்கீகாரம் எல்லாம் உங்களுக்குத்தேவை. ஆனால் அவற்றை உங்கள் நோக்கத்துக்குப் பயன்படுத்துவதுதான் உங்கள் தேவை. அதாவது நீங்கள் முறுகினால் உலகம் கண்கெடுக்காதென்பதால் அவரை முறுகவைத்து உலகுக்குக் காட்டவேண்டும். உலகத்தின் முன்னால் அப்படி முறுகப் பண்ணிவிட்டால் உலகம் உடனே ஓடிவந்து உங்களுக்கு நாடு பிரித்துத் தந்துவிடும்! போங்கையா!

இப்போது ஒரு புதிய அரசாங்கம் வந்திருக்கிறது. அது வருவதற்கு எமது தலைவர் சம்பந்தன் ஐயா தமிழ் மக்களிடம் வேண்டுகோள் விடுத்தது முக்கியமான பங்காற்றியிருக்கிறது. அதை அவர்களே தெரிவித்தும் இருக்கிறார்கள். இந்த மாற்றங்களை நாம் சாதகமாக்கிக்கொள்ள முழு முயற்சி எடுக்க வேண்டாமா? அதற்கான நல்லெண்ண சூழ்நிலையை உருவாக்குவதற்கான முயற்சிகளை எடுத்துப் பார்ப்பது எம் பக்கத்தில் இருக்கும் ஒரு அவசியமான தேவையல்லவா? நீங்கள் மட்டும் பிரேமதாஸாவுடன் கொழும்பு ஹொட்டேல்களில் தங்கிநின்று பேசியதை ஒப்புக்கொண்டு இருந்தவர்களில்லையா? அப்போது பிரேமதாஸாபோன்ற ஒரு சிங்களத் தலைவர் இதுவரை வரவேயில்லை என்று அப்பட்டமாகப் புகழ்ந்து அறிக்கை விட்டதெல்லாம் தப்பே இல்லை என்றுதானே அங்கீகாரம் வழங்கினீர்கள்? இப்போது சம்பந்தன் ஐயா அதையே செய்யும்போது ஏன் இந்த இரத்தக் கொதிப்பு? இப்படிக் கொதிப்பதும் கொடும்பாவி எரிப்பதும் எம்மை முள்ளிவாய்க்கால் அழிவிலிருந்து காப்பாற்றியதா? இல்லையே? உலகம் நீங்கள் காது கிழியக் கத்தக் கத்தத் திரும்பிப் பார்க்காமல்தானே இருந்தது? இன்னுமா நாம் முறுகி முறுகி எதுவும் ஆகப்போவதில்லை என்பது புரியவில்லை. முறுகலை விட்டுவிட்டு, சுமுகமாக எதையாவது நடத்தி முடிக்கப் பாருங்கள். கடைசி அதற்கு முயற்சிக்கவாவது விடுங்கள். ●

நிறம் மாறும் கோலங்கள்!

புலம் பெயர்ந்தோர் வாழ்வியல்

சமூக உளவளத் தொடர் - 2

டென்மார்க்கிலிருந்து
மருத்துவர் வீ. கதிர்காமநாதன்

புதிய சூழலுக்கு ஏற்ப தம்மை மாற்றிக்கொள்ளாத உயிரினங்கள் அழிந்து விடுவதுபோல் அழிந்துவிடாதிருக்க புலம்பெயர்ந்தவர்களும் தம்மை மாற்றிக்கொள்ள இசைவாக்கம் -இணைவாக்கம் அடைய வேண்டுமென்று சென்ற இதழில் பேசியபடியே இந்த இதழுக்கு வந்துவிட்டோம்.

வரும் வழியில் எம் அப்புலிங்கம் உடையாரைச் சந்தித்தேன். அடையாளமே தெரியாதபடி ஆள் அரைக்காற்சட்டையும் டீசேர்ட்டுமென பிறான்ட் உடையில் அப்படியே மாறி நின்றார். ஆளென்ன பெயரே மாறி, இப்போ "ஏப். லிங்கன்" என்று ஏதோ ஆபிரஹாம் லிங்கன்போல ஸ்டைலாச் சொல்லிக் கைகுலுக்கி, எடுத்ததுக்கும் யா.. யா.. சொல்லுறார். யாழ்ப்பாணத்தில அவர் அரைமுளம் வேட்டியும் கைத்தடியுமா, கோயில் திருவிழாக் கடலைக்காரிகளிட்ட வாடகைக்காசு வாங்கிறதுக்குப் பச்சை தூ.. வை வெத்திலைக் குதம்பலோட சேர்த்துத் துப்பிய காட்சிகள் கண்ணுக்குப் பின்னால ஓட முன்னால நிக்கிறவரை நம்பமுடியாமல் பார்த்தன். ஸ்காபுறோ முழுக்க ஒரே தமிழ்க் குப்பையாம். தான் மார்க்கத்தையும் மதிக்கிறதில்லையாம், அதைக் கடந்து அங்கால வெள்ளைக்காரர் கொல்ஃப் விளையாடுற ஏரியாவிலதான் வீடுவாங்கியிருக்கிறாராம். நைஸ் பீப்பிளாம். வரிக்கு வரி இங்கிலீசிலதான் பேசிறார், சப்பை ஜோக்கெண்டாலும் இங்கிலீஸ் ஜோக்கெண்டால் "ஓ மை கோட்" சொல்லிச் சிரிக்கிறார். கையில டொரென்டோ ஸ்டாரை ஆட்டியபடி கனேடியன் பொலிடிசன் எல்லாரையும் குளோஸ் ஃபிறெண்ட்ஸ் மாதிரி "திஸ் கெய், தட் கெய்" போட்டுக் கதைக்கிறார்.

இப்படியாக மாறிவிடும் ஆட்களை கரைதலாக்கத்துக்கு (Assimilation) உள்ளானவர்கள் என்று சமூகவியல் அறிஞர்கள் கூறுவர். அதாவது, ஒருதுண்டு கற்கண்டை தண்ணீருக்குள் போட்டால் அது தண்ணீரில் கரைந்து தண்ணீர்பேலவே தோன்றமல்லவா. அதுபோல இவர்களும் தங்கள் இனத்துக்குரிய அடையாளங்களைத் துறந்து புலம்பெயர்ந்த நாட்டு மக்கள்போல மாறிவிட விரும்புவர். இது இங்கே, கனடாவுக்குப் புலம் பெயர்ந்த ஈழத் தமிழர் கனடாக் கலாசாரத்தால் அதிகமாக ஈர்க்கப்பட்டு, அதற்குள்ளேயே சென்று ஒன்று கலத்தலாகும். அதாவது கனடாவின் கலாசாரம் தமக்கு அடையாளம் தந்து அன்பாகப் பண்பாகப் பராமரிக்கின்றது. அவர்கள் உலகில் பல துறைகளில் முன்னணியில் இருக்கிறார்கள். ஆங்கிலமே கிட்டத்தட்ட உலக மொழியாகவும் நவீன அறிவியலின் மொழியாகவும் சிறந்து விளங்குகின்றது. ஊரிலிருந்து வெயில் காய்ந்து, வியர்வை சிந்தி கஸ்ட்டப்பட்டு எதுவித பிரயோசனமும் கிடைக்கவில்லை. போதாததற்கு தமிழ்ப் பேசும் காரணத்தாலேயே எல்லா வாய்ப்புகளையும் உரிமைகளையும் இழந்தோம். நாடோடிகளானோம். யாருக்கும் விருப்பமற்றவர்களானோம். இப்போது எங்களுக்குப் பேரதிடம் கிடைத்துள்ளது. இனி நாம் "கனேடியர்கள்." தமிழரென்று உச்சரிக்கவே நா கூசுகிறது. எதனால் எம் எதிர்காலச் சந்ததிகள்கூட தமிழ் கற்றுக்கொள்ளவோ, தமிழர் என்று எண்ணவோ விடக்கூடாது. எல்லாம் "கனடா" எல்லாம் ஆங்கிலம். நாம் "மறுபிறவி" அல்லது "புதுப் பிறப்பு" எடுத்துள்ளோம். இந்தக் கற்பனைக்கு எட்டாத விடயத்தை நனவாக்கி வாழவைத்த கனேடிய கலாசாரத்திற்கு "ஏழு பிறப்பிலும்" கடமைப்பட்டவர்களாக இருப்போம். "தமிழ் மறப்போம்," "தமிழ் நினையோம்," "தமிழ் சிந்தியோம்" என்ற கோஷங்கள் அவர்களின் மனதில் ஓங்கி ஒலிக்கின்றன. பெரும்பாலும் இவர்கள் தங்களைப்போன்ற அபிப்பிராயம் உள்ளவர்களுடன், நண்பர்களுடன், குடும்பத்தவர்களுடன் "முறிந்த, நொருங்கிய ஆங்கிலத்தில்" பெமைாக, சத்தமாக கதைப்பதில் நாட்டமுள்ளவர்களாக காணப்படுவர்.

வீட்டிலுள்ள பாவனைப் பொருட்களிலிருந்து, ஆடம்பரப் பொருட்கள் வரை, தொலைக்காட்சி சேவைகளிலிருந்து கதைக்கும் விடயதானம் வரை, பேச்சு- நடை- உடை- பாவனையிலிருந்து பிள்ளை வளர்ப்புவரை, கனேடிய ஆங்கில மோகம் பகட்டாய்த் தொனிக்கும். அதாவது தேனுக்குள் மூழ்கிய எறும்பு மாதிரி, போதை தலைக்கேறி, மற்றைய தமிழர்களைக் கேலியாய்ப் பார்ப்பதிலிருந்து நையாண்டி பண்ணுவதுவரை செய்வர். இந்த ஒட்டுமொத்தப் போக்கில் "ஈழத் தமிழர் அடையாளங்களை" கைவிட்டுவிடுவர். இந்தப் போக்கையே "கரைதலாக்கம் - (Assimilation)" என்ற இணைவாக்க மாதிரி விளக்குகின்றது.

இத் தொகுதி மக்களின் பெரிய கவலை, தமது தமிழ் அடையாள உடலின் "சாமுத்திரிகா லட்சணத்தை" மாற்ற முடியவில்லையே என்பதே. இந்தவகை இணைவாக்கத்தைப் பின்பற்றுவோரை தேங்காய்க்கு ஒப்பிடுவர். அதாவது தேங்காய் புறத்தே மண்நிறம் பொருந்தியதாக இருந்தாலும் அதன் உட்புறம் வெள்ளை. இதுபோலவே, இந்தவகை இணைவாக்க செயற்பாட்டின் பெறுபேறு அமைகிறது என்பர். தமிழ் உடம்பினுள் "வெள்ளைக் கனேடியர்களாக" வாழ்கின்றனர்.


கரைதலாக்கம் போன்று நான்கு வகை "இணைவாக்க மாதிரிகள்" அறிஞர்களால் முன்வைக்கப் பட்டுள்ளன. இணைவாக்கம் என்பது ஒரு நாட்டில் இருக்கின்ற நிலைமைகளுடனும் சமூகங்களுடனும் அந் நாட்டுக்கு குடிவரும் புதிய சமூகங்கள் இணைந்துகொள்ளும் விதங்களாகும்.

"அ" என்ற ஒரு சமூகம் அல்லது நாடு இருப்பதாக எடுத்துக் கொள்வோம். அச் சமூகத்தில் வாழ "ஆ" என்ற புதிய மக்கள் தொகுதி வருவதாகக் கற்பனை செய்து கொள்வோம். இந்த இரு மக்கள் தொகுதிகளும் சந்திக்கும்போது பின்வரும் நான்குவகை இணைவு நடக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் உருவாகின்றன.

1. கரைதலாக்கம் (Assimilation) - முன்னர் நாம் பார்த்தது
2. தனியாக்கம் (Segregation)
3. ஓரங்கட்டலாக்கம் (Marginalization)
4. பல் கலாசார இணைவாக்கம் (Multi-Cultural Integration)

தனியாக்கம் (Segregation)

தனியாக்கமானது கரைதலாக்கத்துக்கு நேர் எதிர்ப் போக்கு எனலாம். இவர்கள் கிணற்றுள் போட்ட கல்லுப் போல, அங்கிருந்து வந்த சடங்குகள் சம்பிராதயங்களைக் கட்டிப்பிடித்துக்கொண்டு, மாறாமல் அப்படியே இருப்பார்கள். இவர்களைப் பொறுத்தவரை "காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்ற மனப்பாங்குடன் தமது கலாசார விழுமியங்களை "கல்தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு முந்திய தமிழ் விழுமியங்கள்" என்ற தொனியில் தமது தமிழ் மொழி காலாசாரத்தின் பழமையைப் பற்றி இறும்பூதி நிற்பர். கனேடிய நவீன கலாசார அம்சங்களை அருவருக்கத்தக்க விலங்குவகைக் கலாசாரமாகத் தரக்குறைவாகப் பார்ப்பர். அடுத்த இதழில் இத் தனியாக்கம் பற்றி ஆழமாக ஆராய்ந்துகொண்டு தொடர்வோம்.




ஸ்காபுறோ முழுக்க ஒரே தமிழ்க் குப்ப...
நான் மார்க்கத்தையும் மதிக்கிறதில்ல...



ஆஸ்காரும் அரசியலும்


உண்மை பொய் சரி பிழை எது என்ற கேள்விகளுக்கப்பால் ஆஸ்கார் விருது வைபவங்களை அரசியலுடன் தொடர்புபடுத்துவதென்பது நடந்து கொண்டே இருக்கிறது. ஆஸ்கார் வருதுக்களுக்காக வாக்களிப்போரில் யார் யார் அடங்கியிருக்கிறார்கள் என்பது இதுவரை தெரியாத புதிராகவே உள்ளது.

ஆஸ்கார் விருதுகளைத் தீர்மானிப்பவர்களில் "இலுமனாட்டி" (Illuminati) என்ற உலகை பின்னணியிலிருந்து ஆழுவதாக கருதப்படுகின்ற சிறிய அதிகாரமிக்க குழுவுக்குப் பங்குண்டு என்பது பரலது அபிப்பிராயம். இறுதியாக 87 ஆவது ஆஸ்கார் விருதுக்காக வடிவமைக்கப்பட்ட ஆஸ்கார் சின்னம் இலுமினாட்டி சின்னத்தை ஒத்திருக்கிறது என்றும் இது ஆஸ்காரில் இலுமினாட்டியின் ஆதிக்கத்தைக் காட்டும் ஒரு இறுதி விடயம் என்றும் பலர் சொல்கிறார்கள். எது எவ்வாறாயினும் ஆஸ்கார் விருது வைபவங்களில் அரசியல் வெளிப்படையாக வெளிப்பட்ட பல சம்பவங்கள் உண்டு. அவற்றில் சில:



மார்ச் 27, 1973 (45வது ஆஸ்கார்)

"கோட் ஃபாதர்" திரைப்படத்துக்காக, இரண்டாவது தடவையாக கிடைத்த சிறந்த நடிகனுக்கான ஆஸ்கார் விருதை புறக்கணித்தார் மார்லன் பிராண்டோ. தன் சார்பாக பூர்வீக குடிமக்களின் உரிமைகளுக்காகப் போராடும் செயற்பாட்டாளரான சச்சீன் லிட்டில்ஃபாதர் என்ற பெண்ணை அனுப்பி பூர்வீக குடிமக்களிற்கு எதிராக அமெரிக்க சினிமா கீழ்த்தரமாக சித்திரிப்பதற்கு கண்டனம் தெரிவித்தார். அமெரிக்க அரசாங்கம் பூர்வீக குடிமக்களோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தை முழுமையாக நிறைவேற்றக் கோரியும், ஊழலும் துஷ்பிரயோகமும் மேற்கொண்டுவந்த ரிச்சேர்ட் வில்சன் என்ற பழங்குடிகளுக்கான பிரதிநிதியை பதவி நீக்கக் கோரியும் இப் போராட்டத்தை அவர்கள் நடத்தினர். 1890ல் பழங்குடியினருக்கு எதிரான படுகொலை நிகழ்ந்த இடமான வூண்டட் நீ என்ற (காயமுற்ற முழங்கால் என்ற காரணப் பெயர் கொண்ட) இடத்தை ஆக்கிரமித்து ஒகாலா சியொக்ஸ் இனத்துப் பூர்வீகக் குடிமக்கள் நடத்திய இப் போராட்டத்துக்கான ஆதரவையும் அவர் தெரிவித்தார். இவ் வேளையில் சினிமா உலகில் உன்னத ஸ்தானத்தில் போற்றப்பட்ட மார்லின் பிராண்டோ இப்படித் தனது எதிர்ப்பைத் தெரிவித்தது முழு உலகையுமே திரும்பிப் பார்க்க வைத்தது. இதன்பின் 71 நாட்கள் நடைபெற்ற ஒகாலா இனத்தவரின் போராட்டம் அமெரிக்கக் காவற் படைகளின் தாக்குதலால் முறியடிக்கப்பட்டது. மூவர் கொலையுண்டனர்.



ஏப்ரல் 3, 1978 (50வது ஆஸ்கார்)

பிரித்தானிய நடிகையான வனீசா ரெட்கிறேவ் இற்கு "ஜுலியா" திரைப்படத்தில் இரண்டாம் உலகப்போரில் நாஸி ஜேர்மனியர்களால் கொல்லப்பட்ட பெண் பாத்திரத்தில் நடித்ததற்காக சிறந்த நடிகைக்கான ஆஸ்கார் விருது வழக்கப்பட்டது. இவர் பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு ஆதரவு தெரிவித்து டாக்குமென்டரி படமொன்றைத் தயாரித்ததற்கு எதிராக யூத டிபென்ஸ் லீக் அமைப்பைச்சார்ந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அவரது கொடும்பாவியை எரித்தனர். அங்கு அவர் உரையாற்றும்போது ஒரு சிறிய யூத ஆர்பாட்டக் குழுவினால் பாசிசத்துக்கு எதிரான போராட்டம் களங்கப்படுத்தப்படுவதாக சாடினார். இதற்குப் பதிலளித்துப் பேசிய திரைக்கதை எழுத்தளரான பாடி செயஃப்ஸ்கி- அகாடமி விருது நிகழ்ச்சிகளை தமது பிரசாரத்துக்கு பயன்படுத்துபவதைக் கேட்டுக் கழைத்துப்போய்விட்டதாகவும், வனீசா ரெட்கிறேவ் இச் சந்தர்ப்பத்தை தனது அபிப்பிராயங்களைப் பறைசாற்றும் ஒரு வரலாற்று நிகழ்வாக கருதாமல் வெறும் "தாங் யூ" சொல்லியிருந்தால் போதும் என்றார்.

மார்ச் 29, 1993 (55ம் ஆஸ்கார்)

இம்முறை சிறந்த திரைப்பட எடிட்டிங்குக்கான ஆஸ்கார் விருதை வழங்கச் சென்ற பிரபல டைக்டரும் நடிகரும் திரைக்கதை எழுத்தாளரும் தயாரிப்பாளருமான டிம் ரொபின்ஸ் மற்றும் அவரது மனைவி சுசன் சாரன்டன் ஆகியோர் அச் சந்தர்ப்பத்தை அமெரிக்கா எச்ஜவி மற்றும் எயிட்ஸ் நோயால் பீடிக்கப்பட்ட ஹெயிட்டியர்களை பராமரிப்பு என்ற பெயரில் அடைத்து வைத்திருக்கும் தடுப்பு முகாம்களை மூடிவிடும்படி குரல்கொடுக்க பயன்படுத்திக்கொண்டார். அன்றைய தினத்தில் விருது வழங்கும் நிகழ்ச்சி நடத்துனராக பங்குபற்றிய அமெரிக்க நடிகர் ரிச்சேர்ட் கேரே, திபெத் மீதான மனித உரிமை மீறல்கள்களுக்காக சீன அதிபர் டென் ஸியா பெங் கைத் தாக்கிப் பேச இம் மேடையைப் பயன்படுத்திக்கொண்டார். (அவரது சீன எதிப்புக்காக சீனா ஏற்கெனவே அவருக்கு பிரவேசத் தடை விதித்திருந்தது.)

மார்ச் 21, 1999 (71ம் ஆஸ்கார்)

மார்லன் பிரான்டோ போன்ற மாபெரும் நடிகர்களை ஹாலிவூட் திரையுலகுக்கு அறிமுகப்படுத்திய பழம் பெரும் டைரக்டரான இலியா கஸனுக்கு கௌரவ ஆஸ்கார் விருது வழங்கப்பட்டபோதும் அரசியல் சர்ச்சை கிளர்ந்தது. 1934-36 வரையான அவரது இளமைக் காலத்தில் அமெரிக்க கம்யூனிச கட்சியில் இருந்த இவரை 1952ல் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து அக்காலத்து கம்யூனிஸ்டுகளைக் காட்டிக்கொடுக்கும்படி அமெரிக்க அதிகாரிகள் நிர்ப்பந்தித்தபோது முதலில் மறுத்தாலும் இயலாதபட்சத்தில் 8 முன்னாள் கம்யூனிஸ்டுகளைக் காட்டிக்கொடுக்க நேர்ந்தது. இதனால் அவரை மன்னிக்க முடியாத எதிர்ப்பாளர்கள் விருது வழங்கக்கூடாதென குரல் கொடுத்தனர். எனினும் ஸ்டீபென் பீல்பேர்க் போன்ற முன்நிலை டைரக்டர்களின் கரகோஷத்துடன் அவருக்கு விருது வழங்கப்பட்டது.

மார்ச் 23, 2003 (75வது ஆஸ்பார்)

இது நிகழ்ந்தது அமெரிக்க நேசநாடுகள் சகிதம் ஈராக்குக்குள் படையெடுத்து நான்கு நாட்களின் பின் நிகழ்ந்த ஆஸ்கார் விருது விழாவில். அங்கே சர்ச்சைக்குரிய திரைப்படத் தயாரிப்பாளரான மைக்கல் மூர் அரங்கம் அதிர சத்தமிட்டு அன்றைய அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷிற்கு எதிராக உரையாற்றினார். "வீ ஆர் எகைன்ஸ்ட் திஸ் வோர் மிஸ்டர் புஷ், மிஸ்டர் புஷ் ஷேம் ஒன் யூ..." என்று கோஷித்தார். அரங்கம் களேபரமானது.



பெப்ரவரி 29, 2004 (76ம் ஆஸ்கார்)

அமெரிக்காவின் வியட்நாம் மீதான ஆக்கிரமிப்பு யுத்தம் தொடர்பான "ஃபொக் ஒஃப் வோர்" ஆவணத் திரைப்படத்திற்கான ஆஸ்கார் விருதை வென்ற எரோல் மொறிஸ், இப்படி உரையாற்றினார். "நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் இந்த நாடு வியட்நாமின் எலி வளைக்குள் சென்று மில்லியன் கணக்கானோரின் மரணத்துக்கு வழிசமைத்தது. இப்போது நாம் மீண்டும் ஒரு எலிவளைக்குள் நுழையத் தலைப்பட்டிருக்கிறோமா என்று அஞ்சுகிறேன். முக்கள் நின்று யோசித்து எனது இப் படத்தில் உள்ள கருத்துக்கள் சிலவற்றை பிரதிபலிக்க முன்வந்தால் நான் இங்கு ஏதோ சில நல்ல காரியம் செய்திருக்கிறேன்."

பெப்ரவரி 27, 2011 (83ம் ஆஸ்கார்)

"இன்சைட் ஜொப்" சிறந்த ஆவணத் திரைப்படத்துக்கான விருதை வென்ற திரைப்படத் தயாரிப்பாளர் சார்ஸ் ஃபேர்கசன் மேடையில் கூறினார் இப்படி. "பாரிய மோசடியினால் ஒரு பயங்கரமான நிதி நெருக்கடி ஏற்பட்டு மூன்று வருடங்கள் ஆகியும்கூட ஒரு நிதித்துறை அதிகாரிதன்னும் இதுவரை சிறைக்கு அனுப்பப்படவில்லை. இது தப்பு."

பெப்ரவரி 26, 2012 (84ம் ஆஸ்கார்)




"ஏ செப்பரேஷன்" திரைப்படம் மூலம் சிறந்த பிறமொழித் திரைப்படத்துக்கான ஆஸ்கார் விருதை வென்று முதலாவது ஈரானுக்கான ஆஸ்கார் விருதினைப்

பெற்ற டைரக்டர் அஸ்க்ஹர் ஃபர்ஹாடி, உலக அரசியலின் புழுதியில் மூழ்கடிக்கப்பட்ட பெருமைமிக்க புராதன ஈரானிய கலாசாரத்தையும் ஈரானிய மக்களையும் மெச்சி, தன் நாட்டு மக்கள் பகமையையும் வெறுப்பையும் நிராகரிப்பவர்கள் என்று தெரிவித்தார். இது ஈரான் பற்றிய அமெரிக்க சித்தரிப்பை மறைமுகமாக மறுப்பதாக அமைந்திருந்தது.

மார்ச் 2, 2014 (86ம் ஆஸ்கார்)

சிறந்த துணை நடிகருக்கான ஆஸ்கார் விருதை வென்ற ஜாரெட் லெட்டோ, அதனை அரசியல் அனர்த்தங்களுக்குள் சிக்கியிருக்கும் உக்ரைன் மற்றும் வெனிசுலா மக்களுக்கு சமர்ப்பணம் செய்தார். "இன்றைய இரவைப் பார்த்தபடி உலகெங்கிலும் கனவில் மிதக்கும் மக்களே, உக்ரேனிய மற்றும் வெனிசுலா மக்களின் கனவுகள் மெய்ப்பட வேண்டுமென நாம் சொல்வோம்" என்று சொல்லியபடி. அப்போது ரஷ்யா கிறிமியாவைக் கைப்பற்றியிருந்தது. வெனிசுலாவில் ஜனாதிபதி நிக்கலஸ் மாடுரோக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்துகொண்டிருந்தன.



எங்கும் புகுந்துவிடும் அரசியல் ஆஸ்காரை மட்டும் விட்டுவைக்குமா என்ன!

2015 OSCARS

உலகமே எதிர்பார்த்த ஹொலிவுட் திரையுலகின் மிக உயரிய கௌரவமாகக் கருதப்படும் ஒஸ்கார் விருது வழங்கும் விழா அண்மையில் நடைபெற்று முடிந்துள்ளது. இது 87வது ஒஸ்கார் விழா. அமெரிக்காவின் லொஸ்ஏஞ்சல்ஸ் நகரில் அமைந்துள்ள டொல்பி தியேட்டர் அரங்கில் நடைபெற்றது.

ஹொலிவுட் திரைப்படத் தொழிலை கடுமையாகக் கேலி செய்து சித்தரிக்கும் படமான "பேர்ட்மேன்" இந்த ஆண்டு ஒஸ்கார் விருதுகளில், சிறந்த திரைப்படம் மற்றும் சிறந்த இயக்குநர் விருதுகளை வென்றுள்ளது.

பேர்ட்மேன் படத்துக்கு மொத்தம் நான்கு விருதுகள் கிடைத்தன. இந்தப் படத்தின் இயக்குநர் அலெஜண்ட்ரோ ஜி இனாரிட்டு அமெரிக்காவுக்குக் குடியேறிகளின் பங்களிப்பைப் பற்றி பாராட்டிப் பேசினார். இவர் மெக்ஸிகோ நாட்டைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறந்த நடிகருக்கான ஒஸ்கார் விருது, பிரிட்டனைச் சேர்ந்த எட்டி ரெட்மேய்னுக்குக் கிடைத்தது. அவர் "தி தியரி ஒப் எவெரிதிங்" (The Theory of Everything) என்ற படத்தில் பௌதிக விஞ்ஞானி ஸ்டீபன் ஹாக்கிங் காக நடித்ததற்காக இந்த விருதைப் பெற்றார். "ஸ்டில் அலிஸ்" (Still Alice) என்ற படத்தில் அல்ஷைமர் நோயால் பாதிக்கப்பட்ட பேராசிரியையாக நடித்த ஜூலியன் மூர் சிறந்த நடிகைக்கான விருதைப் பெற்றார்.

ஆங்கிலமல்லாத பிற மொழிப்படத்துக்கான விருது, போலிஷ் மொழிப் படமான "இடா" வுக்குக் கிடைத்தது.

ஸ்லம் டோக் மில்லியனர் படத்திற்காக இரண்டு ஒஸ்கார் விருதுகளை பெற்று இந்தியாவுக்கும் தமிழர்களுக்கும் பெருமை தேடித் தந் இசைப்புயல் ஏ.ஆர். ரஹ்மான் இம்முறை அவர் இசையமைத்த தி ஹன்ட்ரட் புட் ஜர்னி, மில்லியன் டொலர் ஆர்ம் ஆகிய ஹொலிவுட் படங்களுக்கும், ரஜினிகாந்தை அனிமேஷன் செய்து உருவாக்கிய கோச்சடையான் படத்துக்குமாக ஆஸ்கார் விருதுக்கு சிபாரிசு செய்யப்பட்டிருந்தார்.

இருந்தும் 87வது ஒஸ்கார் விருதுக்கான சிறந்த ஒரிஜினல் ஸ்கோருக்கான பரிந்துரை பட்டியலில் ஏ.ஆர்.ரஹ்மானின் பெயர் இடம்பெறவில்லை. இதனால் அவர் ஒஸ்கார் விருதைப்பெறும் தேர்வில் இடம்பெரும் வாய்ப்பை இம்முறை இழக்க நேர்ந்தது. இது குறித்து ரஹ்மான் கூறுகையில், எனக்கு எந்தவித எதிர்பார்ப்பும் இல்லை, கடவுள் என்னிடம் அன்பாக உள்ளார் என்று நினைக்கிறேன். இது என் நீண்ட பயணத்தில் ஒரு நிறுத்தம் அவ்வளவு தான் என்றார்.

இம்முறை வெல்லப்பட்ட ஒஸ்கார் விருது பட்டியல் :-

- சிறந்த படம் - பேர்ட் மேன் (Bird man)
- சிறந்த நடிகை - ஜூலியான் மூர் (Still Alice)
- சிறந்த நடிகர் - எடி ரெட்மெய்ன் (The Theory of Everything)
- சிறந்த இயக்குநர் - எலெஜென்ட்ரோ ஜி இன்னாரிட்டு (பேர்ட் மேன்) (Bird man - Alejandro G Inarritu)
- சிறந்த தழுவல் திரைக்கதை - தி இமிடேஷன் கேம் (The Imitation Game)
- சிறந்த திரைக்கதை - பேர்ட் மேன் (Bird man)
- சிறந்த இசை - அலெக்ஸாண்டர் டெஸ்ப்லாட் (The Grand Budapest Hotel)
- சிறந்த பாடல் - 'செல்மா' படத்தில் இடம்பெற்ற க்ளோரி பாடல் (ஜான் ஸ்டீபன்ஸ், லோன்னி லின்)
- சிறந்த ஆவணப்படம் - சிட்டிசன் ஃபோர்
- சிறந்த எடிட்டிங் - டாம் க்ராஸ் (Whiplash)
- சிறந்த ஒளிப்பதிவு - இமானுவேல் லூபெஸ்கி (Bird man)
- சிறந்த தயாரிப்பு வடிவமைப்பு - The Grand Budapest Hotel
- சிறந்த அனிமேஷன் திரைப்படம் - Big Hero 6
- சிறந்த அனிமேஷன் குறும்படம் - Feast
- சிறந்த வி/வல் எஃபக்ட் - Interstellar
- சிறந்த துணை நடிகை - பாட்ரிசியா (Boyhood)
- சிறந்த ஒலி தொகுப்பு - அலன் ராபர்ட் முர்ரே, பப் ஆஸ்மன் (American Sniper)
- சிறந்த இசை கலவை - கிரெய்க் மன், பென் வில்கின்ஸ், தாமஸ் கர்லி (Whiplash)
- சிறந்த ஷார்ட் சப்ஜெக்ட் ஆவணப் படம் - கிரைஸிஸ் ஹாட்லைன்: Crisis Hotline: Veterans Press 1
- சிறந்த லைவ் அக்ஷன் குறும்படம் - The Phone Call
- சிறந்த வெளிநாட்டு மொழி திரைப்படம் - IDA (போலந்து)
- சிறந்த ஒப்பனை - மார்க் கவுலியர், ஃபிரான்ஸெஸ் ஹன்னான் (The Grand Budapest Hotel)
- சிறந்த ஆடை வடிவமைப்பு - மெலினா கெனானிரோ (The Grand Budapest Hotel)
- சிறந்த துணை நடிகர் - ஜே.கே.சிம்மன்ஸ் (Whiplash)



ஹொலிவூடை கேலிசெய்தும் வென்றது "பேர்ட் மேன்"



வெல்லப் போவது யார்?


மத்திய அமெரிக்க நாடுகளில் சோசலிச புரட்சி மூலம் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றி இன்று வரை அதில் வெற்றிகரமான பயணத்தைக் தொடர்ந்து கொணடிருக்கும் நாடு கியூபா என்றால் மிகையாகாது. சே என்ற சர்வதேசப் போராளியை உலகின் புரட்சிகர போராளிகளின் அடையாளமாக்கியதும் இந்தப் புரட்சி என்றால் அதுவும் உண்மையானது. பிடல் காஸ்ரோ என்ற மகத்தான தலைவன் நாம் வாழும் இன்றைய காலகட்டத்திலும் வாழுகின்றார் என்பதுவும் நமக்கு நம்பிகை தரும் ஒரு விடயமும் ஆகும்.



நெல்சன் மண்டேலாவின் நினைவுதினத்தில் தற்செயலாக கியூபாவின் தலைவர் ராகுல் காஸ்ரோவும், அமெரிக்க அதிபர் பராக் ஒபமாவும் சந்தித்துக் கொண்டதில் இன்றைய அமெரிக்க கியூப உறவு மலர்ந்தது என்ற கூற்றிற்கு அப்பால், வத்திக்கானின் தற்போதைய மதத் தலைவர் வணக்கதிற்குரிய அஜன்ரீனாவின் பிரான்சிஸ் இன் முன் முயற்சியனால் அமெரிக்கா கியூபா இடையே இரகசியமாக நடைபெற்று வந்த 18 மாத பேச்சுவார்த்தைகள் இந்த புதிய உறவிற்கு காரணமாக அமைந்தன என்பதுவும் பரவலாக கிலாகிக்கப்படும் விடயம். இவ் நேருக்கு நேரான இராஜதந்திர மட்டத்திலான இரகசியப் பேச்சு வார்த்தை கனடாவில் ஜுன் 2013 தொடக்கம் நவம்பர் 2014 வரை நடைபெற்றது இந்த வகையில் கனடாவின் பங்கும் இங்கு முக்கியமாக கருதப்படுகின்றது.

பாப்பரசர் பிரான்சிஸ் இன் வேண்டுகோளுக்கிணங்க இருநாட்டு அதிபர்களிடையே நேரடியாக நடத்திய 45 நிமிடம் தொடக்கம் ஒரு மணத்தியாலம் வரையிலான பேச்சுவார்தையின் இறுதியில் 50 வருடங்களாக காணப்படாத இணக்கம் ஏற்பட்டது. இதில் பாப்பரசரின் பங்கு மகத்தானது. இவர் தென் அமெரிக்கநாடான ஆஜன்ரீனாவை சேர்ந்தவர் என்பதால் அமெரிக்காவுடனான நல் இணக்கத்தில் கியூபாவை நெருங்கிவர செய்வதில் அயலவன் என்ற அன்னியோன்யம் உதவியிருக்கலாம் என்று பார்ப்பதில் சில உண்மைத் தன்மைகள் இல்லாமல் இல்லை.

இந் நேரடித் தொலை பேசி உரையாடலின் இறுதியில் கைதிகளை பரிமாறிக் கொள்ளுதல் என்பது உறவுகளை மேலும் வளர்க்க, பேச்சுவார்தைகளைத் தொடர ஒரு நல்லெண்ண சமிக்கையாக அமையலாம் என்பதற்கு இணங்க கியூப அதிபர் ராகுல் காஸ்ரோ, அமெரிக்க அதிபர் பரக் ஒபாமா இருவரும், உளவு பார்த்தார்கள் என்பதன் அடிப்படையில் சிறையில் அடைக்கப்பட்ட கைதிகள் சிலரை பரஸ்பரம் விடுவிப்பதாக ஒதே நேரத்தில் தமது நாடுகளில் அறிவித்தனர். இதில் முக்கியமானவர் 20 வருடமாக கியூப சிறையில் அடைக்கப்படடிருந்த அமெரிக்காவின் முக்கிய உளவாளி ("one of the most important intelligence agents that the United States has ever had in Cuba" என அமெரிக்க அதிபர் ஒபமாவினால் விளிக்கப்பட்ட)அலன் குறூஸ் (Alan Groos).



இருநாடுகளுக்கும் இடையே ஏற்படப்போகும் புதிய உறவுகள் பற்றி ஒபமா தனது மந்திரிகள் சபையில் தனது முடிவுகளை வெளியிட, ராகுல் தனது நாட்டு தொலைக்காட்சியில் இதனை மக்களுக்கு தெரிவித்தார். முடிவுகளை வெளியிடும் தன்மையில் உள்ள ஜனநாயக தன்மைகளை இதில் இருந்தும் புரிந்து கொள்ள முடியும். இங்குதான் கியூபா போன்ற சோசலிச நாடுகள் ஜனநாயகத்தில் மேலெழுந்து நிற்கின்றன.

சிவா. டி. ஈஸ்வரமூர்த்தி

இவை எல்லாவற்றிற்கும் மேலாக பிடல் காஸ்ரோ தனது அரச பதவியை முதுமை காரணமாக கியூபப் புரட்சியில் முக்கிய போராளியாகத் திகழ்ந்த தனது சகோதரிடம் ஒப்படைத்தார். ஆனால் அவர் அரச பதவிகளில் ஓய்திருந்தாரே தவிர தொடர்ந்தும் உலக சமாதானத்திற்காக செயற்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றார். தன்னை ஒன்பது முறைக்கு மேல் கொல்ல முயன்ற அமெரிக்காவுடனும் நட்புக்கரங்களையும் உலகசமாதானத்திற்கு முட்டுக்கட்டையாக இருக்காதீர்கள் என்ற வேண்டுகோள்களையும் சளைக்காமல் கோரிக்கையாக முன்வைத்து கொண்டுதான் வருகின்றார். அமெரிக்கா- ஈரானுடனான முறுகல் முற்றி ஈரானுக்கு எதிராக அமெரிக்கா மூர்க்கத்தனமான போர் நடவடிக்கைவரை சென்ற நிலையில், பிடல் பவ்வியமாக அமெரிக்க ஜனாதிபதி ஒபமாவிற்கு "நீங்கள் நினைத்தால் ஏற்படப்போகும் மனிதகுல அழிவை தடுத்து நிறுத்த முடியும்" என்று கடிதம் ஒன்றை எழுதி இருந்தார் என்பது மிக நல்ல உதாரணம். பிடல் காஸ்ரோவின் சமாதானத்திற்காக, போர் அற்ற சகவாழ்விற்கானஇது போன்ற தொடர்ந்த நடவடிக்கைகள் கியூபாவை தனிப்படுத்தல் என்ற அமெரிக்காவின் முனைப்பு தோல்வியுறக் காரணமாக அமைந்தன.

மேலும் அமெரிக்காவின் நாடுகளுக்கு எதிரன 'தனிமைப்படுத்தல், பொருளாதாரத் தடையை விதித்தல்' மனிதாபிமானமற்ற ஏவல் யுத்தங்கள் மற்றும் அணு ஆயுதத்தையும் விட மோசமான செயற்பாடுகளின் மூலம் தமது முதலாளித்துவ கொள்கைகளுக்கு உடன்படாத நாடுகளை இல்லாமல் செய்வதில் பாரியளவு வெற்றியைப் பெறமுடியவில்லை என்ற பாடங்களையே அவர்களுக்கு கற்றுத்தந்திருக்கின்றது. இப் பாடத்தை கற்றுக் கொடுத்ததில் கியூபாவின் முன்னாள் தலைவர் பிடல் காஸ்ட்ரோ முதன்மை இடம் பிடிக்கின்றார்.

அமெரிக்காவிற்கு கிடைத்த இந்த கசப்பான பாடம் தனது கொள்கைளை மாற்றாத அதேவேளை அணுகுமுறைகளை மட்டும் மாற்றும் நிலமைக்கு தள்ளியிருக்கின்றது என்பதில் ஐயம் இல்லை. இதனால் தான் கியூபாவுடனான உறவுகளின் பின்பு அதிபர் ஒபமா இப்படிக் கூறுகின்றார் "I'm not expecting transformation of Cuban society overnight, we can't keep doing the same thing for five decades and expect a different result.". இதே வேளை கியூப அதிபர் ராகுல் தமது பாதையில் மாற்றம் இல்லை என்பதை தெளிவாக இவ்வாறு "We carry forward, given the difficulties, with the actualisation of our economic model to build a prosperous and sustainable socialism." கூறியிருப்பது உலக மக்களுக்கு நம்பிக்கை தரும் வடையமாக அமைகின்றது

அமெரிக்காவின் கொள்கை(ள) மாற்றாத இந்த புதிய அணுகுமுறையில், நண்பனாக பழகி தமது உறவுகளை மேற்கொண்டு உள்ளூரில் உள்ள குழப்பல்வாதிகளுக்கு நிதி, ஆலோசனைகளை வழங்கி உள்ளூர் கலவரங்களை ஏற்படுத்தல். இக்கலவரங்களுக்கு காரணம் உள்ளூரில் நிலவும் மனித உரிமை மீறல், ஜனநாயகம் மறுப்புக்கள் நடைபெறுவதாக பெயர் சூட்டி இதனை சர்வதேச சமூகத்திற்கு தனது செல்வாக்கில் உள்ள செய்தி ஊடகங்கள் மூலம் பிரச்சாரத்தை மேற்கொள்ளுதல். இதன் தொடரச்சியாக உள்ளூர் கலவரங்கள் யுத்தங்கள் என்ற நிலைக்கு பரிணாமம்படுத்தி ஆயுதங்களை விற்பனை செய்தல் என்ற கைங்கரியங்களை மேற்கொள்ளும் மனித குலத்திற்கு எதிரான செயற்பாடுகள் மலிந்து கிடப்பதை நாம் சோவியத் யூனியனின் வலிந்த உடைதலுக்கு பின்பு கண்டு வருகின்றோம். இதற்கான நல்ல உதாரணம் லிபியா. 1984 வரை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு தனது நாட்டைத் திறந்து விடாத லிபியா இதன் பின்னர் திறந்து விட்டதன் பயனாக பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு உள்ளே புக வாய்ப்பானது. இன்று கடாபியும் இல்லை லிபியா என்ற நாடும் இல்லை. கடாபி காலத்து வாழ்கைத்தரமும் அமைதியும் இல்லை, உடைந்து கிடக்கும் முன்னாள் லிபியாவில்.

நண்பனாக பழகி கழுத்தறுத்தல் என்ற தந்திரோபாயத்தில் தற்காலிக வெற்றியைக் கண்டு வரும் அமெரிக்கா, கியூபா விடயத்திலும் இதுபோன்ற நடவடிக்கைகளை ஏற்படுத்த முயலாது என்பதற்கு மறுப்பு கூற முடியாது.

மத்திய, தென் அமெரிக்க நாடுகளில் ஏற்பட்ட, ஏற்பட்டுவரும் அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு நாடுகளுக்கும் இந்நாடுகளில் ஏற்பட்ட சோசலிச புரட்சிகளுக்கும் கியூபா நாட்டில் ஏற்பட்ட புரட்சியும் இதனைத் தொடர்ந்த 50 வருடங்களுக்கு மேலான வெற்றிகரமான ஆட்சி முறையும் ஒரு நம்பிக்கை விருட்சமாக விளங்கிவருகின்றது.

சோவியத் யூனியனின் வலிந்த வீழ்தல் நிலைக்கு பின்பு சிறிய நாடான கியூபா வீழ்ந்து விடும் அல்லது தடம் மாறிவிடும் என்று பலரும் எதிர்பார்த்த நிலையில் கியூபாவின் பொருளாதாரத்தை பெருமளவில் தாங்கிப் பிடித்த பெருமையும் புதிய நிலமைக்கு ஏற்ப தனது வழங்களை தமது பொருளாதாரக் கொள்கைகளை மாற்றாமல் வெற்றிகரமாக மாற்றயமைத்து செயற்பட்ட திறமையும் அதன் தலைமையைச் சாரும். அழகிய கடற்கரைப் பிரதேசங்களை சுற்றுலாத் துறைக்கு நாகரீகமான கட்டுப்பாட்டுகளின் அடிப்படையில் அனுமதித்தன் மூலமும் கரும்பு என்ற தனித்த பயிற்செய்கையை உணவுக்கு தேவையான மரக்கறிகள் தானியங்களின் உற்பத்திற்கு மாற்றியமைத்தன் மூலமும் பொருளாதார வீட்சியைத் தடுத்து வெற்றி கண்டது.

மேலும் உலகில் எந்த நாட்டிலும் காணமுடியாத அளவிற்கு தமது முன்னாள் பாரிய சிறைச்சாலையை வைதியத்துறைப் பல்கலைக் கழகமாக மாற்றியமைத்த பெருமையும் கியூபா நாட்டையே சாரும். இதன் தொடர்ச்சியாக தமது நாட்டின் வைத்திய வல்லுநர் சேவைகளை தமது நட்பு தென்னமெரிக்க நாடுகளுக்கு வழங்கி இதற்கு பிரதியுபகாரமாக, தன்னிடம் இல்லாத எரிபொருள் எண்ணையை பெற்றுவந்து பொருளாதாரத்தடை என்ற அமெரிக்காவின் கொடூர பட்டினி போடும் யுத்தத்திலிருந்து தமது மக்களை காப்பாற்றியே வருகின்றது.

முதலாளித்துவ நாடுகளில் சிறைச்சாலைகளை கட்டித்தொலைக்கும் நிலையில் கியூபாவின் இந்த நிலமை அங்கு சிறைகளின் தேவை குறைந்து வருவதையும் சிறைகளில் அடைக்கப்படுவர்களின் அளவும் குறைந்துள்ளதையே இது எடுத்தியம்பி நிற்கின்றது. ஜனநாக மறுப்பு மனித உரிமை மீறல்கள் என்று கியூபாவை குற்றச் சாட்டுவது எந்தவகையில் நியாயதிக்கம் உடையது என்று தெரியவில்லை.

50 வருட தனிமைப்படுத்தல், பொருளாதாரத்தடை என்பனவற்றை நீக்கி உறவுகளை பலப்படுத்தல் முதலீடுகள் செய்வதை அனுமதித்தல் இராஜதந்திர செயற்பாடுகளை ஏற்படுத்தல் என்பதற்கு அமெரிக்காவின் கடுங்கோட்பாட்டு குடியரசுக் கட்சியினர் எதிர்புகள் தெரிவித்த நிலையில் ஒபமாவின் அமெரிக்க நிர்வாகம் என்னவோ நல்ல நோக்கோடு நட்புக்கரம் நீட்டியுள்ளது என்று தட்டையாக இதனைப் பார்க்க முடியாது. கம்யூனிசத்தை இல்லாமல் செய்தல் என்பது அமெரிக்காவின் வேலைத்திட்களில் முதன்மையானது. அதற்கான செயற்பாட்டை தாம் தொடர்ந்தும் முன்னெடுக்கப் போகின்றார் என்று குடியரசுக்கட்சினர் போலவே ஒபமாவும் சூளுரைத்திருக்கிறார்.

கியூபாவின் சோசலிச ஆட்சிக்குப் பின்னரான 'கியூபாவைத் தனிமைப்படுத்தல்' என்ற அமெரிக்காவின் அணுகுமுறையில் என்னமோ அமெரிக்கா தனித்துப் போனதே நடைபெற்றிருக்கின்றது. கனடாவின் ட்ரூடோ கியுபாவுடன் ஏற்படுத்திய நட்புறவை உடைக்க முடியாத அளவிற்கு கியூபா, கனடாவிற்கு மட்டும் அல்லாது ஏனைய அமெரிக்க கூட்டாளி நாடுகளுக்கும் நட்பாக இருந்துவருவதில் அமெரிக்கா தனிமைப்பட்டுப் போனது என்ற பாடமே அமெரிக்காவை பாப்பரசரின் அழைப்பை ஏற்று பேசவைத்திருக்கின்றது.

அமெரிக்காவின் 'நட்புடன்' அணுகுதல் என்ற கபடத்தனமான பொறிக்குள் வீழ்ந்து விடாமல் கியூபா தனது நாட்டையும் தாம் கொண்டிருக்கும் மனித குல எழுச்சிக்கான கோட்பாட்டையும் சமநிலையில் எவ்வாறு கொண்டு செல்லப் போகின்றது என்பதை இந்த உலகமே நம்பிக்கையுடன் பார்த்துக்கொண்டுதான் இருக்கின்றது. சேயின் சர்வதேசிய பாட்டாளிவர்க்கப் புரட்சியிற்கு விலையாக அவர் தன் உயிரையும் பணயம் வைத்ததை குறைவாக மதிப்பிட முடியாது. இந்த நம்பிக்கை என்னைப் போன்ற பலரின் உள்ளங்களிலும் கனலாக எரிந்து கொண்டுதான் இருக்கின்றது.

ஆமை புகுந்த வீடும் அமெரிக்கா புகுந்த நாடும் உருப்பட்டதா சரித்திரம் இல்லை என்று ஒரு வாய்மொழி. என்னமோ போடா மாதவா!



இந்தியாவின் பட்டிதொட்டிதோறும் மளிகைக் கடைகளில் சர்வசாதாரணமாக கிடைக்கும் உணவுப்பொருள் கசகசா. ஆனால், இதை வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக வளைகுடா நாடுகள் கசகசாவுடன் வருபவர்களுக்கு கடுமையான தண்டனையை கொடுத்து வருகிறது.

சொந்த ஊரில் இருந்தவரை, மணக்க, மணக்க மசாலாவுடன் சாப்பிட்டு பழகிய இந்திய இளைஞர்கள், வளைகுடா நாடுகளுக்கு வேலைக்குச் செல்லும்போது, ஊறுகாய் பாட்டில்களுடன், கசகசாவையும் எடுத்துச் சென்றதற்காக தண்டனை விதிக்கப்பட்ட சம்பவமும் நடந்துள்ளது. இப்படி தண்டனைக் கொடுக்கும் அளவுக்கு, என்னதான் கசகசாவில் இருக்கிறது என்று ஆராய்ந்து பார்ப்போம்.

இந்திய உணவுகளில் கசகசாவுக்கு தனி இடம் உண்டு. இந்தி மொழியில் "கஸ்கஸ்" என்று அழைக்கப்படுகிறது. இது உணவுப் பொருள் மட்டுமல்ல, மருத்துவ குணங்கள் நிறைந்த மூலிகையும் கூட. கால்சியம், பொட்டாசியம், மக்னீசியம் மற்றும் இரும்பு போன்ற கனிமங்களை நிறைய அளவு பெற்றிருக்கின்றன. 'கசகசாவினால் குடற்புழு, தினவு, குருதிக் கழிச்சல், தலைக்கனம், தூக்கமின்மை போகும். அழகும் ஆண்மையும் கூடும்' என்கிறது சித்தர் பாடல்.

காரசாரமான மட்டன், சிக்கன் குழம்பு மற்றும் பிரியாணி போன்ற அசைவ உணவுகளில் ருசியைக் கூட்ட கசகசா சேர்க்கப்படுகிறது. மேற்குலக நாடுகளிலும் 'பாப்பி விதை' (Poppy Seed) என்று அழைக்கப்படும் கசகசாவுக்கு சிறப்பான மரியாதை உண்டு. பாப்பி மலர்கள் அலங்காரத்துக்காக பல்வேறு நாடுகளில் பயன்படுத்தப்படுகின்றன.

இந்த பாப்பிச் செடியில் விதைகளை தாங்கியிருக்கும் பை முற்றி, அது முழுவதுமாகக் காய்ந்த பிறகு அதிலிருந்து எடுக்கப்படுவதுதான் கசகசா. ஆனால், விதைப் பை பசுமை நிறத்தில் இருக்கும் போது, அதாவது பையில் இருக்கும் விதைகள் முழுமை அடையாமல் இருக்கும் சமயத்தில், அந்த விதைப்பையைக் கீறி அதிலிருந்து வடிகிற பாலை சேகரித்தால் அதுதான் ஓபியம்.

மதுபானம், புகையிலை, அபின், ஹெராயின், கஞ்சா, கொக்கைன், பிரவுன் சுகர் போன்று ஓபியமும் போதை தரக்கூடியது. போதைபொருள் பழக்கம் உடல் நலத்திற்கும், சமூக நலத்திற்கும் பெரும் கேடு விளைவிக்கும். இதனால் வளைகுடா நாடுகளில் தடை செய்யப்பட்டுள்ளது. கசகசாவில் போதை இல்லை என்றாலும், ஓபியம் தயாரிக்கப்படும் செடியின் விதை என்பதால், தடை செய்துள்ளார்கள். காரணம், இந்த விதையை விதைத்து, கசகசா செடியை வளர்த்து ஓபியம் எடுத்துவிட முடியும். அதனால்தான், கசகசாவுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கசகசா இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் பயிரிடப்படுகிறது. கசகசாவுக்காக பயிர் செய்யப்படும் செடிகளிலிருந்து சட்ட விரோதமாக ஓபியம் எடுப்பதும் நடக்கிறது.

இந்தியாவை பொறுத்தவரை கசகசா போதைப் பொருள் தடுப்புச் சட்டத்தின் கீழ் வரவில்லை. என்றாலும், இந்திய அரசின் நீதித்துறை, வருவாய்த்துறை மற்றும் சுங்க இலாகா இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு கசகசாவை உரிய அனுமதியின்றி எடுத்துச் செல்ல தடை உத்தரவு போடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

-ஆறுச்சாமி-

Heroes CATERING

Sri Lankan, Indian, And Canadian Cuisine

Take out & Catering



வேலை வாய்ப்பு

Sri Lankan & Indian Cooks, Cashiers தேவை

அனுபவமும் ஆர்வமும் உடைய விண்ணப்பதாரிகள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்.

தொடர்:- (416) 318 9866

50-150 பேர் வரை அமர்ந்து உண்ணக்கூடிய Party-Hall வசதியும் உண்டு.

GTA Square Mall
Finch Ave East
Scarborough
416-286-9334
416-318-9866

தற்பொழுது இரு இடங்களில்

Pharmacy & Finch
Pharmacy Ave
Scarborough
416-773-1329

THARANI LAW OFFICE

தாரணி தர்மலிங்கம் LL.B, Barrister, Solicitor and Notary Public

சட்டத்துறையில் 20 வருடங்களுக்கு மேலான அனுபவம்



Real Estate Law
Family Law
Wills and Estate Law
Power of Attorney and Affidavit
Immigration Law



வீடு, காணி உரிமைச்சட்டம்
குடும்பச் சட்டம்
இறுதி விருப்பாவணம், மரணச் சொத்துச் சட்டம்
தத்துவ பத்திரமும் சத்தியக் கடுதாசியும்
குடிவரவுச் சட்டம்

45 நிமிட இலவச ஆரம்ப ஆலோசனை

Tel: 416 291 4900
Fax: 416 291 4901
E-Mail: contact@tharanilawoffice.com

GTA Square
213 5215 Finch Ave. East, Toronto, ON. M1S 0C2

நந்தவனத்திலோர் ஆண்டி - அவன்
நாலாறு மாதமாய் குயவனை வேண்டி
கொண்டு வந்தான் ஒரு தோண்டி - மெத்த
கூத்தாடி கூத்தாடி போட்டுடைத்தாண்டி

(கடுவெளிச்சித்தர்)

ஈரானிய படங்கள் உலகையே உலுக்குகின்றன. ஈரானுக்கு தமிழ்நாடுபோல் ஆண்டுக்கு நூறு படங்கள் தயாரிக்கும் வர்த்தக சினிமாக் கடல் இல்லை. எங்களுக்கு தமிழ்நாட்டு கடல் இருக்கும் வரை அதைப் பார்த்து இரசிக்கும் சித்தனைப் போல சிந்தை கலங்கியவர்கள் இருக்கும் வரை சாத்தியமில்லை. ஒரு விமர்சகர் எழுதினார் ரஜனியும், விஜெயும், சங்கரும் தமிழ்ச் சினிமாவின் சாபக்கேடு என்று. படமெடுக்கிறவையும் எத்தனை படம் எடுக்கிறது எண்டதை விட்டிட்டு தரமாய் படமெடுக்க வேண்டும். கான்ஸ் திரைப்பட விழாவிற்கு கனடிய படங்களைத் தெரியும். ஹொலிவூட்டைத் தெரியாது.



முன்னை இட்டதீ முப்புரத்திலே
பின்னை இட்டதீ தென் இலங்கை மண்ணிலே

- இது பட்டடினத்தார் பாடலின் முதல் இரண்டு வரிகள்.

தென் இலங்கை தீ எரியாமல் வட-கிழக்கிற்கு பரவிவிட்டது. இது அங்கு மட்டுமல்ல உலகின் பல பாகங்களில் வேலி பிரிப்பிற்கான போட்டியே நடக்கின்றது. பெரியவன், பலவான் வெற்றி பெற மற்றவர் அழிந்து போகினர். பாவம் குழந்தைகள் என்ன செய்தன? அவர்கள் நிலையை விமர்சிக்கும் படமே இது. தலைப்பே "அப்பாவிகளின் குரல்கள்"

"எனக்கு பசிக்கின்றது"…சோகத்தில் குரல் தேய்ந்து ஒலிக்கின்றது.

"எனது சப்பாத்துக்குள் கற்கள் சென்றுவிட்டன"

"எனது கால் வலிக்கின்றது"

"என்னை ஏன் அழைத்துச் செல்கின்றார்கள், நான் எதுவம் செய்யவில்லையே?"
…மரண பயம் முகத்தில் தெரிகின்றது

"என்னை கொலை செய்யப் போகின்றார்கள்" …பயத்தில் குரல் நடுங்குகின்றது

இவை யாரின் குரல்கள்?

போராளிகள்! போராளிகள்! இவர்களுக்கு வயது வெறும் 11

1980-92ற்கும் இடைப்பட்ட பகுதியில் எல் சல்வடோரின் உள் நாட்டு யுத்தம் இடம் பெற்றது. இராணுவ அரசுக்கும் இடது சாரி கூட்டு முண்ணனியான Farabundo Martí National Liberation Front (FMLN) க்குமிடையில் இவ் யுத்தம் இடம் பெற்றது.

இப் போரின் போது பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் சிறுவர்களே. போர் முடிவுக்கு வந்த பின்னர் 10 வீதமான சிறுவர்களே பாடசாலைக்கு திரும்பினர். மிகப்பெரிய அளவு சிறுவர் சந்ததி இப் போரால் அழிக்கப்பட்டனர்.

"மாங்காய் பால் உண்டு மலைமேல் இருப்போர்க்குத்
தேங்காய் பால் ஏதுக்கடி"



ரொரண்ரோவில் பல வீடுகளில் சர்வதேச மாணவர்கள் வந்து தங்கிப்போவார்கள். (foreign exchange student) இதற்கு தங்கும் வீடுகளின் சொந்தக்காரருக்கு சிறிய அளவு உபரிப் பணம் வழங்கப்படும். பலர் சிறுவர்களையே விரும்புவார்கள். உயர் பாடசாலைக்கு போகும் மாணவர்களை பலர் விரும்புவதில்லை. நியுயோர்க் நகரத்தின் புற நகர் பகுதிக்கு லண்டன்-இங்கிலாந்திலிருந்து வரும் சர்வதேச மாணவியால் குடும்பத்தில் பல மாற்றங்களே நடக்கின்றது. சிதறிப்போகும் நிலைக்குச் செல்லும் குடும்பம் மீண்டும் இணைகின்றதா? இயக்குனர் Drake Doremus. அழகிய கவிதை போல் இயக்குனர் காட்சிகளை நகர்த்துகின்றார். நடுத்தர வயதில் ஏற்படும் பாலியல் அவலங்களையும், இளம் வயது மன அழுத்தங்களையும் பார்வையாளர்கள் மத்தியில் ஒரு பதட்டம் ஏற்படும் வகையில் படமாக்கியுள்ளார். பரதன் இயக்கிய ஊஞ்சலாடும் உறவுகள் என்ற படத்தில் ஜேம்ஸ் பொண்ட் ஜெய்சங்கர் ஒரு பேராசிரியர். இவரும் நடுத்தர வயதில் ஒரு மாணவியால் ஈர்க்கப்படுகின்றார். இரு படங்களிலும் மாணவிகளே ஆசிரியரை அணுகின்றனர். ஆசிரியர்களின் நடுத்தர வயது பாலியல் நெருக்கடிகள் மாணவிகளின் பக்கம் சாய்ந்து விடுகின்றது.

சேளா என்ற பிக்குணியின் பாடல் இது

"உலகில் உள்ளவரை தப்பித்தல் ஏது?
தனிமையால் காணும் பலன்தான் என்ன?
இருக்கும் வரை இன்பம் அனுபவி
கழிவிரக்கம் கடைசியில் வந்தேறும்."

இதற்கு பதில் கூறுவது போல் கடுவெளிச் சித்திரின் பாடல்

"செப்பரும் பலவித மோகம்-எல்லாம்
சீயென் றொறுத்துத் திடங்கொள் விவேகம்"



என்ற குதம்பைச் சித்தரின் பாடல் போலும் ஒரு படம். இது வங்காள மொழிப்படம். ஒரு ஓவியருக்கும் ஒரு பெண்ணுக்குமான காதலை மையமாகக் கொண்டது. இது காதல்தானே இதில் என்ன சிறப்பாக உள்ளது என நீங்கள் நினைக்கலாம். இவர்களின் திருமணத்தின் பின் மனைவியின் மார்பு தட்டையானது என்பது ஓவியருக்கு தெரியவருகின்றது. இதனால் ஆத்திரம் அடைந்து விவாகரத்து வரை செல்கின்றது. மனைவி இது உடல்ரீதியான மருத்துவ பிரச்சினை இதற்கு என்னால் ஒன்றும் செய்ய முடியாது என்கின்றாள். இதற்கு ஓவியர் "பொய்யாக மார்பகங்கள் உள்ளதாக" ஏன் ஒப்பனை செய்தாய் என எதிர் கேள்வி கேட்டார். நீங்கள் தானே "உடல் ஒரு ஓடு. உள்ளம் தான் முக்கியம்" என்றீர்கள் என்றார். இந்த ஓவியர் மனித உடல்களை ஓவியமாக வரைபவர்- குறிப்பாக பெண்களின் ஓவியங்களை வரைபவர். பெண்களின் உடலுக்கு உயிர் கொடுப்பவர். ஒரு படைப்பாளி. இவரால் இதனை தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஒப்பனை என்பது அன்றிலிருந்து இன்று வரை பெண்கள் தங்களை மேலும் அழகாக காட்டிக் கொள்ளசெய்வது. இன்றைய நவீன தொழில்நுட்பம் மேலும் இதனை மெருகுபடுத்துகின்றது. மணமகளின் வாழ்வில் ஏற்பட்ட அவலங்கள் அவளை இங்கு மௌனியாக மாற்றிவிடுகின்றது. காதலிக்கும்பொழுது அகத்தைக் காதலிக்கின்றேன் என்று கூறும் காதலர்கள் உண்மையில் உடலையும் கவர்ச்சியையும் தான் காதலிக்கின்றார்கள். நான்கு வருடங்களின் பின்னர் ஒரு கடற்கரையில் இவர்கள் சந்திக்கின்றனர். முன்னால் மனைவி இப்போது வேறு ஒரு ஓவியனின் மனைவி. அவர்களுக்கு ஒரு மகளும் உண்டு. "நீங்கள் அவலட்சணமாக கருதிய அதே மார்பால் தான் எனது மகளுக்கு பல மாதங்கள் பாலூட்டினேன். வைத்தியர் அவள் ஆரோக்கியமாக இருப்பதாக கூறுகின்றார்" என்கின்றாள்.

மறப்பதும் நல்லதே...

-குகன்-



வாழ்வின் முன்னேற்றங்களுக்கு நினைவாற்றல் எவ்வளவு அவசியமோ, அதேபோல் வாழ்வின் மகிழ்ச்சிக்கு ஞாபகமறதி மிக அவசியம். இது கொஞ்சம் முரண்பாடாகத் தோன்றினாலும் இதில் மிகப்பெரிய உண்மைமறைந்துள்ளது.

ஒருவரின் கைரேகையைப் போலவே மற்றொருவரின் கைரேகை இருக்காது. உடலைச் சரிபாதியாக மடித்தால் இரண்டு பகுதிகளுக்கும் வித்தியாசம் காணலாம். இயற்கையாகவே உடலின் இடப்பக்க உறுப்புகள் சற்றுசிறியனவாக இருக்கும். அப்படி இருக்கும்போது மனிதனுக்கு மனிதன் எப்படி வேறுபடாமல் இருக்க முடியும்?

அன்றாட வாழ்வில் நாம் பலவித மனிதர்களைச் சந்திக்கின்றோம். ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரியாக இருக்கிறார்கள். சிலர் மிகவும் நல்லவர்கள். ஆனால் நாம் விரும்பியபடி அவர்களுடன் நெருங்கிய உறவை ஏற்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்புகள் கிட்டுவதில்லை. சிலர் வலியவந்து அட்டைபோல் நம்மை ஒட்டிக் கொள்கிறார்கள். தாங்கிக் கொள்வதற்கும் முடியவில்லை, தட்டிவிடுவதற்கும் தெரியவில்லை.

தாயின் வயிற்றிலுள்ள குழந்தையால் கேட்கவும், கற்றுக்கொள்ளவும் முடியும் என்று அறிவியல் ஆராய்ச்சி கூறுகிறது. ஆனால் நாம் எதைத்தான் கற்றுக்கொண்டு வெளியே வந்தோம் என்பது விளங்காத புதிர். யாரையும் நம்மால் அவ்வளவு சுலபமாகப் புரிந்துகொள்ள முடிவதில்லை. நம்மில் பெரும்பாலோர்க்குப் பரந்தமனது. எல்லோரையும் எளிதாக நம்பி விடுகிறோம். பட்டபின்தான் எல்லாம் விளங்குகிறது. மூளைக்கு வலி கிடையாது. இதயம் வலியறியுமே!

பிறந்த குழந்தைக்குக் கறுப்பு, வெள்ளை தவிர வேறு வித்தியாசங்களே தெரியாது. நமக்கும் பல சமயங்களில் வித்தியாசம் காணத் தெரிவதில்லை. நம்பிக்கைத் துரோகங்களையும் வஞ்சகங்களையும் சந்தித்தபின் கவலை கொள்கின்றோம். இவரா அப்படிச் செய்துவிட்டார்? அவரா இப்படிச் சொன்னார்? என்றெல்லாம் மனம் சஞ்சலப்படுகிறது. ஏமாற்றி விட்டாளே படுபாவி என்று ஆதங்கப்படுகிறது. இப்படியும் கேடுகெட்ட உறவுகளா? என்று உள்ளம் அழுகிறது. அடடா, கவலைகளில்தான் எத்தனை எத்தனை ரகங்கள்!

'அன்ன விசாரம் அதுவே விசாரம், அது ஒழிந்தால்
சொன்ன விசாரம் தொலையா விசாரநற் றோகையரைப்
பன்னவிசாரம் பலகால் விசாரம், பாவி நெஞ்சுக்கென்ன
விசாரம் வைத்தாய் இறைவா கச்சி ஏகம்பனே'


என்றார் பட்டினத்தார். மன விசாரம் இல்லாதவர்களே இல்லை என்று சொல்லும் அளவிற்கு ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு கஷ்டநிலை.

சிலர் அழகாகச் சிரிக்கிறார்கள். அருள்வடிவாகத் தெரிகிறார்கள். சிறிது நேரத்தில் அந்தச் சிரிப்பே பயங்கரமாகத் தோன்றுகிறது. மெல்ல மெல்ல அவர்கள் காட்டுமிராண்டியாய் மாறுவதைப் பார்க்க முடிகிறது. யாரைத்தான் நம்புவது?

“நிறையப் பேரின் வாழ்க்கை மயக்கத்தினூடே இயங்கிக் கொண்டிருக்கிறது. இங்கு வந்தாகிவிட்டது. வாழ்ந்தாகவேண்டும் என்ற நிலை. பிரச்சினையே வேண்டாம் சாமி” என்று புறமுதுகு காட்டி ஓடி ஒளிந்துகொள்ள முடியாது. அப்படிஒளிந்துகொள்வதுதான் தீர்வு என்றால் உலகில் மனித நடமாட்டமே இருக்காது. உலகம் வெறிச்சோடி விதவைக் கோலமாகிவிடும்.

மனித சமூகத்தின் மகிழ்ச்சியே உலகின் எழிற்கோலம். மனிதனுக்கு அப்படிப்பட்ட வாழ்க்கை வேண்டுமே. ஆனால் அவன் தன் தலைக்குமேல் பாரங்களை அல்லவா சுமந்து கொண்டிருக்கிறான்?

ஒரு ஜென் குரு. அவருடன் அவரது சீடன். குடிலை நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர். வழியில் ஒரு ஆறு. அந்த ஆற்றிலே இறங்கி நடந்தனர். ஓர் இளம்பெண்ணும் ஆற்றைக் கடந்து கொண்டிருந்தாள். திடீரென ஆற்றில் வெள்ளம் அதிகரித்தது. அதிவேகமாக நீர்மட்டம் உயர்ந்துவிட்டது. அந்தப் பெண்ணோ வெள்ளத்தில் தத்தளித்தாள். உயிருக்குப் போராடினாள்.



குரு பட்டென்று அவளை நெருங்கி அப்படியே தூக்கினார். தன் தலைக்குமேல் அவளைத் தூக்கியபடி ஆற்றைக் கடந்து அக்கரையை அடைந்தார். அந்தப் பெண்ணை இறக்கி விட்டுவிட்டு நடக்க ஆரம்பித்தார்.சீடனுக்கோ ஒரே அதிர்ச்சி. ஆனாலும் குருவைக் கேள்வி கேட்க அவனுக்குத் தைரியமில்லை. குருவோ அவனுடைய தவிப்பை புரிந்துகொண்டார்.

சீடனைப் பார்த்து, “என்ன குழப்பம்? பயப்படாமல் கேள்” என்றார். தயங்கிய சீடன் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, “குருவே, இன்று காலை ஆற்றில் நடந்த சம்பவம்...” என்று இழுத்தான். “தைரியமாகச் சொல்” என்றார் குரு. “இல்லை குருவே, ஆற்றில் ஓர் இளம்பெண்ணைத் தொட்டுத் தலைக்குமேல் தூக்கினீர்களே?” என்று எப்படியோ கேட்டு முடித்துவிட்டான் சீடன்.

குரு கோபப்படவில்லை. கடகடவென்று சிரித்தார். “சீடனே, அவளை நான் அங்கேயே இறக்கி விட்டுவிட்டேனே! நீ இன்னுமா அவளைச் சுமந்து கொண்டிருக்கிறாய்?” என்றார். சீடன் மௌனமானான்.

அந்த சீடனைப் போலத்தான் நாமும். தேவையற்ற பல விஷயங்களை நம் தலைமேல் தூக்கிச் சுமந்துகொண்டு திரிகிறோம். பாரத்தை இறக்கி வைக்கத் தெரிந்தவர்களுக்கு வாழ்க்கை பாரமல்ல. சிலருடைய மனம் எப்போதுமே எதையாவது எண்ணிக் கலங்குகிறது. வசமாக சிக்கிக்கொண்டோமோ என்று அடிக்கடி பயப்படுகிறது. அப்படிப்பட்டவர்களுக்கு வாழ்க்கையே அவஸ்தைதான். வாழ்வின் சூட்சுமங்களைப் புரிந்துகொண்டால் ஆனந்தம். சூழ்நிலைகளால் பாதிக்கப்படாத பக்குவத்தைப் பெற்றுவிட்டால் பரமானந்தம்.

நினைவுகளால், கனவுகளால் நெருக்கப் படுகின்ற நெஞ்சம், ஆசைகளால் அவஸ்தைகளால் நொறுக்கப்படுகின்ற இதயம், உறவுகளால், பிரிவுகளால் பிழியப்படுகின்ற கண்ணீர், துரோகங்களால் விரோதங்களால் காயமடைகின்ற உணர்வுகள் இவை அனைத்தையும் மேற்கொண்டு நிறைவான வாழ்க்கையை வாழ்வதில்தான் மானுடத்தின் பெருமை அடங்கியுள்ளது.

மனித முகங்களில் பெரும்பாலானவை பொய் முகங்களே. உறவுகளில் ஏராளமானோர் காகிதப்பூக்களே. நட்பிலும்கூட நரிக்குணங்கள். கைகுலுக்கும் போதுதான் கரடி என்று உங்களுக்குத் தெரியவரும்.

சிலர் சிரித்துக்கொண்டே கழுத்தை அறுப்பார்கள். சிலர் விஷம வார்த்தைகளிலேயே கதையை முடிப்பார்கள். இன்னும் சில கில்லாடிகள் இருகிறார்கள். தங்களுக்குக்குக் காரியம் ஆக வேண்டும் என்றால் வந்து பேசுவார்கள், குழைவார்கள். இப்படிப்பட்டவர்களைப் பார்க்கும் போதெல்லாம் இவர்கள் ஏன் இப்படி இருக்கிறார்கள் என்ற கேள்விதான் நமக்குள் எழும்பும். நல்லவர்களை விட இத்தகைய களிமண் உருண்டைகளே உலகில் அதிகம். ஒரு ரோஜாவிற்குப் பக்கத்தில் எத்தனை முட்கள்?

சித்தர்களைப்போல அட்டமா சித்திகளைப் பெற்றிருந்தாலாவது விண்வெளியிலேயே உலவிக் கொண்டிருக்கலாம். பரகாயப் பிரவேசம் தெரிந்திருந்தால் சிட்டுக்குருவிக்குள் புகுந்துகொண்டு பறந்துதிரியலாம். ஆனால் நம்முடைய வாழ்க்கையோ தரைமீது பலதரப்பட்ட மனிதர்களோடு.

தங்களுக்குள்ளே எப்போதும் கொம்பு சீவிக்கொண்டிருக்கின்ற மனிதர்கள் ஏராளம். நன்றி கெட்டவர்கள் எக்கச்சக்கம். அற்புதமான உலகில் அவர்கள் அற்பமானவர்கள். அவர்களுக்கு நடுவே நம்மை நாம் காத்துக்கொண்டு வாழ்ந்தாக வேண்டும். அது எப்படி முடியும்?

முடியும். வேதனை செய்கின்ற நினைவுகளையும், வஞ்சக வார்த்தைகளையும் மனிதர்களையும் மறக்கத் தெரியவேண்டும். ஆம்! மறக்கத் தெரியவேண்டும். அந்த வித்தையைக் கற்றுக்கொண்டால் வாழ்நாள் முழுவதும் மகிழ்ச்சியாக வாழ்ந்துவிட முடியும்.

தேர்வெழுதப் போகின்ற மாணவனுக்கு ஞாபகசக்தி தேவை. காயப்பட்டுத் துடிப்பவனுக்கு வலியைப் பற்றிய நினைவே இல்லாத மறதி தேவை. ஞாபக மறதியை பலவீனம் என்று கருதிவிடக்கூடாது. அதுவும் ஒருவகை யோகம். விழிப்பிற்கும் உறக்கத்திற்கும் எப்படியோ, அப்படித்தான் ஞாபக சக்திக்கும், ஞாபக மறதிக்கும் சமமுக்கியத்துவம் உண்டு. நினைவுகளைத் துறந்துவிட்டால் சுகம். மறதியே நிம்மதி.

ஞாபகங்கள் வாழ்வை பழைய நிலைக்கு அல்லது கவலைகளுக்குள் இழுத்துச் செல்கின்றன. மறதியே வாழ்வைப் புதிதாக்குகிறது. கலக்கத்துடனே உறங்கச் சென்று அதே கலக்கத்துடன் காலையில் கண் விழிக்கின்றவன் நிம்மதியாக வாழ முடியுமா? தூக்கத்தில் கண்ட கெட்ட கனவையே நினைத்துக் கொண்டிருப்பவன் அன்றைய பொழுதை ரசிக்க முடியுமா?

தூக்கம் வராமல் படுக்கையில் புரண்டு கொண்டிருப்பவர்கள் எத்தனை பேர்? தூக்க மாத்திரைகளையே உணவாக்கிக் கொண்டவர்கள் எத்தனை பேர்? அத்தனைக்கும் காரணம் என்ன? தேவையற்ற நினைவுகள்!

அத்தகைய நினைவுகளை உதிர்த்துவிடத் தெரிய வேண்டும். நஷ்டக் கணக்கையே நினைத்துக் கொண்டிருந்தால் எதிர்காலமே இருளாகத் தெரியும். மற்றவர்கள் ஏற்படுத்திய காயங்களையே எண்ணிக் கொண்டிருந்தால் வாழ்க்கையே வேதனையாகத் தோன்றும். எனவே மறக்கப் பழகுங்கள். வாழ்வைப் பழைய நிலைக்குள் தள்ளுகின்ற நினைவுகளைத் துறந்து விட்டால் வாழ்க்கை புதுப்பொலிவு பெற்றுவிடும்.

காதல் தோல்வி என்று பலர் தற்கொலை செய்து கொள்கிறார்களே, அதில் என்ன நியாயம் இருக்கிறது? 'மறக்கமுடியவில்லை' என்று எழுதி வைத்துவிட்டுத் தங்களை மாய்த்துக் கொள்கிறார்களே! அவர்கள் வாழ்ந்ததில் என்ன அர்த்தம் இருக்கிறது?

குறுந்தொகையில் ஒரு பாடல்:
உள்ளின் உள்ளம் வேமே உள்ளாது
இருப்பின், எம் அளவைத்து அன்றே வருத்தி
வான் தோற்வற்றே, காமம்
சான்றோர் அல்லர், யாம் மரீ இயோரே!

"நான் என்ன செய்வேன்! வருவேன் என்று சொல்லிச் சென்றார். வரவில்லையே. மாறனோ அம்புமேல் அம்பு பொழிகிறான். காமமோ வானளாவப் பெருகிவிட்டது. அவரை நினையாதிருக்கவும் முடியவில்லை. நினைத்தாலோ மனம் வேதனை அடைகிறது. தாங்கிக்கொள்ள முடியவில்லையே" என்று தன் காதலனின் நினைவாய் காதலி புலம்புவதாக அந்தப்பாடல் கூறுகிறது.

அந்த காதலியின் கதை எப்படி முடிந்ததோ? யாருக்குத் தெரியும். எல்லாம் மறக்கத் தெரியாததால் ஏற்பட்டபிரச்சினை. நினைக்கத் தெரிந்த நெஞ்சுக்கு மறக்கவும் தெரிந்திருக்க வேண்டும். இல்லையெனில் ஆறாத காயங்களே தொடர்கதையாகிவிடும். சந்தோஷங்களுக்கு வாழ்வில் இடமில்லாமலேயே போய்விடும்.

நல்லவர்களை மட்டும் நெஞ்சில் சுமப்போம். நல்லவைகளை மட்டும் நினைவுகளாய் வளர்ப்போம். தீமைகளையும் வஞ்சகங்களையும் நெஞ்சை விட்டுத் தூக்கி எறிவோம். அவற்றை மறந்துவிடுவோம். ஒவ்வொருநாளும் புதியவர்களாய்ப் பிறப்பெடுப்போம். மகிழ்ச்சியான வாழ்வை அனுபவிப்போம்.

நண்பனே

தீமைகளை மறந்துவிடு
கவலைகளைத் துறந்துவிடு.

மஹாகவி குறும்பா

ஈழத் தமிழர் கவித்துவத்துக்கு நன்னிகரற்ற சான்றாக விளங்கிய முன்நிலைக் கவிஞர் மஹாகவி. ஈழத் தமிழ் இலக்கியத்தில் இடதுசாரிப் போக்குகள் வலுப்பெற்று முற்போக்கு இலக்கியமென்ற பெயரில் கோலோச்சிய நிலைமைகளில் செயற்பட்ட குழுவாதப் போக்குகள், தனித்துவமாக நின்ற இவரின் கவித்துவத்துக்கு அன்றைய காலகட்டத்தில் உரிய இடம் வழங்கவில்லையென்பது வேதனை தருவது. பாரதிக்கு அன்று நிகழ்ந்ததுதான் இவருக்கும் நிகழ்ந்தது. இன்றாவது இத் தவறை நாம் உணர்ந்துகொண்டால் சரி. மகாகவியின் குறும்பாக்களை இங்கே தருகிறோம். அவரது முன்னுரையுடன்:

சுவைஞரே-

கவிதை உலகளவு பரந்து
பல்வேறுபட்டது
கடவுளையும் காதலியையும் போற்றுவது
மட்டும் அன்று அதன் பணி.
கட்டித்த சிந்தனை உடைய
பண்டிதர்களும்,
கோட்பாடுகளை விழுங்கி விட்டுச்
செமித்துக் கொள்ள முடியாதவர்களும்,
மோப்பதற்கும்,
மோந்து முனு முனுப்பதற்குமாக
எழுதப் படுவதன்று கவிதை.
அது சாதாரண மனிதனின்
பழுது படா உள்ளத்திற் பாயப்
பிறப்பது.
எனது குறும்பாக்கள் முற்றும்
ஓய்வுக் குரியனவும் அன்று.

- மஹாகவி




உத்தேசம் வயது பதி னேழாம்
உடல் இளைக்க ஆடல் பயின் றாளாம்.
எத்தேசத் தெவ்வரங்கும்
ஏறாளாம்! ஆசிரியர்
ஒத்தாசை யால், பயிற்சி பாழாம்

இதோ எங்கள் சினிமா!

– திரை விலக்குபவர் பாஸ்கி ரி ராக் –

திரை விலகும்போது, பிரமாண்டப் படங்களைப் பார்த்த பிரப்பு நீங்காமல் திறந்த விழி மூடாமல் இருக்கும் உங்களுடன் பேசுவதற்கு உகந்த சூப்பரான சினி மெட்டர் இந்தத்தடவை என்னவென்று யோசித்தேன். கிளைமெக்ஸ் பற்றிப் பேசலாமா? கிளைமெக்ஸை நாம் உச்சக் கட்டம் என்போம். கிளைமெக்ஸ் என்பதை "A value swing at maximum charge that is absolute and irreversible" என்பர் திரைப்பட ஆசான்கள். திரும்ப முடியாதவாறு உச்ச அளவான மொத்த சார்ஜும் மாறும் பெறுமான மாற்றம்தான் கிளைமெக்ஸ் என்கிறார்கள். புரிகிறதா? கஷ்டம்தான். நீங்கள் பாடம் படிக்கவா வந்தீர்கள்? படிக்க விரும்புவர்களும் இருக்கலாம் என்பதால் விளக்குகிறேன். சரி, சார்ஜ் என்பது இரண்டு வகை மைனஸ் பிளஸ். மைனஸுக்கு உதாரணம்: துக்கம், தோல்வி, அழிவு, ஏமாற்றம், வீழ்ச்சி, விரக்தி... போன்றவை. பிளஸ் இற்கு உதாரணம்: சந்தோஷம், வெற்றி, ஆக்கம், நம்பிக்கை, உயர்ச்சி... போன்றவை. தோல்வியிலிருந்து வெற்றியாக மாறுவது மேல்நோக்கிய வால்யூ சேஞ்ச். அதுபோல் சந்தோஷத்திலிருந்து துக்கமாக மாறுவது கீழ்நோக்கிய வால்யூ சேஞ்ச். கிளைமெக்ஸ் தான் இச் சார்ஜ்களின் மொத்த மாற்றம் நிகழும் இடம் என்கின்றனர் அவர்கள். அப்படி நடந்ததா, அது என்ன சார்ஜ் மாற்றம் என்பதை பின்வரும் படங்களின் கிளைமெக்ஸ்களைப் பரிசீலித்து, அதில் அவை எத்துனை வெற்றியீட்டியிருக்கின்றன என்பதை அளந்துகொள்ளுங்கள். கிளைமெக்ஸ்பற்றி இன்னொரு முக்கியமான மெட்டர் உண்டு. - அதுதான் Obligatory Scene. அடுத்த தடவை சொல்கிறேன்.

ஐ



நடிப்பு: விக்ரம், எமி ஜாக்ஷன், சந்தானம், பவர் ஸ்டார், சுரேஷ் கோபி, உபேன் பட்டேல்

டைரக்ஷன்: ஷங்கர்

இசை: ஏ.ஆர். ரகுமான்

கேமரா: சிபி ஸ்ரீராம்

பிரமாண்டங்களால் உயரங்களைத் தாண்டும் சங்கரின் இப்படம், வெறும் காமிக்ஸ் புத்தகக் கதைபோன்ற ஒன்றையே, பிரமிப்போடு பார்க்க வைத்துவிடுவதில் வர்த்தக ரீதியில் வெற்றியீட்டிவிடுகிறது. இவ் வெற்றிக்கு விக்ரமின் கொமிட்டடான உழைப்புப்தான் அடி அத்திவாரம் என்பது படம் பார்த்த எவருக்கும் ஐயமறப் புரிந்துவிடுகிறது. ஆனால் திரைப்படம் என்ற வகையில் இப்படம் தன்னை நியாயப்படுத்தியிருக்கிறதா என்பது கேள்வி. அதாவது பிரமாண்டமான சீன்கள், டெக்நிக்குகள், மேக்கப்புகள், இசை, பிரபல நட்சத்திரங்கள் என்ற பக்கப் பலங்களை அகற்றிவிட்டுப் பார்த்தால் திரைக்கதை தன் பலத்தில் நிற்கிறதா? வஞ்சித்தவர்களைப் பலிவாங்கும் கதை. அந்த வகையில் பழைய ரகம். அந்தப் பலிவாங்கல்களை வெவ்வேறு தினுசாக அமைத்து அசத்தவேண்டும் என்ற ஆதங்கம் புலப்படுகிறதே தவிர, அப்படியான பலிவாங்கல்கள் சாத்தியமா என்ற யாரும் யோசிக்கவில்லை. ஐந்து வில்லன்களும் கூடியிருந்து கதாநாயகனுக்கே என்ன நேர்ந்தது என்று புட்டுவைப்பது, அன்றைய கால நம்பியார் தனத்திலும் சிறுபிள்ளைத்தனமாக இருந்தது. பலஹீனமானவனாக மாறிவிட்டவன் ட்ரெயின்மீது ஏறி குஸ்திபோடுவதும், மொடலிங் வில்லனை மின்கம்பியில் கருகவைப்பதும் (கொல்லாது உயிரோடு அவலட்சணமாக்குகின்ற) ஹீரோவின் ப்பிளானாக இருப்பதற்கு சாத்தியமே இல்லை. டாக்டர்தான் பிரதான வில்லனெனப் பின்னால் புரிந்துகொள்வதற்காக, முன்னரே அவரது பேச்சுக்களில் கொடுத்திருக்கும் லைட்டான ஹின்டுகள் மிகையாகிப்போய், அதை முன்னரே ஊகிக்க வைத்துவிடுகிறது. மாடலிங்கில் உச்சத்தில் இருக்கும் ஹீரோ விளம்பர ஒப்பந்த விதிகள் தெரியாதவராக மீடியாவுக்கு புரொடெக்டைப்பற்றி பாமரத்தனமாக உளறிக் கொட்டுவது கென்பிளிக்டைக் கொணர்வதற்கான வலிந்து செய்யப்பட்ட ஒன்றாக அமைகிறது. எல்லாமிருக்க, திருநங்கைகள் பற்றிய விகாரமான சித்திரிப்பு திரைப்படத்தை சமூகப்பெறுமாணமற்ற ஒன்றாக மதிப்பழக்க வைக்கிறது. விக்ரமின் உழைப்பு மிக்க நடிப்பு, அத்தனை மேக்கப்பையும் தாண்டி வெளிப்பட்டு திரைப்படத்தை உயரத்தில் தாங்கிப் பிடித்து வைத்துக்கொண்டது. சில பிளாஷ்பெக்குகள் யாருடைய வியூபொயின்டில் காட்டப்படுகின்றது என்ற குழப்பத்தைத் தந்தாலும், பலிவாங்கல்களுக்கும் பிளாஷ்பெக்குகளுக்கும் இடையே மாறி மாறி நகரும் நொன்-லீனியர் வகையான கதை நகர்த்தல் போரடிக்காமல் காப்பாற்றி விறுவிறுப்பை மெயின்டெய்ன் பண்ணியுள்ளது. என்னயிருந்தாலும், கோடானு கோடி செலவழித்து கண்முன் நிறுத்தும் இத்தகைய கற்பனையை தியட்டர் சென்று பார்க்கவிட்டால் திருப்தியிருக்குமா என்ன?

என்னை அறிந்தால்



நடிப்பு: அஜித், திரிஷா, அனுஷ்கா, அருண் விஜெய்

டைரக்ஷன்: கௌதம் மேனன்

இசை: ஹரிஸ் ஜெயராஜ்

கேமரா: டான் மகதூர்

திரைப்படி விதிகளை அறிந்து இயக்கும் ஒருசில தமிழக இயக்குநர்களில் ஒருவரான கௌதம் மேனன் இயக்கத்தில் அஜித் நடித்த முதற்படம் இது. ஃபீல் குட் என்று சொல்லக்கூடிய படம் இது. ஆனால் கௌளம் மேனனிடம் இந்தளவா எதிர்பார்த்தோம்? "என்னை அறிந்தால்..." என்ற திரைப்படப் பெயர் சொல்லும் ஆழமான அர்த்தமெதையும் படம் அடிநாதமாகக் கொண்டிராதது ஏமாற்றமே. "ஒரு மெல்லிய கோடு, அதன் இந்தப் பக்கத்தில் நின்றால் நான் நல்லவன், அந்தப் பக்கம் சென்றுவிட்டால் மிக மிகக் கெட்டவன்," என்றுகூறும் திரைப்படத்தின் உயிர் வாசகம், ஹீரோவின் இன்னர் கெரெக்டரில் எழும் உள்மனப் போராட்டத்தையும், கெரெக்டர் சேஞ்சையும் கையாளப்போகிறார்கள் என்ற கற்பனையைத் தந்தாலும் அதொன்றும் நடக்கவில்லை. அந்த வாசகம் வெறுமனே வில்லனுக்கு ஹீரோ கூறும் அட்வைஸாக சொடக்கென முடிந்துபோனது. இது சாதரண கேங்ஸ்டர் - பொலீஸ் படம். பொலீஸைப் பழிவாங்க மனைவியைக் கொல்வதும் பழசு. உடலுறுப்பு விற்பனைக்காக கொலைகள் செய்வது "ஹாஸ்டல்" ஆங்கிலப் படத்தை ஞாபகப் படுத்துகிறது. (அதில் இது மிகப் பயங்கரமாக இருக்கும்.) இதில் விஞ்சி நிற்பது டைரக்டரின் ரிதத்திலமைந்த திரைப்படத்தின் ஓட்டம்தான். ஆங்காங்கே பல கிளிஷேக்கள் கண்ணை உறுத்தினாலும், அவற்றைக் கடந்து வெறும் கேங்-வோராக இல்லாமல், மதிப்புத் தரவைக்கும் காதல், பொறுப்புணர்வு, கடமை உணர்வு, கண்ணியம் கலந்த மிருதுவான பாங்கங்களோடு இசைவாகப் பிணைந்து படத்தைத் தந்திருப்பது, ஒன்றியிருந்து படம்பார்க்க வைக்கிறது. அஜித் அதற்கேற்ப வளைந்து கொடுக்கிறார்.

கடத்தப்பட்ட மகளையும் பலிக்கடாவான ஹீரோயினையும் மீட்பது, மகளைக் கொல்வதைத் தடுப்பது என இரட்டைக் கிளைமெக்ஸ் வைத்து, ஒரு ரிஸ்க் எடுத்துள்ளார் கௌதம். (மூச்சைப்பிடித்துக்கொண்டிருக்கும் பார்வையாளர்கள் கிளைமெக்ஸ் முடிந்து மூச்சு விட்டதோடு மொத்த எனேர்ஜியும் இழந்திருப்பார்கள். அடுத்த கிளைமெக்ஸுக்கு மீண்டும் உசாராக்குவது கடினம்) சில கேள்விகள் உள்ளன. படத்தின் மெயின் பொயின்டான உடலுறுப்பு வியாபாரத்துக்கு தெருவிலேயே பிச்சைக்காரரும் ஏழைகளும் கிடைக்கிறார்கள் எனத் தெரிவித்துவிட்டு ஏன் அமெரிக்காவில் வசிக்கும் ஒரு உயர் குடிப் பெண்ணை அத்தனை ரிஸ்க்கெடுத்துக் குறி வைக்கிறார்கள்? படம் பார்க்கும் பச்சைப் பிள்ளைக்கும், வில்லன் வீட்டைக் குறிவைத்திருக்கும்போது மகளை ஸ்கூலுக்கு அனுப்புவது ரிஸ்க்கென்று தெரியும்போதும் கிரிமினல்களோடு சதா உழலும் பொலிஸ் அதிகாரிக்கு தெரியவில்லை? படத்தின் மெசேஜ் தர்மம் (லேட்டானாலும்) வெல்லும் என்ற ராமாயணக் காலத்து மெசேஜ்தான்.

தலைமுறைகள்

நடிப்பு: பாலு மகேந்திரா, (மாஸ்டர்) கார்த்திக், சசிகுமார் சுப்ரமணி, விநோதினி,

டைரக்ஷன்: பாலுமகேந்திரா

இசை: இளையராஜா

கெமரா: பாலு மகேந்திரா



அண்மையில் மறைந்த ஒரு திரைப்பட மேதை இயக்கி, நடித்த கடைசித் திரைப்படம் என்ற வகையில் ஒரு சென்டிமென்டல் ஃபீலோடு பார்க்க வைக்கிறது. அவரது நடிப்பும், இறுதியில் திரைப்படத்திலேயே அவர் இல்லாதவராகிப் போய்விடுவதும், நிஜத்தில் அவர் மறைந்த கனதியோடு மனதைக் கனக்க வைக்கிறது. தொப்பியோடு நாம் பார்த்த அவரை தொப்பியின்றித் திரையில் பார்க்கிறோம். பாத்திரத்தைக் கடந்து பாலுமகேந்திராவாக அவரைக் கண்டுகொள் முடியாத அளவு பாத்திரத்தோடு ஒன்றிவிட்டார். அமைதியான நதியோட்டம்போன்ற பட நகர்வு. எல்லாம் இயற்கையோடு ஒன்றித்திருக்கிறது - அதுவும் நாம் பார்ப்பது இயற்கைதான் என்று உணர்த்தாதவாறு! அத்தகைய கலைஞனை நாம் எனி எப்போ பார்ப்போம் என்றிருக்கிறது.

ஆனாலும்... திரைப்படம் என்ற வகையில் நாம் பாலு மகேந்திராவைக் கடந்து இதைப் பார்க்கும்போது சில போதாமைகள், சில தொய்வுகள், சில கேள்விகள் இருக்கத்தான் செய்கின்றன. முதலாவதாக, திரைப்படத்தின் கென்பிளிக்ட் - அதாவது பிரச்சினை என்பது, பழமைவாத முதிய இந்துத் தந்தைக்கும், தமிழ் தெரியாத கிறிஸ்தவப் பெண்ணை மணமுடித்த மகனுக்கும் இடையேயான தெறிப்பு என்பதாக தொடங்கியது. ஆனால் அது பிணக்கேதும் இன்றியே தீர்ந்துவிடுவதால் படத்துக்கான ஆரம்ப முரண்பாடு வலுவிழந்து விடுகிறது. அடுத்து ஆங்கிலம் தெரியாத பாட்டனுக்கும் தமிழ் தெரியாத பேரனுக்கும் இடையிலான உறவிலேயே படம் முழுக்க நகர்ந்து இடையே எந்த கென்பிளிக்டுமின்றி, - அதனால் விறுவிறுப்பேதுமின்றி - முடிந்துவிடுகிறது. தாத்தா பேரனுக்கு தமிழ் கற்றுக்கொடுப்பதும், தாத்தா ஆங்கிலம் கற்றுக்கொள்வதுமே இங்குள்ள சலேஞ்ச். வில்லன் எவனும் இங்கே இல்லை. கிளைமெக்ஸும் இல்லை. தாத்தாவின் மரணம்தான் கிளைமெக்ஸ் என்றால், இந்தப் படம் முழுவதுமே, எதிர்பார்க்கப்பட்ட அந்த முதுமையின் மரணத்துக்கான நகர்வாகவே - முழுநீளக் கிளைமெக்ஸ் ஆகிவிடுகிறது. மருமகளான டாக்டர், தாத்தாவின் பொருட்டும் கிராமத்தவர் பொருட்டும் கிராமத்திலேயே மகனுடன் தங்கிவிடுவது டச்சிங்காக இருந்தாலும், எதார்த்தமானதா என்ற கேள்வியை அவ்விடத்தில் எழுப்பி "இப்படி நடந்திருக்கிறது" என்று எடுத்துக்கொண்டு போகச் சொல்கிறது. மகளின் பிள்ளைகளோடான தாத்தாவின் உறவு என்ன என்பதும், திரைப்படத்தில் முகமே காட்டாத தாத்தாவின் மறு மனைவி, இடையே வந்துபோகும் அவளது மகள், இவர்களெல்லாம் படத்தில் ஏன் பாத்திரமானர்கள் என்பது கேள்வியாகவே தொக்கி நிற்கிறது. "தாத்தாவையும் தமிழையும் மறவாதடா" என்று இறக்குமுன் பாலு மகேந்திரா இறுதியாகச் சொல்வதை தமிழினத்துக்கான மெசேஜாக கொள்ளலாம். ஆனால் அவர் பிற மொழிகளை மறுக்கவில்லை என்பதை, தள்ளாத வயதிலும் ஆங்கிலம் கற்றுக்கொள்வதன் மூலம் உணர்த்தியுள்ளமையையும் சேர்ந்தே நாம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

அப்புச்சி கிராமம்.

நடிப்பு: பிரவீன் குமார், அனுஷா நாயக், சுஜா வருணி, சுவஸ்லிகா, நாசர், ஜி.எம். குமார்

டைரக்ஷன்: வி. அனந்த்


இசை: விஷால் சந்திரசேகர்

தயாரிப்பு: (ஐ கெட்ச் மல்டிமீடியா) விஷ்ணு முரளி, வி. செந்தில்குமார்

புலம்பெயர் தழிழர் தென்னிந்திய திரைவானில் மேற்கொண்ட ஒரு முயற்சி என்றவகையில் இத் திரைப்படம் நோக்கத்தக்கது. எம் கடைகளில் திருட்டு சீடிக்களாக, (தயாரிப்பாளர் பெயர்கூட வி.ஆனந் என மாற்றப்பட்டு) பார்த்தபோது "அட, எங்கள் படைப்புக்களாச்சே" என்ற கவலை. சரி, படம் பற்றிப் பேசுவோம்.



நல்லதொரு கென்செப்ட்: எரிகல் விழுந்து உலகம் அழியும் நிலமை வந்தால்... "அப்படி நடந்தால்" எனும் "If..." ரகப் படவரிசை. ஏரிகல் விழுவதை சயன்ஸ் பிக்ஷன் என்றார்கள். அதைக் கம்யூட்டர்கிராபிக்ஸில் காட்டியதற்காவே அது சயன்ஸ் ஃபிக்ஷனாகிவிடாது. உண்மையில் அது நச்சுரல் டிஸாஸ்டர் (இயற்கை அழிவு) வகையே. எரிகல்லை ஏவுகணை ஏவி உடைப்பதுதான் சயன்ஸ் ஃபிக்ஷனுக்கு இப் படத்திலுள்ள இடம். ஆனால் அது காண்பிக்கப்படவில்லை - வெறும் செய்தியே. திரைப்படத்தில் மெச்சத்தக்கது சகல பாத்திரங்களதும் இயல்பான நடிப்பு - பல பாத்திரங்களுக்கு சமமான ரோல். கதாநாயக நாயகிகள் சுவையாக காதலிக்கிறார்கள் - அது மட்டுமேதான் அவர்கள் செய்கிறார்கள். வெறுமெனே கதைக்குள் இருப்பதே இவர்களின் பாத்திரமாகிவிடுகிறது. திரைப்படத்தில் பிரதான கதாபாத்திரத்துக்கு இருக்கவேண்டிய, Desire (உந்தல்). Object of Desire (உந்தலுக்கான இலக்கு). இலக்கை அடைவதற்கான எத்தனங்கள், திரும்பிவரமுடியாத இறுதி எத்தனம் (Point of no return) எதுவும் இல்லை. இயற்கைக்கும் மனிதனுக்குமான முரண்பாடாக இருக்கும் பிரதான கதையில் கதாநாயகனுக்கு வகிபாத்திரம் இல்லாதபோது, உபகதையின் முரண்பாட்டை கூர்மைப்படுத்துகின்ற திரைப்பட உத்தியைப் பயன்படுத்தியிருக்கலாம் - டைட்டானிக் போல. கேள்வி என்னவென்றால், பேரழிவு வரப்போவது தெரிந்தும், பஸ்ஸில் ஏறியவர்கள் திரும்ப இறங்கி செத்தால் கிராமத்திலேயே சாவோம் என்று செல்லும் மண்மீதான பிணைப்புக்கு வலிமையான காரணங்கள் எதையும் காணமுடியவில்லை. (சுனாமி வரும்போது கடற்கரை மக்களெல்லாம் வீடுகளில் இருந்தே சாவோமென்று அடம்பிடிப்பார்களா?) இவற்றுக்கப்பால், "எமது அற்ப சுயநலங்களைக் கைவிட்டு வாழ்ந்தால் வாழ்க்கை எவ்வளவு மகிழ்ச்சியானதென்பது புலப்படும்" என்ற நல்லதொரு மெஸேஜைத் தருகிறது படம்.



iOcatering
IT'S THE REAL FUSION
WWW.IOCATERING.COM
WE DO DIET FOR DIABETIC
FREE Home DELIVERY
Lawrence Ave
Kennedy Rd
Midland Ave
Brimley Ave
Eglinton Ave
TEL: 416.615.1079
IOCATERING@YAHOO.CA
1079 MIDLAND AVE. | TORONTO|ON|M1K 4G7





Mornelle I·D·A· Drug Mart
இது உங்கள் மருந்தகம்
துவத் திட்டங்களும் ஏற்றுக்கொள்ளப்படும்
We accept all drug plans
முதியோர்களுக்கும், சமூகநல உதவி பெறுபவர்களுக்கும் $2 அறவிடப்படமாட்டாது
We do not charge $2 deductible for seniors & welfare recipients
Contact: Jeyanthy or Chiman Mistry (Jimmy)
Tel: 416-289-2010
1200 MARKHAM RD., SUITE 101, [AT ELLESMERE] SCARBOROUGH, ON, M1H 3C3



PS RENOVATION
MOEN
Buy it for looks. Buy it for life.®
DELTA
see what Delta can do
Touch2O® Technology
RE-MODELING, RE-FACING
RE-DESIGN, FLOORING &
BASEMENT FINISHING
அனைத்து விதமான வீட்டுதிருத்த வேலைகளுக்கும், தரம் வாய்ந்த சமையலறை,
குளியலறை உபகரணங்களைப் பொருத்துவதற்கும் தள வேலைகளுக்கும்
CALL FOR FREE ESTIMATE
THANUSAN:
647-996-6491

பகிரங்கக் கடிதம்






நிஃமண்ட்கில்
கனடா.
7-3-15

இயக்குநர் சங்கருக்கு ...

ஐ படம் பார்த்து அதிர்ந்துபோனோம். பிரமாண்டத்துக்கு மறுபெயர் ஷங்கர் என்று புரியவைக்க நீங்கள் எத்தனை பகீரத முயற்சி எடுக்கிறீர்கள் என்பது கச்சிதமாகப் புலப்படுகிறது. வாழ்த்துக்கள். இதுபற்றியல்ல உங்களிடம் பேச விழைந்தது. நேரிடையாய்ச் சொல்வதானால் இந்தியத் திரைப்பட வசூலில் மிகப்பெரும் சாதனையான பி.கே திரைப்படத்தைப் பற்றியே!

பி.கே க்கும் எனக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்பீர்கள். சம்பந்தம் இருக்கிறது. பி.கே. திரைப்படத்தை தயாரித்த ராஜ்குமார் ஹிராணி தயாரித்து முன்னர் பெருவெற்றி ஈட்டிய 'திறீ இடியட்ஸ்' திரைப்படத்தை 'நண்பன்' என்ற திரைப்படமாக தமிழில் தந்தவர் நீங்கள். அதுவும் வெற்றியீட்டிய திரைப்படமே. நண்பன் படம் 'கல்வி' மற்றும் எமது கற்பித்தல் முறை பற்றி வினாக்களை எழுப்பி உண்மையான அறிவு என்பது என்ன என்பதை எடுத்துரைத்த திரைப்படம். இதனை ஹிந்தியிலிருந்து தமிழுக்கு எடுத்துவர முடிவுசெய்தது அது ஈட்டிய வருமானத்தைக் கண்டு மட்டுமல்ல. அது வழங்கிய கருத்தையும் மனதிலிருத்தியே என்பது என் எண்ணம். நல்ல காரியம் செய்திருக்கிறீர்கள். தங்கள் போன்ற ஆளுமையும் செல்வாக்கும் மிக்க முன்னணி இயக்குநர்களால்தான் இத்தகைய முயற்சிகளைத் துணிவுடன் மேற்கொள்ள முடியும்.

அதனால்தான் இப்போது பி.கே பற்றித் தங்களிடம் பேசுகிறேன். எவ்வாறு கல்வி மறுமலர்ச்சி பற்றி 'திறீ இடியட்ஸ்' பேசியதோ. அதுபோல பி.கே மதச் சடங்குகளின் மடமை பற்றிப் பேசுகிறது. புறநிலையிலிருந்து பார்ப்பவனுக்கு (இப் படத்தில் வேற்றுக் கிரகத்திலிருந்து வந்த புதியவனுக்கு) இந்த மதங்களின் சடங்குகள் எத்தனை குழப்பகரமானவையாகவும். மடத்தனமானவையாகவும் உள்ளன என்பதை நகைச்சுவையோடு. பட்டவர்த்தனமாக எடுத்துக்காட்டி அதற்கு மக்களின் அமோக ஆதரவைப்பெற்றுக்கொண்ட திரைப்படம். உலகளவில் 642 கோடி வசூலைக் குவித்ததுடன் இந்திய திரைப்பட சரித்திரத்திலேயே 305 கோடிக்கு மேல் வசூலீட்டி உச்ச சாதனை படைத்த படம். அதிலும் இந்தியாவில் முதல் இரண்டு நாள் வசூலே 50 கோடிக்கு மேல் என்றால் மக்கள் எடுத்த எடுப்பிலேயே அங்கீகாரமளித்துள்ளனரென்றல்லவா அர்த்தம்? மதவாதம் மிக முன்னிலை வகிக்கும் வட இந்தியாவிலேயே எல்லா மதங்களையும் ஒருசேர கேள்விக்குட்படுத்தியிருக்கும் இந்தத் திரைப்படம் வேறெந்தத் திரைப்படமும் ஈட்டாத செல்வாக்கை ஈட்டியிருக்கிறதென்றால் இந்தக் கேள்விகள் அத்துணை நியாயமானவை என்பதை மக்கள் புரிந்துகொண்டனர் என்பதல்லவா அர்த்தம். உங்கள் நண்பன் திரைப்படத்துக்கான மூலத் திரைப்படத்தை தந்த அதே இயக்குநரின் இத் திரைப்படத்தை நீங்கள் ஏன் தமிழில் மீள உருவாக்கக்கூடாது?

மதவாதிகளின் எதிர்ப்பு பற்றி நீங்கள் அஞ்சத் தேவையில்லை. வடநாட்டில் இல்லாத எதிர்ப்பா தென்னாட்டில் ஏற்படப்போகிறது? ஏற்கெனவே அந்த எதிர்ப்புகளையெல்லாம் துச்சமாக முறியடித்துக் காட்டிவிட்டதே அது. இந்தியாவில் மட்டுமல்ல. மதவாத உணர்வுகள் தீவிரமாக இருக்கும் பாகிஸ்தானிலும் இத் திரைப்படம் வசூலில் முதலாமிடத்துக்கு முன்னேறிக்கொண்டிருக்கிறதே. அங்கு 18கோடியைத் தாண்டி. இதுநாள்வரை உச்ச வசூலீட்டிய 'வோர்' என்ற திரைப்படத்தின் 22கோடி வசூலை நெருங்கிக்கொண்டிருக்கிறது. இதன்பின்னும் தயங்குவதற்கு தாங்கள் ஒன்றும் பரீட்சார்த்த இயக்குநர் அல்ல. இன்னும் சொல்வதானால் சீனாவிலும் இத் திரைப்படம் 3500 திரையரங்குகளில் திரையிடப்பட்டிருக்கிறது என்றால் இதன் தார்ப்பரியம் பற்றிச் சொல்லவும் வேண்டுமா? தமிழ்நாட்டிலும். தமிழர்கள் மத்தியிலும் இந்த மடமை விலகவேண்டும் என்பதுபற்றி அக்கறை கொள்ள வேண்டிய ஒரு இயக்குனராக உங்களைக் காண விரும்புகிறோம். செய்வீர்களா?

உங்கள் ரசிகன்

ஜோஜ்



S.R.R. SPICES
A TRY WILL NEVER LET YOU STOP BUYING
Importé et Distrubé par SRR Épices
Canada Laval, Québec. H7Y OA8
info@srrspices.ca
Imported by SRR Spices
Laval, Quebec H7Y OA8
info@srrspices.ca
Website : http://www.srrspices.ca
100% Pure Natural
QUALITY IS OUR PRIORITY
NO ARTIFICIAL COLORS
Poids Net 100g.
Nett Weight 100g.
FOR YOUR DELICIOUS FOOD



VEERAR TAKEOUT & CATERING
MASALA DOSA
CHICKEN CURRY
MUTTON BIRYANI
Call Appan at
416-299-4541 or 647-293-6634



NEW ARRIVALS ON CHOICE SAREES
TIMO STAR TEXTILES
Timo Star Textiles
280 Elson Street, Unit #6, Markham, ON

ஆசாரக்கோவை மணித்துளிகள்

பண்டைக்காலத் தமிழ் நூல்களின் தொகுப்புக்களில் ஒன்றான பதினெண்கீழ்க்கணக்கில் ஒன்றான நீதி நூல் இது. மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத ஆசாரங்களை அதாவது ஒழுக்கங்களை எடுத்துக்கூறுகிறது. முள்ளியார் என்னும் புலவர் இதனை எழுதினார். இதைப் படித்து அன்றைய தமிழர்களின் வாழ்வியல் நெறியோடு இன்று நாம் கடைபிடிக்கும் முறையினை ஒப்பிட்டு பாருங்கள் . "ஆசார வித்து" (1) என்று தொடங்கி, "ஆசாரம் வீடு பெற்றார்" (100) என முடியும் நூறு செய்யுட்களில் பொது வகையான ஒழுக்கங்கள் மட்டுமன்றி நாளாந்தக் கடமைகள் அல்லது நித்திய ஒழுக்கங்களையும் தந்துள்ளார். அகத்தூய்மை அளிக்கும் அறங்களோடு உடல் நலம் பேணும் புறத்தூய்மையை வற்புறுத்திக் கூறும் பகுதிகளும் அதிகம் காணப்படுகின்றன. ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு விடயம் தொடர்பான ஒழுக்கத்தை எடுத்து இயம்புகின்றது. அவற்றைத் தொடர்ச்சியாக இங்கு தருகிறோம்.

1 ஆசார வித்து

நன்றி அறிதல், பொறையுடைமை, இன் சொல்லோடு,
இன்னாத எவ் உயிர்க்கும் செய்யாமை, கல்வியோடு,
ஒப்புரவு ஆற்ற அறிதல், அறிவுடைமை,
நல் இனத்தாரோடு நட்டல், - இவை எட்டும்
சொல்லிய ஆசார வித்து.

நன்றி மறவாமை, பொறுமை, இன்சொல், பிற உயிர்களைத் துன்புறுத்தாமை, கல்வி, ஒப்புரவு அறிதல், அறிவுடைமை, நல்ல இயல்புள்ளவர்கள் நட்பு இவை எட்டும் அறிஞர்களால் சொல்லப்பட்ட ஒழுக்கங்களாகும்.

2 ஒழுக்கம் தவறாதவர் அடையும் நன்மைகள்

பிறப்பு, நெடு வாழ்க்கை, செல்வம், வனப்பு,
நிலக் கிழமை, மீக்கூற்றம், கல்வி, நோய் இன்மை,
இலக்கணத்தால், இவ் வெட்டும் எய்துப - என்றும்
ஒழுக்கம் பிழையாதவர்.

நற்குடிப்பிறப்பு, நீண்ட வாழ்நாள், செல்வம், அழகுடைமை, நிலத்திற்கு உரிமை, சொல் மேன்மை, படிப்பு, பிணியில்லாமை இவை எட்டையும் ஒழுக்கம் தவறாதவர்கள் அடைவர்.

3 தக்கணை முதலியவை மேற்கொள்ளல்

தக்கிணை, வேள்வி, தவம், கல்வி, இந் நான்கும்
முப் பால் ஒழுக்கினால் காத்து உய்க்க! உய்யாக்கால்,
எப் பாலும் ஆகா கெடும்.

ஆசிரியர்க்கு தட்சணை கொடுத்தலும், யாகம் பண்ணுதலும், தவம் செய்தலும், கல்வியும், இந்நான்கினையும் காத்து வாழ வேண்டும். இல்லையென்றால் எந்த உலகத்திலும் பயன் இல்லை.

4 முந்தையோர் கண்ட நெறி

வைகறை யாமம் துயில் எழுந்து, தான் செய்யும்
நல் அறமும் ஒண் பொருளும் சிந்தித்து, வாய்வதின்
தந்தையும் தாயும் தொழுது எழுக!" என்பதே -
முந்தையோர் கண்ட முறை.

விடியற்காலையில் விழித்தெழுந்து, மறுநாள் செய்ய வேண்டிய அறச்செயல்களையும், வருவாய்க்கான செயல்களையும், சிந்தித்து, தாயையும் தந்தையையும் தொழுது ஒரு செயலைச் செய்ய அறிவுடையோர் சொல்லிய முறையாகும்.

பப்பாய்ப் பழம்




பப்பாய்ப் பழமுண்ணப் பாவையர்தம் சூலைதனைத்
தப்பா தழித்துவிடும் தன்மையதைச்- செப்பாதே
மூல முடன்கிராணி முந்துங் குடல் வாயு
சாலக் குணமாமே சாற்று.

குணம்: பப்பாய்ப் பழம் உண்பதினால் கரு அழியும். மூலம், கிராணி, வாயு முதலியன குணமாகும்.

உபயோகிக்கும் முறை: இந்தப் பழத்தின் மேற்றோலைச் சீவிச் சாதாரணமாக உண்பதுண்டு. இதை கர்ப்பமான பெண்கள் அளவுக்கதிகமாக உண்டால் கருவை வெளியேற்றிவிடும். இப் பழச்சாற்றை ஒரு கோப்பையிலிட்டு உலரவைத்துச் சிறிது ஈரம் இருக்கும்போதே 1-2 குன்றி எடை மாத்திரைகளாகச் செய்து நிழலில் வைத்துக் கொள்க. வேண்டும்போது வேளைக்கு 1 மாத்திரை வீதம் தினம் 2 -3 வேளை கொடுக்க, யானைக்கால் வீக்கம் வாங்கும். இதனுடன் பப்பாய் இலையை நன்றாய் மெழுகுபோல் அரைத்து அந்தக் காலில் வைத்துக் கட்ட வீக்கம் குறையும்.

-நன்றி: பதார்த்த குண விளக்கம் (கண்ணுச்சாமி பிள்ளை)




SUN CITY
SUPER MARKET
OPEN 7 DAYS
8.30AM-10.30PM
SUN CITY
SUPER MARKET
திறந்திருக்கும் நேரங்கள்
வார நாட்கள்: மு.ப. 9.30 - பி.ப: 9.30
வார இறுதி நாட்கள்: மு.ப. 8.30 - பி.ப. 10.00
இலங்கை, இந்திய, கரேபியன் நாடுகளில் இருந்து தருவிக்கப்பட்ட உடன் மீன் வகைகள் மற்றும்
ஊர் ஆட்டிறைச்சி
ஊர்க் கோழி
காட்டுப் பன்றி
புதிய சினிமா படங்கள்
மரக்கறிகள்
பழங்கள்
மளிகைப்பொருட்கள்
கனவாய், உடன் நண்டு, கோழி சுத்தம் செய்து கொடுக்கப்படும்.
சிறிய கட்டணம் அறவிடப்படும்
ஒவ்வொரு வாரமும் 50, 100 டொலருக்கு மேல் பொருட்கள் கொள்வனவு செய்பவர்களுக்கு ஒரு பொருளை சிறப்பு விலையில் 5 சதத்திற்கு பெறலாம்.
உணவகங்களுக்கு தேவையான Boneless mutton வெட்டிக்கொடுக்கப்படும்.
இறாத்தல் $4.75 மட்டுமே
SUN CITY PLAZA
Unit 18 2761 Markham Road, Scarborough, M1X1M4
Between Mcnicoll & Finch at Markham and Nashdene
e-mail: shop@suncitymarket.com
416- 724-6666
STEELS AVE EAST
MC NICOLL AVE
Nashdene
MARKHAM ROAD
FINCH AVE EAST

7 மார்ச் — சனி — மாசி 23
சு.நே:- மா-03.51-5.21 | இ.கா:- கா-09.51-11.21

8 மார்ச் — ஞாயிறு — மாசி 24
சு.நே:- கா-09.49-11.19 | இ.கா:- மா-05.19-06.49

9 மார்ச் — திங்கள்
சு.நே:- மா-01.48-03.18 | இ.கா:- கா-09.18-10.48

10 மார்ச் — செவ்வாய்
சு.நே:- மா-12.16-01.46 | இ.கா:- மா-04.46-06.16

11 மார்ச் — புதன்
சு.நே:- மா-06.15-07.45 | இ.கா:- மா-01.45-03.15

12 மார்ச் — வியாழன்
சு.நே:- கா-09.13-10.43 | இ.கா:- மா-03.13-04.43

13 மார்ச் — வெள்ளி
சு.நே:- கா-07.40-09.10 | இ.கா:- மா-12.10-01.40

14 மார்ச் — சனி
சு.நே:- மா-04.39-06.09 | இ.கா:- மா-10.39-12.09

15 மார்ச் — ஞாயிறு
சு.நே:- மா-10.37-12.07 | இ.கா:- மா-06.07-07.37

16 மார்ச் — திங்கள்
சு.நே:- மா-01.35-03.05 | இ.கா:- கா-09.05-10.35

17 மார்ச் — செவ்வாய்
சு.நே:- மா-12.04-01.34 | இ.கா:- மா-04.34-06.04

18 மார்ச் — புதன்
சு.நே:- மா-06.03-07.33 | இ.கா:- மா-01.33-03.03

19 மார்ச் — வியாழன்
சு.நே:- கா-08.59-10.29 | இ.கா:- மா-02.59-04.29

20 மார்ச் — வெள்ளி
[illegible]:- கா-07.28-08.58 | இ.கா:- மா-11.58-01.28

21 மார்ச் — சனி
சு.நே:- மா-04.26-05.56 | இ.கா:- மா-10.26-11.56

22 மார்ச் — ஞாயிறு
[illegible]:- கா-10.24-11.54 | இ.கா:- மா-05.54-07.24

23 மார்ச் — திங்கள்
சு.நே:- மா-01.23-02.53 | இ.கா:- கா-08.53-10.23

24 மார்ச் — செவ்வாய்
சு.நே:- மா-11.51-01.21 | இ.கா:- மா-04.21-05.51

25 மார்ச் — புதன்
சு.நே:- கா-07.50-09.20 | இ.கா:- மா-01.20-02.50

26 மார்ச் — வியாழன்
சு.நே: கா-08.47-10.17 | இ.கா:- மா-02.47-04.17

27 மார்ச் — வெள்ளி
சு.நே:- கா-07.15-08.45 | இ.கா:- மா-11.45-01.15

28 மார்ச் — சனி
சு.நே:- [illegible] | இ.கா:- கா-10.14-11.44

29 மார்ச் — ஞாயிறு
சு.நே:- கா-10.12-11.42 | இ.கா:- மா-05.42-07.12

30 மார்ச் — திங்கள்
சு.நே: மா-01.10-02.40 | இ.கா:- கா-08.40-10.10

31 மார்ச் — செவ்வாய்
சு.நே:- மா-11.39-01.09 | இ.கா:- மா-04.09-05.39

1 ஏப்ரல் — புதன்
சு.நே:- [illegible] | இ.கா:- மா-01.06-02.36

2 ஏப்ரல் — வியாழன்
சு.நே: கா-08.34-10.04 | இ.கா:- மா-02.34-04.04

3 ஏப்ரல் — வெள்ளி
சு.நே:- கா-07.03-08.33 | இ.கா:- மா-11.33-01.03

4 ஏப்ரல் — சனி
சு.நே:- மா-04.02-05.32 | இ.கா:- கா-10.02-11.32

5 ஏப்ரல் — ஞாயிறு
சு.நே:- [illegible] | இ.கா:- மா-05.29-06.59

6 ஏப்ரல் — திங்கள்
சு.நே: மா-12.58-02.28 | இ.கா:- கா-08.28-09.58

7 ஏப்ரல் — செவ்வாய்
சு.நே:- மா-11.27-12.57 | இ.கா:- மா-03.57-05.27

ஃபுளொஸைத் தவிர்க்க இத்தனை சாட்டா..?

டாக்டர்

யாழினி அரவிந்தன் (டென்டிஸ்ட்)

பல் என்றதும் நம்மவர்களுக்கு தெரிந்ததெல்லாம் பிறஷ் மட்டும்தான். ஃபுளொஸ் என்றால் தூர ஓடுகிறார்கள். அவர்கள் சொல்லும் காரணங்கள் எம் காதையே முட்டாளாக்கிவிடும். கேட்கிறீர்களா?

அதெல்லாம் நான் ஒழுங்காய் பிறஷ் பண்ணுறன். எனக்கேன் ஃபுளொஸ்?

பிறஷ் பண்ணினால் போதும் என்பது சிலரது நினைப்பு. ஆனால் பல் ஈறுகளுக்குள் சிக்கியிருக்கும் பதார்த்தங்களை பிறஷால் மட்டும் முற்றாக எடுத்துவிட முடியாது என்று தெரியாது இவர்களுக்கு.

என்ர பல்லெல்லாம் பேர்பெக்ட். அதுக்குள்ள ஒண்டும் சிக்காது. ஃபுளொஸ் எல்லாம் வேஸ்ட் ஒஃப் டைம்.

ஃபுளொஸ் பாவிக்கவேண்டியது வெறுமனே சிக்குண்ட உணவுப் பதார்த்தங்களை அகற்ற அல்ல. முக்கியமாக பற்களுக்கு இடையே படிந்திருக்கும் பிளேக் என்ற பக்டீரியாச் சுரப்பை அகற்றவே. அதில் கிருமிகள் குடிகொண்டிருக்கும். இது இவர்களுக்குத் தெரியாது. இதை வெறும் பிறஷ் கொண்டு துலக்கி அகற்ற முடியாது.

எனக்கு ஃபுளொஸ் பண்ணத் தெரியாது.

இது ஒரு சாட்டா? கனடா வந்து கார் பழகி ஓட முடிகிறது, ஒரு ஃபுளொஸ் பிடித்து பல் சுத்தம்செய்ய முடியாதா? உங்கள் பல்வைத்தியரிடமே கேட்டால் சொல்லித்தர மாட்டாரா என்ன?

பின்பற்களை ஃபுளொஸ் செய்ய முடியுமா என்ன?

Y shped flossers, Modern plastic pies, pointed rubber tips போன்றவற்றை பயன்படுத்தி இவற்றைச் சுத்தம் செய்யலாம். பல் வைத்தியரிடம் கேட்டால் தக்க வகையைப் பரிந்துரைப்பார்.

ஃபுளொஸ் செய்ய எங்கப்பா நேரம் கிடக்குது?

காலையில் முடியவில்லையானால் இரவு செய்யுங்கள். இல்லையேல் வேலைநேர இடைவேளைகளில் செய்யுங்கள். அல்லது பயணத்தின்போதுகூட செய்யலாமே! என்ன, கொஞ்சம் ரெடிமேட் ஃபுளொஸ் வாங்கி பையில் வைத்துக்கொள்ளுங்கள். இதுக்குப்போய் அலுப்பானேன்?

ஃபுளொஸ் செய்தால் இரத்தம் கசியுதே!

அப்படியானால் நிட்சம் நீங்கள் ஃபுளொஸ் பண்ண வேண்டுமல்லவா? இரத்தம் முரசுகளில் வடியுமேயானால் உங்கள் முரசுகள் முரசு நோயினால் (Gingivitis) பீடிக்கப்பட்டுள்ளன என்று அர்த்தம். முரசு நோயினைத் தீர்க்கும் மிக முக்கிய நிவாரணி ஃபுளொஸ ிங் தான். நீங்கள் முறையாக ஃபுளொஸ் செய்தும் உங்கள் முரசுகள் வீக்கமும் இரத்தக் கசிவும் தொடருமேயானால் பல்மருத்துவரை அணுகுங்கள். ஃபுளொஸ் செய்வதால் முரசு கரைகிறது என்று நினைப்பதே தவறு.

நான் கர்ப்பமாயிருக்கிறேன். முடியவில்லை.

கர்ப்பிணிகளுக்கு ஃபுளொஸ் செய்வது சிறிது கடினமாக இருக்கலாம். வாந்தி வரலாம். ஆனால் ஹோர்மோன் சமநிலை தழம்புவதால் கஉப்ப காலங்களில் ஈறு நோய்களுக்கான அறிகுறிகள் மிகையாகத் தென்படும். பல்மருத்துவரிடம் அறிவுரை பெறுவது உகந்தது.

எனது பற்கள் கோணல், ஃபுளொஸ் எல்லாம் பாவிக்க முடியாது.

இத்தகைய பற்களுக்கென்றே Waxed floss, loops, threaders போன்றவற்றை உள்ளன. இவை இலகுவாக பற்களிடையே நுழைந்து சுத்தம் செய்துவிடும்.

இப்போது ஓகேயா? காரணங்கள் சொல்லி ஃபுளொஸைத் தவிர்க்காமல் அதனை உங்கள் நாளாந்த நண்பனாக்கிக் கொள்ளுங்கள். ஒருநாள் உங்கள் பற்கள் சொல்லும் உங்களுக்கு நன்றி!

அத்தியாயம் !

வேட்டி கட்டிய இலங்கைத் தமிழர்களைப் பார்க்க அமெரிக்கர்கள் அன்று திரண்டிருந்தார்கள்!

அமெரிக்காவின் பிரசித்திவாய்ந்த "குளோசெஸ்ரர்" துறைமுகத்தில் திரண்டிருந்த அமெரிக்க மக்கள்.

அவர்களை விசித்திரமாகப் பார்த்தார்கள்!

அமெரிக்கப் பத்திரிகை நிருபர்களுக்குச் "சுடச்சுட" நல்ல செய்தி!

"அமெரிக்கா வந்துள்ள இலங்கையின் முதல் உத்தியோகப் பற்றற்ற தூதுவர்கள்"

-இவ்வாறு நியூயார்க்கிலிருந்து வெளியாகிக் கொண்டிருந்த "போஸ்ரன் குளோப்" என்ற தினசரி எழுதியது.

இத்தனைக்கும் -

அவர்கள் என்ன செய்தார்கள்?

நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை.

ஆழ்கடலில் சாகசப் பயணம் நிகழ்த்திய அந்த வரலாற்று நாயகர்களுடைய தீரக்கதையை, சரித்திரம்தான் சிலசமயம் மறந்தாலும், ஆண்டாண்டு காலம் சென்றாலும், ஓயாது ஓலமிட்டுக் கொண்டிருக்கும் கடல் அன்னை மறக்க மாட்டாள்!

நெஞ்சு சிலிர்க்கிறது!...

அமெரிக்காவில் அன்று ராஜாங்க மரியாதையுடன் வரவேற்கப்பட்டவர்கள்.

இலங்கையின் வடக்கு கரையோரப் பகுதியான வல்வெட்டித்துறை என்ற சிற்றூரில் பிறந்தவர்களே!

சிற்றூரில் பிறந்தவர்களாயினும்-

பிறந்த ஊரின் பெருமையையும், பெற்ற நாட்டின் மதிப்பையும் உலகறியச் செய்து விட்டார்கள் !

இன்றும்கூட,

வளர்ந்துவிட்ட விஞ்ஞான யுகத்திலும், வங்காள விரிகுடாவில்-

மிகச் சக்திவாய்ந்த நவீன ராட்சதக் கப்பல்களும், நீர்மூழ்கிக் கப்பல்களும் பெரும் பெரும் அபாயங்களுக்குள்ளாகிக் கடலோடு சங்கமித்து விடுகின்றன.

கோடிக்கணக்கான ரூபா செலவில், நவீன யந்திரங்களைக் கொண்டு உருவாக்கப்படுகின்றன இப்போதய கப்பல்கள்!

ஆனால்-

1930-ம் ஆண்டில், உள்நாட்டு வேப்பமரத்தில், வல்வெட்டித்துறை சுந்தர மேஸ்திரியாரினால் அழகுற அமைக்கப்பட்ட இரட்டைப் பாய்மரக் கப்பலில்,

அந்தப் பெருங்கடலினுள் கப்பல் விட்டு வெற்றிப் பயணம் நடாத்தியிருக்கிறார்கள்-

வல்வெட்டித்துறைச் சிங்கங்கள்!

அத்திலாந்திச் சமுத்திரத்தில் அடலேறுகளாகப் பவனி வந்த "கதை" ஒரு வரலாறு!

வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவரை
கப்பலோட்டிய தமிழர்கள்

-ஈ.கே. ராஜகோபால்-

ஆம்,

ஒரு சரித்திரம் என்றுகூடச் சொல்லலாம்!

கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தது ஒரு சரித்திரமென்றால்,

மனிதன் அம்புலித் தரையில் காலடி வைத்தது ஒரு சாதனையென்றால்,

இதுவும் ஒரு சரித்திரம்தான்!

இன்று புதுப் புதுச் சாதனைகள்.

பத்திரிகைகளைத் திறந்ததும் "சாதனை, சாதனை" என்ற செய்திகள், பாராட்டுகள்!

ஆனால்-

இவற்றையெல்லாம் தூக்கியடித்து விடுவதுபோல, "சாதனைகளுக்கே சவால்விடும் சாதனைகள் செய்வோம்" என்று வல்வெட்டித்துறையின் கடந்த காலம் சொல்லாமல் சொல்லுகிறது!

-மாலுமி சாஸ்திரத்தை முற்று முழுதாகக் கரைத்துக் குடித்தவர்கள்!

-வான சாஸ்திரத்தைக் கற்றுத் தெளிந்தவர்கள்!

ஆழ்கடலை வெற்றி கொண்டு கடலோடுவதில் "தனிக்காட்டு ராஜா" க்களாக வல்வெட்டித்துறைக் கடலோடிகள் திகழ்ந்தனர் !

இந்திய மன்னர்கள் வல்வைக் கப்பலோட்டிகளைக் கௌரவித்தனர்!

இன்று நேற்றல்ல-

எழுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் இந்தக் கௌரவத்தைப் பெற்றனர்!

அப்பொழுதே ஆழ்கடலில் தாம் கட்டிய கனமிகு கப்பல்களைக் கடலோட விட்டார்கள்!

இந்திய மன்னர்கள் மட்டுமல்ல, ஒல்லாந்தரும், பேத்துக்கீயரும், பிரித்தானியரும்,

வல்வெட்டித்துறைக் கடலோடிகளுக்குத் தனி மதிப்பளித்தார்கள்!

முதலாம் மகாயுத்தத்துக்கு முன்னர்-

இந்தியாவுக்கும், மலாயாவுக்கும், பர்மாவுக்கும், பாய்மரக் கப்பல்கள் வல்வெட்டித்துறை துறைமுகத்திலிருந்து படை படையாகச் சென்று வந்தன!

இரண்டாம் மகாயுத்தம் வரை இது தொடர்ந்தது.

அரிசியும், நெல்லும், முத்துச்சம்பாவும், கறிச்சரக்கும் அங்கெல்லாம் சென்று ஏற்றிக்கொண்டு வந்து நமது கஸ்டத்தைத் தீர்த்த பெருமை வல்வெட்டித்துறைக் கடலோடிகளைச் சாரும்.

அதிராம் பட்டினம்,

நாகபட்டினம்,

காக்கிநாடா,

கல்கத்தா,

சிட்டகொங்,

ரங்கூன்,

பினாங்கு,

பேன்ற இடங்களிலெல்லாமத் வல்வெட்டித்துறைக் கப்பலோட்டிகள் கப்பல் செலுத்திய கதைகள் ஏராளம்! ஏராளம்!!

-தொடரும்

முதுகுவலியைப் போக்கும் முத்திரைகள்

பெரும்பாலான முத்திரை வைத்தியத்தில் இரு கைகளாலும் ஒரே நேரத்தில் ஒரே விதமான முத்திரையைச் செய்வதே வழக்கம். ஆனால் முதுகுவலி போக்கும் முத்திரை போன்ற வெகு சில முத்திரைகளில் மட்டும் ஒரு கையில் ஒரு முத்திரையும் மறு கையில் மற்றொரு முத்திரையும் என இரு வேறு முத்திரைகளை ஒரே நேரத்தில் செய்ய வேண்டும்.

சாதாரண முதுகுவலிகள், சிறிதளவு முதுகெலும்புத் தேய்மானம் போன்றவற்றால் சிரமப்படுபவர்களுக்கு முத்திரை சிகிச்சை மட்டுமே போதும். ஆனால் முதுகெலும்பில் உருவாகும் காசநோய் போன்ற நோய்கள் உள்ளவர்கள் அவற்றுக்கான விசேட மருத்துவ சிகிச்சைகளைப் பெற வேண்டும்.

வெகுகாலமாக முதுகுவலியால் அவதிப்படுபவர்கள் மட்டுமே தொடர்ந்து 6 மாதங்கள் இந்த முத்திரையைச் செய்ய வேண்டியிருக்கும். சில நாட்கள் அல்லது சில வாரங்களாக இருக்கும் முதுகு வலிக்கு சில தினங்களிலேயே நல்ல பலன் கிடைக்கும். முதுகுவலி முற்றிலும் மறைந்துவிட்டால் இவர்கள் முத்திரையை நிறுத்தி விடலாம்.

செய்முறை:

<u>வலது கை:</u> பெருவிலின் நுனிப் பகுதியோடு நடுவிரல், சிறுவிரல் ஆகியவற்றின் நுனிப் பகுதிகளை இணைக்கவும். அதிக அழுத்தம் வேண்டாம். பிற இரு விரல்களும் (சுட்டு விரலும் மோதிர விரலும்) நேராக இருக்கட்டும்.

<u>இடது கை:</u> சுட்டு விரலை மடித்து அதன் நுனிப்பகுதியால் பெருவிரலிலுள்ள முதல் கோட்டைத் தொடுங்கள். சற்று அழுத்தம் கொடுங்கள். பிற மூன்று விரல்களும் நேராக இருக்கட்டும். முழுக் கவனமும் செய்யும் முத்திரையின் மேல் இருக்கட்டும்.

<u>அமரும் நிலை:</u> எந்த நிலையில் இருந்தும் செய்யலாம். அமர்ந்து கொண்டு செய்ய முடியாதவர்கள் படுத்திருந்தும் செய்யலாம். ஆனால் கழுத்தும் முதுகும் நேராக இருக்க வேண்டும்.

<u>செய்யும் நேரம்:</u> ஒரு முறைக்கு 4 நிமிடங்களாக 4 முறை, காலை, மதியம், மாலை, இரவு வேளைகளில் செய்யலாம்.





வயிற்றுள் வளரும் எதிரி

நாளுக்கு நாள் நாம் புதுப்புது நோய்களைக்கண்டு திகைக்கிறோம். உண்மைதான். நவீனத்துவத்தோடு சேர்ந்து நவீன நேய்களும் உருவெடுக்கின்றன. ஆனால் நாம் முன்னர் நோய்களாக இனங்கண்டு கொள்ளாதிருந்து சில இப்போதான் நோய்களென அடையாளம் காணப்படுகின்றன. அதிலும் மருத்துவர்களிடையே கருத்து வேறுபாடுகளும் உள்ளன. இத்தகைய கருத்து வேறுபாடுகளுக்குள் சிக்கி, இதன் ஆபத்து மக்களிடையே பெரிதும் உணர்த்தப்படாத ஒரு நோய்தான் கன்டிடா. ஏனெனில் இந்தக் கன்டிடா எப்போதுமே எல்லோரிலுமே நோயாக பரிணமிப்பதில்லை. ஆனால் அது நோயாக உருவெடுக்கும்போது மிகுந்த வேதனையை மட்டுமல்ல ஆபத்தையும் விளைவித்து விடுகிறது. அந்த ஆபத்து கான்சர் வரை கொண்டு செல்ல வல்லது.

நாம் அதிக அவதானத்துடனிருக்கும் நோய்களைத் தடுக்க நாம் ஏதும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை களையும் வழிவகைகளையும் மேற்கொண்டிருப்போம். ஆனல் அவதானமின்றியிருக்கும் நோய்கள் எம்மையறியாது எம்மைத் தாக்கும்போது செய்வதறியாது தடுமாறி, அதற்குப் பலியாகிப் போவோம். இதுவே, நாம் இக் கன்டிடா நோய் குறித்து அறிந்துகொள்ளவேண்டிய அவசியத்துக்குப் பிரதான காரணம்.

கன்டிடா என்றால் என்ன?

சரி, கன்டிடா என்றால் என்ன? நாம் கன்டிடா என்று பொதுவாகச் சொன்னாலும் கன்டிடா என்ற வகையைச் சார்ந்த பல நுண்ணுயிர்கள் இருக்கின்றன. அவற்றில் நாம் இங்கே குறிப்பிடுவது கன்டிமா அல்பிகான்ஸ் என்ற நுண்ணுயிரையே. இது ஒரு பங்கஸ். பூஞ்சணம் என்போமே, பழய பாண்துண்டில் படர்திருக்குமே, அதுபோன்ற ஒரு பூஞ்சண வகை. பங்கசுக்கள் ஒருவகையில் பச்சையமற்ற தாவரங்கள். ஏனெனில் அவை தாவரக் கலச்சுவரைக் கொண்டிருக்கின்றன. காளான்களும் பூஞ்சண வகைதான் - கண்ணால் தெளிவாகப் பார்க்கக்கூடிய பெரிய பூஞ்சணம் அது. ஆனால் கன்டிடாவோ, நுண்ணுயிர் வகையைச்சார்ந்த சாதாரண கண்ணுக்குத் தெரியாத பூஞ்சணம். அது நாம் ஊரில் அப்பம் புழிக்கவைக்க பயன்படுத்தும் ஈஸ்ட் வகையான பங்கசு. எமது வாயிலும் சிறுகுடலிலும் வாழ்வது. இக் கன்டிடா அல்பிகான்ஸ் அனேகமாக உலகில் உள்ள ஒவ்வொரு மனிதனின் உடலிலும் குடிவாழ்கிறது.

அது சாதாரணமாக வாழும்போது ஆபத்தே இல்லை. காற்றில், நீரில், நிலத்தில் எத்தனையோ நுண்ணுயிர்கள் நமக்கு ஆபத்துத் தராமலே வாழ்ந்து செல்வதுபோல் இவை வாயிலும் வயிற்றிலும் வாழ்ந்து வருகின்றன. சாதாரண வேளைகளில் இவை எமக்கு நன்மையே செய்கின்றன. எமது உணவுச் சமிபாட்டிற்கு உதவுவதுடன், சத்துப்பொருட்களை அகத்துறிஞ்சிக் கொள்வதற்கும் துணை செய்கின்றன. இதனால்தான் சில மருத்துவத் துறைகளும், மருத்துவர்களும் கன்டிடாவை ஒரு நோயாகவே கருதுவதில்லை. அதனால் இவைகுறித்த ஆலோசனைகள் எமக்கு அதிகம் கிடைப்பதில்லை. ஆனால் இவை எப்போது பிரச்சினையானவையாக மாறுகின்றனவென்றால் எம் உடலில் உள்ள அவற்றின் குடித்தொகை அளவுக்கு மீறிப் பெருகும் போதுதான். அப்படி அது நோயாக மாறும்போது அதனை மருத்துவ ரீதியில் கன்டிடியாஸிஸ் என்போம்.

சாதாரணமாக அவற்றின் குடித்தொகை அளவுக்கு மீறிப் பெருகுவதில்லை. அவற்றோடு கூடவே குடி கொண்டிருக்கும் சில நல்ல பக்டீரியாக்கள், இவ்வாறு கன்டிடா பெருகிவிடாதவாறு கட்டுப்படுத்தி வைத்துக் கொள்கின்றன. ஆனால் ஏதோ வகையில் இக் கன்டிடாக்களுக்கு குடிசனப் பெருக்கம் செய்ய வாய்ப்புக் கிடைத்தால், அவை சட்டெனப் பெருகி எமக்கு பெருங் கேடுகளை விளைவித்துவிடுகின்றன.

கன்டிடா பெருகுவது எதனால்?

நாம் எமது நோய்களுக்காக நாம் வாய்மூலம் தொடர்ச்சியாக உள்ளெடுக்கும் அன்டிபயடிக்ஸ் மருந்துகள், வயிற்றுக்குள் சென்று நோய்க் கிருமிகளோடு சேர்ந்து கன்டிடாவைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கும் நல்ல பக்டீரியாக்களையும் சேர்த்தே அழித்துவிடும்போது, கன்டிடா கட்டுப்பாடின்றிப் பெருக வாய்ப்பு ஏற்பட்டு விடுகிறது.

தொடர்ச்சியாக நீண்ட காலம் சீனி, மற்றும் காபோஹைதரேட் (மாப்பொருள்) செறிவான உணவு உட்கொள்வதும் கன்டிடாவுக்கு அதிக போசனை அளித்து பெருக வைத்துவிடும். ஊறுகாய் போன்ற ஊறவிட்ட பதார்த்தங்களை அதிகளவு உணவில் சேர்ப்பதும் பாதகமானது. அது மட்டுமன்றி அதிகளவு மதுபானம், போதை வஸ்த்து போன்றவற்றின் பாவனையும் கன்டிடா பெருக ஏதுவாக அமையும். அதுமட்டுமன்றி, மன உளைச்சலும் கன்டிடாப் பெருக்கத்துக்கு வழிவகுக்கும்.

உங்கள் நோயெதிர்ப்பு தொகுதியான இம்யூன் - அதாவது நிணணீர் தொகுதி பலஹீனமடைந்தாலும் கன்டிடா வேகமாகப் பெருகத் தொடங்கிவிடும்.

கன்டிடியசிஸ் அதிகரிப்பு

கன்டிடியசிஸ் நோய் அண்மைய தாசாப்தத்தில் உலகில் அதிகளவு வேகமான வளர்ச்சி கண்டுள்ளது. எமது நவீன உணவுப் பழக்கம், வேகமான வாழ்க்கை முறையின் மன அழுத்தம், அதிகப்படியான அன்டிபயட்டிஸ் மருந்துப் பாவனை என்பன இதற்கு பிரதான காரணமாக உள்ளன.

கன்டிடாவின் செயற்பாடு

கன்டிடா வயிற்றினுள் இருக்கும்போது பிரச்சினை தருவதில்லை. ஆனால் அது அபரிவிதமாக பெருகும்போது, சிறுகுடலின் சுவரைத் துளைத்து, இரத்தக் குழாய்களுக்குள் உள்ளிட்டு, அங்கே ஒருவகை நச்சுப் பதார்த்தத்தைச் சுரந்து விடுகிறது. இந்த நச்சுப் பாதார்த்தம் எமது நோயெதிர்ப்பு தொகுதியின் செயற்பாட்டைத் திண்டாட வைத்து விடுகிறது. அத்துடன் பல கேடான விளைவுகளை உடலில் தோற்றுவிக்கின்றது. கன்டிடாக்கள் இப்படி சிறுகுடலைத் துளைப்பதால் சிறுகுடல் ஒழுக்கும் ஏற்பட்டு பல உடற் கோளாறுகளுக்கு வழி செய்கின்றது.

பொதுவான அறிகுறிகள் 10

1. தோலிலும் நகத்திலும் பங்கசுத் தொற்று ஏற்படல். (அத்தலீட்ஸ் ஃபுட் எனப்படும் விளையாட்டு வீரர்களின் பாதங்களில் ஏற்படும் துர்நாற்றத்துக்கான பங்கஸ் தொற்று, காற் பெருவிரலில் ஏற்படும் பங்கஸ் தொற்று போன்றவை)
2. களைப்பாக உணர்தல், அல்லது ஃபிப்ரேமையால் ஜியா எனும் இடைவிடாத சோர்வு
3. சமிபாட்டுக் கோளாறு - வயிற்றுப்போக்கு
4. தைரோய்ட் போன்ற நிணநீர் கோளாறுகள், று மடொய்ட் ஆத்திரைட்டிஸ், பெருங்குடல் அழர்ச்சி, தோல் அழர்ச்சி, சொரைசிஸ் எனப்படும் தோல் நோய் மற்றும் சொறி, ஸ்கிறோடேர்மா எனப்படும் தோல் மற்றும் உட்புற சுவர்கள் தடிப்புறும் நோய்
5. கருத்தூன்றுவதில் சிரமம், குறைந்த ஞாபகசக்தி, கவனக் குறைவு சம்பந்தமான நோய்கள், பிறைன் ஃபொக் எனும் மந்த புத்தி
6. எக்ஸிமா, சிரங்கு, ஹீவிஸ் போன்ற தோல் நோய்கள்
7. மனநிலை ஊசலாட்டம், விரக்தி, அங்ஸிட்டி எனும் ஒருவித அச்சம்
8. பால் உறுப்புக்களில் தொற்று மற்றும் கடி, அழர்ச்சி
9. காதில் பாரதூரமான அலேர்ஜி, அல்லது கடி
10. இனிப்பு மற்றும் மாப்பொருள்களாலான உணவு களுக்கான பெரு நாட்டம்.



டாக்டர்கள் கண்ணில் மண்தூவும் கண்டிடா.

இந்த அறிகுறிகளைப் பார்த்தீர்களா? இவை நேரடியாக கன்டிடா எனும் பங்கசால் ஏற்படுபவை அல்ல. ஆனால் இப் பங்கசினாலும் அதன் சுரப்புகளாலும் ஏற்படும் உடற் கோளாறுகளால் மற்றும் அவை வாய்ப்பளிக்கும் புதிய நோய்களால் ஏற்படுபவை. அதனால் இவ் அறிகுறிகள் ஏனய நோய்களை சந்தேகிக்க வைப்பதால் பல வைத்தியர்களால் இதன் காரணம் கன்டிடாதான் என இனங்காண முடியாதிருக்கிறது. அதனால் கன்டிடாவின் தாக்கத்தையும் அதன் நிலையையும் பல டாக்டர்கள் சரியாக இனங்கண்டுகொள்ளத் தவறிவிடுவதுண்டு. துரதிஸ்டவசமாக பல டாக்டர்கள் கன்டிடியாசிஸ் ஏற்படுத்தும் பிரச்சினைகளை கன்டிடாவால் ஏற்படும் நோயாக இனங்கண்டு கன்டிடாவைக் கட்டுப்படுத்த வைததியம் மேற்கொள்ளாமல், வெறுமனே அதனால் ஏற்படும் அறிகுறிகளுக்கு மட்டும் வைத்தியம் செய்கிறார்கள். உதாரணமாக கன்டிடாவினால் தோற்றுவிக்கப்படும் நோயின் வெளிப்பாடு பெண்குறியிலோ, வாயிலோ தோன்றினால், அவர்கள் அவற்றை வெறும் இன்ஃபெக்சன் (கிருமி தொற்று) என்று கருதி அதற்கே வைத்தியம் செய்கிறார்கள். சிலர் அது ஒன்றுமேயில்லை, உங்கள் மனப் பிரமைதான் என்று, உங்களுக்கு மன அழுத்தத்துக்கான மருந்துத் துண்டை எழுதிக் கையில் கொடுத்து அனுப்பிவிட்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. ஏனெனில் அதன் அறிகுறிகள் குழப்பமானாவை, மருத்துவ உலகிலும் இதை நோயாகப் பார்ப்பதில் குழப்பங்கள் உள்ளன. அதனால் நாம்தான் உரிய மருத்துவரைத் தெரிவு செய்து நாடவேண்டும்.

அபரிமிதப் பெருக்கத்தை அறிவது எப்படி?

1. இரத்தப் பரிசோதனை - இரத்தப் பரிசோதனையில் கன்டிடா எதிர்ப்பு இரத்த அணுக்களின் எண்ணிக்கை பெருகியிருப்பதைக் கொண்டு இதைக் கண்டுபிடிப்பர். ஆனால் இரத்தப் பரிசோதனை மட்டும் போதாது. ஏனெனில் இதன்போது அறிகுறி தென்படாதும் போகலாம்.
2. மலச் சோதனை - சாதாரண சோதனையாக அன்றி, பிரத்தியேகமாக மலச் சோதனை அவசியம் (ஊழஅிசநாநளெைந ளவழழட வநளவ). எவ்வகை கன்டிடா உள்ளதென்றும், அதற்கு என்ன வைத்தியம் உகந்ததென்றும் அறிய இச் சோதனை உதவும்
3. சிறுநீர் சோதனை - அபரிமிதமாக பெருகிவிட்ட கன்டிடாவின் கழிவுப் பொருட்கள் இச் சோதனையால் கண்டறியப்படும்

அபரிமித கன்டிடா பெருக்கத்துக்கான வைத்தியம் என்ன?

இதற்கு வைத்தியம் செய்வதானது, கன்டிடாவின் அபரிமித வளர்ச்சியைத் தடுப்பது, கன்டிடாவைக் கட்டுப்படுத்தும் நல்ல பக்டீரியாவை மீளவும் செயற்பட வைப்பது, குடற் புண்களை ஆற்றி, கன்டிடா இனி எப்போதும் இரத்தக் குளாய்க்குள் ஊடுருவாது செய்வது, ஆகிய விடயங்களை உள்ளடக்கியது.

அபரிமித கன்டிடாப் பெருக்கத்தை ஒழிப்பதென்பது பிரதானமாக உணவுமுறை மாற்றத்தில் தங்கியிருக்கிறது. மாப்பொருள், சீனிச் சத்து, மதுபானம் போன்றவை எந்த வடிவத்திலும் உட்கொள்ளப்படுவதைத் தவிர்ப்பது அவசியம். மாற்று உணவுகளாக நார்த் தன்மை கொண்ட உணவுகள் பழங்களைப் புசிப்பது உகந்தது.

உணவுமுறை மாற்றம் கன்டிடாவை கட்டுப்படுத்த சுமார் ஆறு மாதங்கள் எடுக்கும். அதனால், பங்கசுக்கு எதிரான மருந்துகளை டாக்டரின் சிபாரிசில் உட்கொள்ள வேண்டியிருக்கும். தேங்காய் எண்ணெய்யிலிருந்து எடுக்கப்படும் கப்ரிலிக் அசிட் கன்டிடாவின் சுவர்களைத் துளைத்து அவற்ளைக் கொல்கின்றது. உரிய அளவில் அதனையும் வைத்தியரின் ஆலோசனைப்படி பயன்படுத்தலாம்.

கன்டிடாவைக் கட்டுப்படுத்தும் நல்ல பக்டீரியாவை மீளப் பெருகவைக்க புறோபயோட்டிக்ஸ் மருந்து வகைகளை பயன்படுத்த வேண்டியிருக்கும். இவை பற்றி நீங்கள் அறிந்திருப்பதற்காகவே இங்கு தெரிவிக்கப் படுகிறதேயன்றி, இவற்றை வைத்தியர்தான் முடிவு செய்ய வேண்டும்.

இறுதியான, உங்கள் குடற் புண்ணை ஆற்றும் வைத்தியமானது உங்கள் சமிபாட்டுப் பாதையைப் பாதிக்கக்கூடிய உணவுத் திரட்சிகளை அகற்றி, சமிபாட்டுக்கும் ஊட்டச்சத்து அகத்துறிஞ்சலுக்கும் உதவக்கூடிய அறிமுகப்படுத்துவதாகும். இத்தகைய கன்டிடா நோய்க்கான தகுந்த வைத்தியம் செய்ய வேண்டுமானால் அதில் பயிற்சியும் தேர்ச்சியும் பெற்ற ஃபங்ஷனல் மெடிசின் டாக்டர் ஒருவரை நீங்கள் நாட வேண்டும்.

விளையாட்டு

ஹொக்கி – டொரண்டோ மேர்பிள் லீ:ப்

ஹொக்கி ரசிகர்களை ஏமாற்றி வரும் மேர்பிள் லீஃப் அணி இறுதிப் பத்துப் போட்டிகளில் இதுவரை 3-6-1 என்ற வீதத்தில் பெறுபேறுகளைத் தக்கவைத்துள்ளது. 2014-15 சீசனில் மிகவும் தரங்குறைந்த குழுவாக விளையாடி வருகிறது. பல ஹொக்கி ரசிகர்கள் எஞ்சியுள்ள 25 போட்டிகளில் சாதகமான முடிவுகளை எதிர்பார்த்து தொடர்ந்து தங்கள் ஆதரவைத் தெரிவித்து வருகின்றனர். இம்முறை டொரொண்டோ மேர்பிள் லீஃப் அணி, Play Off போட்டிகளில் தெரிவாகும் வாய்ப்பு கடினமாகத்தான் இருக்கப்போகிறது.

கூடைப்பந்தாட்டம் - டொரண்டோ ரெப்டேர்ஸ்

ரசிகர்களின் அமோக வரவேற்பைப் பெற்று திறமையாக விளையாடிவரும் ரெப்டேர்ஸ் அணியினர் Eastern Conference ல் இரண்டாவது இடத்தைத் தொடர்ந்து தக்கவைத்துள்ளனர். 2014-15 சீசனில் Play Off ற்குத் தெரிவாகி திறமையாக விளையாடக்கூடிய அணியாகத் திகழுமென்பதில் ஐயமில்லை.

கிரிக்கெட்

2015ல் கிரிக்கெட் ரசிகர்களுக்கு விருந்தாக இருக்கும் ஐசிசி வேர்ல்ட் கப் போட்டிகள் விறுவிறுப்பாக நடந்து வருகின்றன. தற்போது நடந்து முடிந்த போட்டிகளின் அடிப்படையில் சிறந்த அணியாக நியூஸிலாந்து அணி விளங்குகிறது. துடுப்பாட்டத்திலும், பந்து வீச்சிலும் சரிசமமாக எதிர்த்துநிற்கும் அணிகளைத் திக்குமுக்காட வைத்து வருகின்றனர். ஆனால் அவுஸ்ரேலியாவுக்கு எதிரான போட்டியில் அவுஸ்ரேலியாவின் சிறந்த பந்துவீச்சாளர்களினால் சிறிது ஆட்டம் கண்டு இறுதியில் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது. இவ்விரு அணிகளும் ஐசிசி வேல்ட் கப் 2015 ஹோம் டீமாக இருப்பதால் இவற்றுக்கான வெற்றி வாய்ப்பு வீதம் அதிகமாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

கிறிஸ்கேல் புதிய உலக சாதனை (Chris Gayle)

வெஸ்ட் இண்டியன் துடுப்பாட்ட வீரர் கிறிஸ்கேல் 147 பந்தில் பத்து 4, பதினாறு 6 களை விளாசி, 215 ரண்கள் குவித்து 50 ஓவர் வேர்ல்ட் கப் போட்டியில் உலகசாதனை படைத்தார்.

இலங்கை அணி

தனது ஆட்டத்தை மெதுவாக ஆர்ப்பாட்டமில்லாமல் ஆரம்பித்து, இங்கிலாந்து அணிக்கு எதிரான அமோக வெற்றியின் மூலம் காலிறுதி ஆட்டத்துக்குத் தகுதியான அணியாகத் திகழ்கிறது. என்றாலும் நியூஸிலாந்து அல்லது ஒஸ்ரேலியா அணியுடன் மோதி வேர்ல்ட் கப்பைத் தட்டிச்செல்ல முடியுமா என்பது சந்தேகம்தான்.

Pool A

7 அணிகளில் கால் இறுதிப் போட்டிகளுக்குத் தெரிவாகும் நிலையிலுள்ள நியூஸிலாந்து, ஒஸ்ரேலியா, இலங்கை அணியினருடன் நான்காவது அணியாக பங்களாதேஷ் அணியினருக்கு கூடிய வாய்ப்பு இருந்தாலும் அதற்கும் இங்கிலாந்துக்கும் இடையிலான போட்டி ஒரு பலப்பரீட்சையாக இருக்கும்.

Pool B

போட்டியிடும் 7 அணிகளில் காலிறுதிப் போட்டிக்கு இந்தியா தொடர்ந்து வெற்றிகளை ஈட்டித் தெரிவாகவுள்ளது. மற்றைய 3 அணிகளுக்கும் பலமான போட்டி நிலவுகிறது. ஆயர்லாந்து அணியின் திறமையான விளையாட்டால் வெஸ்டின்டீஸ் அணியினரை வீழ்த்தியதன் மூலம் காலிறுதி ஆட்டங்களுக்குச் செல்லும் வாய்ப்பு இனிவரும் போட்டிகளிலிருந்தே தெரியவரும்.

பெண்களுக்கான உலகக்கிண்ண உதைபந்தாட்டம் 2015

இவ் வருடம் ஜுன் 6ல் இருந்து ஜுலை 5 வரை ஒருமாத காலங்களுக்கு கனடாவில் இப் போட்டிகள் வக்கூவர், எட்மென்டன், வினிபெக், ஒட்டோவா, மொன்றியல், மொன்க்டன் ஆகிய ஆறு இடங்களில் நடைபெறவுள்ளன. A B C D E F ஆகிய ஆறு பிரிவுகளில் ஒவ்வொன்றிலும் 4 நாடுகள் வீதம் 24 நாடுகள் பங்குபெற்றுகின்றன. A பிரிவில் விளையாடும் கனடா அணி ஹோம் டீமாக இருப்பதால் வெற்றிவாய்ப்புக்கான இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுமா என்பது கனேடிய ரசிகர்களின் எதிர்பார்ப்பு.



பான் ஆம் கேம்ஸ்

இதேவேளை டொரெண்டோவில் துரடல 10 முதல் 26ம் திகதிவரை நிகழவுள்ள பன் ஆம் விளையாட்டுக்களுக்கான அனைத்து ஏற்பாடுகளும் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப் போட்டி ஏற்பாடுகளுக்கான வேலை வாய்ப்புகள் பல இணைய்தளத்தின் மூலம் கோரப்பட்டும், டிக்கெட் விற்பனைகள் ஆரம்பிக்கப்பட்டும் வருகின்றன.

பாராட்டுக்கள் ஜெசிகா!




சுப்பர் சிங்கர் இந்திய பாடல் போட்டி நிகழ்ச்சியில் புலம் பெயர்ந்த ஈழத்துச் சிறுமியொருத்தி முதன் முதலாக இறுதிச் சுற்றுக்குத் தெரிவாகி முதல் மூன்று வெற்றியாளர்களில் ஒருவராகி - இரண்டாம் இடத்தை வென்றுள்ளாரென்றால் அது மிகக் கடுமையான சாதனையே. இச் சாதனையை கனடாவைச் சார்ந்த சிறுமி ஜெசிக்கா ஏற்படுத்தியதானது கனடியத் தமிழர்களுக்கு சிறப்பான பெருமை. இதில் ஜெசிக்கா உள்ளாகியிருக்கக்கூடிய சிரமங்களும் மேற்கொண்டிருக்கக்கூடிய பற்றுறுதியுடனான உழைப்பும் அதற்கு அவரின் குடும்பத்தவர்கள் எடுத்துக்கொண்ட சிரமமும் மிகப் பெரிது. சங்கீத பாரம்பரியத்தில் ஊறிய இந்தியாவின் 6கோடி தமிழ் மக்கள், அவர்களுக்கு மேலதிகமாக அயல் மாநில மக்கள் மத்தியிலிருந்து கலந்துகொள்ளும் சங்கீத ஞானமும் பயிற்சியும் அதற்கான வசதி வாய்ப்புகளும் கொண்ட ஏராளமான சிறுவர்கள் மத்தியில் இவர் முதல் நிலைகளுக்குத் தேறியுள்ளமை வியக்கத்தக்கதே. இப்படிப் பெற்ற பரிசுத் தொகையில் ஒரு சதத்தையும் தனக்கு எடுத்துக்கொள்ளாமல் எந்தச் சலனமுமின்றி அத்தனையையும் அநாதைகளுக்கு அவர் வழங்கியது, அவரது திறமைக்கு மேலான பரந்த மனப்பான்மையை எடுத்தியம்பியுள்ளது. மீடியாக்களில் வலைத் தளங்களில் இப் போட்டி முடிவுகள் குறித்து பலவிதப்பட்ட உணர்ச்சிபூர்வ கருத்தாடல்கள் எழுந்தபோதும், யாவற்றையும் சாதாரணமாக எடுத்துக்கொண்டு, கிடைத்ததை திருப்தியுடனும் மகிழ்ச்சியுடனும் நன்றியுடனும் ஏற்றுக்கொண்டு, அந்தப் பக்குவத்தை எம்மவர்க்கு எடுத்தியம்பியுமிருக்கிறார் இந்தச் சின்ன வயதில்! பாராட்டுக்கள் ஜெசிகா!

'98 காலங்களில் ஆனந்த விகடனில் சிறுகதைக்கு ரூ.250 சன்மானம் தந்தார்கள். அந்த 250 ரூபாய்க்காக எழுதிய சிறுகதைகளில் ஒன்று. 250 ரூபாய் அந்தக் காலத்தில் தாராளமாக ஒரு வாரத்திற்குத் தாங்கும்.

பிரியங்களுடன் – ராம். (திரைப்பட இயக்குநர்)

கருநாக்குக் கிழவர்



கருநாக்குக் கிழவர் செத்துப் போனார்.

அவரைத் தெரியாது, அவருடைய ஆயுள் முழுவதையும் எவ்விதம் வாழ்ந்து வந்தார் என்று தெரியாது. ஆனால் அவருடைய சாவைப் பற்றி மிக நெருக்கமாகத் தெரியும். என் நெஞ்சைக் கவ்விப் பிடித்திருக்கிற வலியின் உருவத்தில் அவரின் தளர்ந்த தேகம் இருப்பது தெரியும். இரண்டு நாட்களுக்கு முன்புவரை அவரைச் சந்தித்தது கிடையாது.

இல்லை, சந்திப்பதற்கும் எதிரில் பார்ப்பதற்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்கிறது. எனவே எதிரில் பார்த்தது கூட கிடையாது என்றுதான் சொல்ல வேண்டும்.

தாம்பரத்தில் இருந்து பீச் செல்கிற ரயிலில் நைந்துபோய் அக்கிழவர் எனக்கெதிரே வந்தமர்ந்தார். அவரின் இருப்பைப் பற்றிய எவ்வித சிரத்தையுமின்றி பிளாட்பார்மில் அதிகரித்த கூட்டத்தோடு கண்களை மேயவிட்டிருந்தேன். தலைக்கு மேல் கறுப்புக் காற்றாடி சுற்றத் தொடங்கியது. மலையிலிருந்து விடுபட்ட பாறையின் சப்தத்துடன் விசை மிகுந்த குலுக்கல்களைத் தூக்கியவாறு ரெயில் கிளம்பியது. "தம்பி எக்மோர் வந்தா சொல்லுப்பா" தடித்த கரகரப்பான குரலில் அக்கிழவர் என்னோடு முதன் முதலாகவும், இறுதியாகவும் பேசிய போதுதான் அவரைப் பார்த்தேன்.

இமையின் மத்தியில் தொடங்கி மேல்முடி வரைக்கும் குங்குமம். நெற்றிச் சுருக்கப் பள்ளங்களில் குங்குமம் ஈரமாயிருந்தது. சரியாக வாரப்படாது நரைத்துத் தோள் வரை தொங்குகிற முடி. சிவப்புக் கோடுகள் பரவிநின்ற பழுப்பு விழிகள். கீழ் உதட்டின் தோல் வெடித்து இரத்தம் காய்ந்த வரிகள். கரை மண்டிய வெள்ளை முழுக்கை சட்டையின் கைப்பிளவு முழங்கை வரை நீண்டிருக்கிறது. கால் நகங்கள் மண் அப்பி தடித்துக் கருப்பாய் நரம்பும், தோல் சுருக்கமும் சூழ்ந்திருந்தது. அழுத்தமாய் மஞ்சள் நிறத்தில் உள்ளங்கை ரேகைகள். விளக்கு வெளிச்சத்தில் கழுத்தின் பாதி வரை முகத்தின் நிழல். மேலும் சட்டையின் சுருக்கங்களில் இருந்து அனைத்து இடங்களிலும் நிழல் அவரை பீடித்திருந்தது. அவரின் இடக்கை ஓரத்தில் ஒரு மஞ்சள் துணிப்பை. அப்புறம் ஞாபகம் இல்லை. செத்துப்போன கிழவரைப் பற்றி தெரிந்தது இவ்வளவுதான்.

அடுத்த நிறுத்தம். ஆட்கள் இறங்கி ஏறி சத்தம் பெருத்து எனப் பதிவான விசயங்கள். கிழவரின் துணிப்பை மேல் அசட்டையாக ஒரு நபர் அமர்ந்துவிட, "கருநாக்குடா எனக்கு ஏதாவது சொல்லிட்டு போறேன்" மந்திரவாதியின் குரல் தொனியுடன் கிழவர் அவனைப் பார்த்துவிட்டு துணிப்பையை எடுத்துக் கொண்டார். உள்ளிருந்து பொட்டனங்களை அவிழ்த்து மிகப் பதவிசாய் பார்த்தார். காராபூந்தி, கடலைமிட்டாய், முறுக்கு, தட்டை என வாண்டுகளுக்குரிய பண்டங்கள். முறுக்கையும் தட்டையும் பார்த்தவர் அருகிலிருப்பவரை மீண்டும் கோபத்துடன் பார்த்ததில் இருந்து அவை உடைந்திருக்கக்கூடும் என்று தெரிந்தது. வாய்க்குள் முனங்கியவாறே காலடியில் அத்துணிப்பையை அலுங்காமல் பத்திரப்படுத்தினார்.

தலையை இடதும் வலதுமாய் இரயிலின் அசைவுக்கு ஏற்றபடி அசைத்துக் கொண்டிருந்தார். அவரின் தலைக்கு மேலே கைப்பிடி ஒன்றும் அதே லயத்துடன் ஆடிக்கொண்டிருந்தது.

அவரின் முகச்சாயலின் வழி அவரைப் பற்றி யோசிக்கலானேன். இறுக்கமாய் கிடக்கிற இதழ்கள் விரிந்து அவர் சிரிக்கக் கூடும். எக்மோரில் இறங்கினால் அவரை அழைத்துப் போக பேரனோ, பேத்தியோ நிற்கலாம். இரவில் தட்டைகளை மென்கிற அவர்களுக்கு கூவத்தின் நெடியுடன் ஏதாவது கதைசொல்லக் கூடும். துணிப்பையின் மேல் அமர்ந்தவனை அக்கதையினூடே கெட்டவார்த்தைச் சொல்லி திட்டினாலும் திட்டுவார். கயிற்றுக் கட்டிலில் மல்லாக்கப் படுத்து இருமியவாறே கொசுக்கள் மொய்க்கத் தூங்குவாராய் இருக்கும். கருநாக்கைப் பற்றிய கனவுகள் அச்சத்தையும், மகிழ்ச்சியையும் தந்த வண்ணம் வரலாம், வராமலும் இருக்கலாம்.

எக்மோர் வந்து நான் சொல்வதற்குள்ளாகவே எழுந்து போனார். கூட்டத்தின் மிகுதியில் தள்ளாடியவாறு இறங்கியவர், பிளாட்பார்மின் பாதியில் வெள்ளத்திலிருந்து கரைக்கு வந்து சேர்ந்த ஆறுதலுடன் நின்றவர், இடுப்பிலிருந்து சின்ன அலுமினிய டப்பாவைப் பிரித்து மூக்குப்பொடியை எடுத்த நேரத்தில் ஒருவர் வேகமாய் அவர் மீது மோத தரையில் சரிந்தார். மூக்குப்பொடி தரை முழுதும் இரைய "நீ நாசமாப் போவடா, உன் குடும்பம் நாதியத்துப் போகுண்டா". கழண்டு விழுந்த வேட்டியைப் பிடித்தவாறே உரக்கக் கத்தினார். மோதியவர் இதற்குள் வண்டியில் ஏறிவிட கிழவரைத் தூக்கியவர் "கண்ணு தெரியாதவரய்யா" என்று சொல்ல விக்கித்து நின்றதைப்போல் இருந்தது கிழவரைப் பார்க்க.

ரயிலின் விசில் உரத்து ஒலித்தது. இரண்டு கையையும் தூக்கியவாறு "என்னை மன்னிச்சிருய்யா, இல்லேன்னா ஒண்ணுமில்லாமப் போவேன்யா" வண்டியை நோக்கி ஓடிவந்தவரை ரயில் விசை தூக்கி எறிந்ததும், என் காலின் மேல் அவரின் துணிப்பை பட்டதும் சேர்ந்து நடந்தது.

மீண்டும் வண்டி நிற்கிறது. வாண்டுகளுக்கான நொறுக்கல்கள் அவரைச் சுற்றி இறைந்திருந்தது. மூக்கில் இருந்து இரத்தம் ஒழுகச் செத்துக் கிடந்தார். உள்ளங்கை முழுவதும் சின்னக் கற்கள் பதிந்திருந்தது. வெறும் ஐந்து நிமிடம் கழித்து வண்டி கிளம்ப கூட்டம் நிறைகிறது. கைப்பிடி அதே லயத்துடன் ஆடத் தொடங்குகிறது.

காதல் பண்ணப் பழகலாமா?

ஒரு அனுபவஸ்தனின் அட்வைஸ்-7

எதிலே விட்டோம்..? ஆ..., அந்த இன்ன கெரக்டரைப்பற்றி- நாமே அறியாமல் நமக்குள் இருந்து நம்மை நடத்தும் அந்த இன்னோர் கெரக்டர்! சென்ற இதழில் அது எது என்பதுபற்றிப் பேசியபடியே, காதல் மயக்கத்தில் எம் காதலரின் இன்னகெரக்டரைப் புரிந்துகொள்ளாமல் அவரின் வெளிக் கெரக்டரையே உண்மையென நம்பி ஏமாறுவதைப்பற்றிச் சொல்லியிருந்தேன். அதோடு முக்கியமாக, நாமே நமது உண்மையான இச்சைகளை மறைத்து, போலியாக பாசாங்கு செய்துகொள்கிறோம் என்றும் கூறியிருந்தேன்.

நடிகைகளின் நடிப்பில் மயங்கித்தான் திருமணம் செய்வர் பின் நடிப்பதற்கே தடை விதித்துவிடுவர் - இது வெளிப்படையான சினிமா உலகில். ஆனால் நம்மிடையே, பெண் சுதந்திரம் பற்றி தாராள மனதோடு பேசுவோர் திருணத்தின் பின் அடுத்த வீட்டுக்காரன் மனைவிக்கு சம்பிரதாயமாக ஹலோ சொன்னாலே கடுப்பாகிவிடுவதுண்டு. காதலிக்கும்போது காதலர்பற்றி யார் என்ன சொன்னாலும் காதில் விழுத்தாமல் காதலிப்பர், திருமணத்தின்பின் அத்தனை கட்டுக்கதையையும் மீட்டெடுத்து ஒவ்வொன்றாய் நோண்டி நோண்டி ஆராய்வர். இதுபோலவே பெண்களும். காதலிக்கும்போது காதலரிடம் அப்பாவியாக நடந்துகொள்வர். திருமணமான அடுத்த மாதமே அவரின் உறவினர்கள் பற்றி ஒவ்வொருத்தராய் முறைப்பாடு செய்வர். காதலிக்கும்போது மற்றைய ஆண்களில் இல்லாத சிறப்பம்சங்களையே தம் காதலனில் காண்பர், திருமணத்தின் பின் மற்றய ஆண்களோடு ஒப்பிட்டு தன் கணவனிடம் உள்ள குறைபாடுகளையே குத்திக்காட்டுவர். பின்னர் தன்னை நம்பவைத்து மோசம் செய்துவிட்டதாக இப்படிப் பாடுவர்:



நஞ்சினை நெஞ்சில் வைத்து நாவினில் அன்பு வைத்து
நல்லவன் போல் நடிப்பான் ஞானத் தங்கமே
அவன் நாடகம் என்ன சொல்வேன் ஞானத் தங்கமே



இப்படி "திருமணத்தின் முன்னர்" "திருமணத்தின் பின்னர்" என்று தலைகீழாக மாறுகின்ற காதல் உறவுகள் பல கனடாவில் ஒரு மாதத் தாம்பத்திய வாழ்வுக்கிடையிலேயே முறிந்து மணமுறிவில் முடிந்துள்ளன. சில, இரண்டு மூன்று நாட்களிலேயே முறிந்துவிடுவதும் உண்டு. இதனால் பாதிக்கப்படுவது அந்த ஆணா, பெண்ணா என்றால் இருவரையும்விட அத் திருமணத்துக்கு வீடியோ எடுத்தவன்தான் என்பேன். அவன் கொம்யூட்டரின் முன்னால் குந்தியிருந்து, பல எஃபெக்டுகளும் பொறுக்கி எடுத்துப் போட்டு, கச்சிதமாக எடிட் பண்ணி, அதற்குப் பொருத்தமான லேட்டஸ்ட் பாட்டுக்களும் போட்டு, நான்கைந்து மாதம் மினக்கெட்டு அந்த வீடியோவைச் செய்துகொண்டு மாப்பிள்ளையிடம் போனால், "போய் அவளிடம் கேள்," என்று அவரும், "உதையேன் எனக்கு, போய் அவனிடம் கொடு," என்று அவளும் பந்தாட, இவன் வெள்ளி பார்க்க வேண்டியதுதான்!

இதற்கு பிரதான காரணம் காதலிக்கும்போது தலைகாட்டாத எம் இன்னர் கெரெக்டர் கல்யாணமாகியபின் தலைதூக்குவதுதான். ஏனென்று கேட்கிறீர்களா? ஒரு காரணம், காதல் என்பது என்னதான் நீங்கள் தெய்வீகம் என்று பூச்சூடினாலும் அடிப்படையில் ஒரு மோகத்தால் எழுவது. இல்லையேல் அது இளம் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையேதான் தோன்ற வேண்டிய அவசியமில்லை. அந்த மோகத்தின் பின்னணியில் எம் பருவ ஹோர்மோன்கள் செயற்படுகின்றன. அந்த ஹோர்மோன்களை நீக்கி விடுங்கள் - உங்களுக்கு கல்லுக்கும் காதலுக்கும் வித்தியாசம் தெரியாது. சரி, இப்போ விடயம் என்னவென்றால் காதலிக்கும்போது, காதலை எய்துவதற்குத் தடையாக இருக்கும் உங்கள் இயல்புகள் எல்லாவற்றையும் உங்கள் மனம் அமுக்கி வைத்துவிடும். அத்தோடு, நீங்கள் காதலிப்பவரிலும் இதுவே நடைபெறும். இதேவேளை காதல் மேகத்திலுள்ள நீங்களும் உங்கள் காதலரில் பிடித்த இயல்புகளையே காண்பீர்கள். பிடிக்காத இயல்புகளை அவர் மறைத்துவிடுவது ஒருபுறமிருக்க, உங்களுக்கு அவர்மீதிருக்கும் மோகமும்சேர்ந்து மறைத்துவிடும்.

ஆனால் திருமணமானபின் நீங்கள் உண்மையான வாழ்க்கையை வாழ்ந்தாக வேண்டும். ஒரே வீட்டில் வாழவேண்டும். வெளியே நீங்கள் எப்படியிருந்தாலும் வீட்டினில் உங்கள் இயல்பான நிலைக்குத் திரும்ப வேண்டும். வெளியே சென்று காதல் புரிந்தபோது போட்ட வேடங்களுடன் வீட்டிலும் இருக்க முடியாது. நாம் பகட்டான உடையணிந்து வைபவங்களுக்குப் போனாலும் வீட்டில் உடை களைந்து எளிய உடைகளுக்கு மாறிவிடுவோமே, அதுபோல் நம் உண்மையான சுபாவங்களுக்கு நாமாகவே மாறிவிடுவோம். இப்போது இருவருக்கும் முன்னர் பார்த்தவராக மற்றவர் தெரியமாட்டார். முன்னர் நீங்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டே இருக்கலாம் என்றவளுக்கு இப்போது வெட்டிப் பேச்சைவிட அலுவல் முக்கியமானதாகப்படும். முன்னர் நீங்கள் ஆசைப்பட்ட பொருளை உங்களுக்கே தெரியாமல் என்னவிலைகொடுத்தும் வாங்கிவந்து எதிர்பாராத தருணத்தில் பரிசளித்து அசத்திய உங்கள் காதலனுக்கு, இப்போது உங்கள் ஆடம்பரக் கொள்வனவுகள் அநியாயச் செலவாகப் படும். முன்னர் காதலனையோ, காதலியையோ மட்டும் தெரிந்த கண்களுக்கு இப்போது அவரவர் உறவினர் நண்பர்களது குறைபாடுகள்யாவும் துல்லியமாய் உறுத்தும்.

அதேவேளை காதலிக்கும்போது தனக்கு தந்த மதிப்பு மரியாதையும் தன்னில் கொட்டிய அன்பும் ஈர்ப்பும் எவ்வளவு மாறிவிட்டதென்ற கணக்கையும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மனம் கணித்துப் பார்த்துக்கொள்ளும். அந்தக் கணக்கு சரிதானா எனப் பார்க்க, வேண்டுமென்றே நாம் சோதனை நடத்திப் பார்க்கத் தொடங்கிவிடுவோம். தாயிடம் போன் பண்ணிக்கொண்டிருக்கும்போது தண்ணீர் கேட்டு, "வேண்டுமெண்டால் போய் எடுத்துக் குடியுங்களன்," என்ற பதிலை வாங்கிக் கட்டிக்கொண்டு, ம் நான் நினைச்சது சரிதான் என்று மனக்கணக்கைச் சரிபார்ப்போம். காதலித்தபோது இருந்த மோகம் இப்போது தேவையற்றுப் போய்விட்டதால், ஒட்டலும் உரசலுமாக இருந்தவன் விட்டுவிட்டு தன்வேலையாய் அலைவான். பேசவேண்டுமென்று மனைவி காத்திருந்தாலும் அதற்கு ஒரு நேரம் ஒதுக்குவது அவசியமென்றே அவனுக்குப் படாது. வெட்டியாக டீவி பார்த்துக் கொட்டாவி விட்டுக்கொண்டிருப்பதுகூட மனைவியின் பேச்சைக் கேட்பதைவிட பயனள்ள நேரம்போல் இருக்கும் அவனுக்கு. ஆற்றாது, அவளாக வந்து பேச்சைத் தொடங்கினாலும், அது அவனைக் குழப்புவதுபோலாகி இறுதியில் ஏன் பேசினோம் என்று அவளை நினைக்க வைக்கும் ஒன்றாய் முடியும். அப்போது முன்னைய காலத்தை நினைத்து இப்படிப் பாடத் தோன்றும்.

காவேரி ஓரம் கவி சொன்ன காதல் கதை சொல்லி நான் பாடவா - உள்ளம்
அலைமோதும் நிலை கூறவா? - அந்தக்
கனிவான பாடல் முடிவாகு முன்னே கனவான கதை கூறவா - பொங்கும்
விழி நீரை அணை சேர்க்கவா?

எனவேதான் நாம் திருமணத்துக்குப் பின் எம் துணையின் உண்மைச் சுபாவத்தை அறிந்துகொள்வதைவிட அதற்கு முன்னரே அறிந்துகொண்டு, அது உங்கள் சுபாவத்துக்கு ஒத்துப்போகுமா என்று பார்த்துக்கொள்வது அவசியம். அதை எப்படிச் செய்வதென்பது அடுத்த இதழில்.



பெண் விடுதலையின் அர்த்தத்துக்கு புதிய வியாக்கியானங்கள் பல வந்துவிட்டன. ஆபாசப்படங்களில் பெண்களைப் போகப் பொருட்களாகக் காண்பிப்பதற்கு எதிராகக் குரலெழுப்பிய நிலைகூட மாறிவிட்டது. இன்றோ அந் நீலப் படங்களை ஆண்களின் இச்சைகளுக்கானதாகவன்றி பெண்களுக்கானதாக உருவாக்குவோமென்று கூறும் உச்சத்துக்கும் போய்விட்டனர் சிலர். அனைத்திலும் சமபங்கு. அது அடுப்பாயிருந்தாலென்ன ஆபாசமாயிருந்தாலென்ன? அதில் என்ன தப்பு என்று கேட்பது இருக்கட்டும், அவை அக் கோணத்தில் சரியானவையாகவும் இருக்கட்டும். ஆனால் இந்த நிலைக்குப் பெண்ணுரிமை பேசுகின்ற அதேவேளை யதார்த்தத்தில் எம் பெண்களின் நிலை என்ன? நாம் - குறிப்பாகத் தமிழ்ப் பெண்கள் - எதிர்நோக்குகின்ற இன்றைய சவால்கள் என்ன? இதை ஒருமுறை சிந்தித்தாலென்ன?

“அடுப்பூதும் பெண்களுக்கு ஆயுதம் எதற்கு” என்று போராட்டத்தில் பெண்களை மறுதலித்த கருத்துக்களுக்கு எதிராக, “அடுப்போடு வாழ்ந்த நெருப்புக்கள் நாங்கள் எரிப்பதற்காக எழுந்து வருகிறோம்” என்று பெருந்திரளாய் பெண்கள் கலந்துகொண்ட போராட்டம் எம் ஈழவிடுதலைப் போராட்டம். வீட்டுக்கு மகனது ஆண் நண்பர்கள் யாரும் வந்தால், “ நீ உள்ள போ பிள்ள,” என்று பெண்பிள்ளைகளைத் திரைமறைத்த அதே யாழாதிக்க தமிழ்ச் சமுதாயத்தில், சமூகக் கதவுகளை உடைத்துகொண்டு வெளியேறி, ஆண் போராளிகளோடு இணைந்து கனதியான ஆயுதங்களைத் தோள்களில் சுமந்து, கல்லிலும் முள்ளிலும் நடந்து, காடு கரம்பையெல்லாம் கடந்து, இரவு பகலாய்ப் பதுங்கிக் கிடந்து, மூர்க்கத்தனமான பாரிய தாக்குதல்களைத் துளி அச்சமுமின்றி நடத்தி முடிந்து, இறந்த தோழர் தோழியரைச் சுமந்தபடி பாசறை திரும்பும் பெண்கள் தோன்றுவரென எவர் நினைத்தனர்? பெண்ணென்றால் பூப்போல, மெல்லிடையாள், தேன் மொழியாள், கண்களால் காதல் கணை தொடுப்பதைத் தவிர வேறறியாள் என்ற எம் சமூகக் கற்பிதத்தைச் சிதறு தேங்காயாய் உடைத்துவிட்டு துப்பாக்கியை உயர்த்தியபடி யுத்த களத்தில் நின்றாள் அவள், இரும்பையொத்த இலட்சிப் பெண்ணாய்.

ஆனால் அந்த யுத்தம் பெண் விடுதலையைப் பெற்றுக் கொடுக்கவில்லை. யுத்தத்தில் பெண்கள் பயன்படுத்தப்பட்டார்களேயன்றி யுத்தம் பெண்களுக்குப் பயனளிக்கவில்லை என்று நோவோருமுண்டு.

ஆனால் யுத்தத்தின் பின் அந்தப் போராளிப் பெண்களின் நிலைமை என்ன என்று பார்த்தால் சூனியம் நிறைந்த ஒரு பயங்கரத்தின் நிழல் அங்கே படிந்து கிடக்கிறது. இராணுவத்திடம் சிக்கி சீரழிக்கப்பட்டுக் கொல்லப்பட்ட பெண்களின் நிர்வாண உடல்களை அக் குடும்பத்தார் கெஞ்சக் கெஞ்ச மறைப்பேதுமின்றிப் பிரசாரத்துக்காகப் பாவித்தவர்கள் அப் பெண்களுக்கும் குடும்பங்களுக்கும் அவமானத்தைத் தேடிக் கொடுத்ததையன்றி வேறெந்த உதவியைச் செய்தார்களென்று யார் கேட்டார்கள்?அண்மையில் ஆனந்த விகடனில் ஒரு முன்னாள் பெண் போராளி, “நான் எப்படி விபச்சாரியானேன்,” என்று ஒரு பேட்டி கொடுத்திருந்தபோது, தமிழ்க்காவலர்கள் என்றுதம்மைக் காட்டிக்கொண்டோர், அது போலிப் பேட்டியென்று கண்டித்துக் குரலெழுப்பினர். அம்பலத்தில் விடயங்கள் வருவதை அவமானமென நினைப்போர் உண்மையில் ஓர் இனத்தின் விடுதலைக்கெனப் போர்க்களம் சென்ற இப் போராளிப் பெண்களை அவ் இனம் இன்று எப்படி நோக்குகிறது, என்ன மதிப்பளித்திருக்கிறது, என்ன வாழ்வளித்திருக்கிறது என்று பார்ப்பதில் அக்கறைப் பட்டார்களா? பாரதி கண்ட புதுமைப் பெண்களைப் போர்க்களத்தில் பார்த்து வியந்தவர்கள் யுத்தம் முடிந்து அவர்கள் நிர்க்கதியாய் நின்றபோது அவமானச் சின்னங்கள்போல் முகத்தைத் திருப்பிக்கொள்கிறார்களே? அநாதரவாகக் கைவிடப்பட்டவர்களாக அவர்கள் தனித்தனியே தம் வாழ்வுக்கு அல்லாடும் நிலையில் இவர்களுக்கு வேலை கொடுத்தாலே வில்லங்கம் என்று விலகுவதும் திருமணம் செய்வதற்கு ஒவ்வாதவர்களாக ஒதுக்குவதும், ஏன் சொந்த வீட்டிலேயே அவர்களை அவமானச் சின்னங்களாக இகழ்வதும் நிகழ்கிறதா இல்லையா? இந் நிலையில் விதவைகளின் நிலையை யார் விபரிப்பது? பிள்ளைப் பழுவும் சேர்ந்துவிட்ட நிலையில் தமக்காக இல்லாவிட்டாலும் பிள்ளைக்காக வாழ்வதற்கு அவர்களுக்கு என்ன வழி விட்டு வைக்கப்பட்டுள்ளது?

எந்தச் சமூகத்தின் சுதந்திரத்துக்காக இந்தப் பெண்கள் தம் உயிரையும் கொடுத்துப் போராடினார்களோ, அந்தச் சமூகம் அவர்களுக்கு அளித்துள்ள நிலையைப் பார்த்தீர்களா? போராட்டத்துக்கு பேராதரவாளர்களாகத் தம்மைக் காட்டிக்கொண்டு உலகின் பட்டி தொட்டியொன்றும் விடாமல் பெருந்தொகையான நிதி வசூலித்த பெரும்புள்ளிகளெல்லாம் இவர்களின் அவல நிலைக்குத் தாம் பொறுப்பில்லை என்று கைவிரித்துவிட்டார்கள். ஆனால் அவர்கள் தென்னிந்திய சினிமா நடிகைகளையும் பாடகர்களையும் தருவித்து கொண்டாட்டங்கள் நடத்தி மகிழ்கிறார்கள்.

இன்னொரு புறத்தில் பெண் போராளிகளை இழிவுபடுத்த சில இலக்கியவாதிகளும் கிளம்பிவிட்டார்கள். அவர்கள் இப் பெண்களை எள்ளி நகையாடுகிறார்கள். கேவலப்படுத்துகிறார்கள். தம் வக்கிர எண்ணங்களுக்கு தீனியாக்கிக்கொள்ளக் கிடைத்த கதாபாத்திரங்களாக இப் பெண்களை ஆக்கிக்கொள்ள விளைந்துவிட்டார்கள். போராட்டத்தில் பெண்கள் இணைந்தது கலவிக்குத்தானாம். தங்கள் பொறுப்பாளர்களின் காம இச்சைகளைத் தீர்ப்பதுதான் அவர்கள் வேலையாம். அப்படி நடந்துதான் பெண்கள் அமைப்புத் தலைமைப் பதவிகளைப் பெறுகினறாம். இப்படியெல்லாம் எழுதுகிறார்கள், கேட்பாரற்ற நிலை. “முறத்தால் அடித்துப் புலியைத் துரத்திய” புறநானூற்றுப் பெண்கள்தான் திரும்ப அவதாரமெடுத்து வரவேண்டும் இவர்களைக் கேள்விகேட்க. போராடி அழிந்த பெண்கள் போக, எஞ்சிய பெண்கள் போராளிகள் சமூகத்தில் அழிய, அதுக்கு மேலாக இலக்கியத்தில் அழிக்கவும் புறப்பட்டுவிட்டார்கள் எம் எழுத்து ஜாம்பவான்கள்.

சரி இது இப்படியிருக்க, நாட்டில் நம் மொழிபேசும் முஸ்லிம் பெண்களின் நிலைமையில் மாற்றம் உண்டா? சமூகச் சட்டங்கள் மாற்றம் கண்டுள்ளனவா? அங்கே சமத்துவத்துக்கான ஏதேனும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா? அப் பெண்கள் தங்கள் உணர்வுகளை எழுத, கவிதைகள் தீட்ட இடைவெளிகள் கிடைத்துள்ளதா? இயல்பாக மாறிச்செல்லும் உலக மாற்றத்தோடும், பொருளாதார, அபிவிருத்திச் செயற்பாட்டோடும் இப் பெண்களைப் பூட்டிவைத்த பழமைவாதத்தில் உடைப்புக்கள் நிகழ்ந்துள்ளனவா? அப்படி உடைத்து வெளியேவரத் துடிக்கும் பெண்களுக்கு உதவிக்கரம் நீட்டத் தன்னும் முடிகிறதா? மத்தியகிழக்கு நாடுகளுக்கு வீட்டுப் பணிப்பெண்களாகச் செல்லும் இவர்கள், எஜமானர்களால் பலாத்காரப்படுத்தப்பட்டு, கர்ப்பம் சுமந்து, குற்றவாளிகளென அந்நாட்டு நீதிமன்றங்களால் முத்திரை குத்தப்பட்டு





நாடு கடத்தப்படுகிறார்களே, யார் கேட்கிறார்கள்? விமான நிலையம் வந்து இறங்கும் இந்த முஸ்லிம் பெண்களை, மரமேறி விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக, ஏதோ, இவர்கள்தான் தவறாக நடந்ததாக அரேபியத் தீர்ப்புக்களை வழிமொழிந்து நன்னடத்தை முகாம்களுக்கு அனுப்பி எடுக்கிறார்களே. அவர்கள் சொந்த ஊர் போய்ச் சேரும்போது அவர்களுக்கு என்ன செங்கம்பளங்களா கமுமரங்களா காத்திருக்கும்? வீட்டுப் பிணியை மாற்றப் புறப்பட்ட இப் பெண்கள் அவமானச் சின்னங்களாக கூனிக் குறுகி நிற்பது குறித்து யார் குரல்கொடுக்கிறார்கள்?

இன்னோர் தமிழர் சமூகம் இலங்கையில் வானை முட்டும் மலைகளுக்கிடையே வறுமையின் பள்ளத்தில் வீழ்ந்து கிடக்கிறது. அங்கே பெண்கள் அடிமை நுகத்தடியில் மாடுகளாக தேயிலைப் பரப்புகளில் நாள்தோறும் உழல்கிறார்களே!

குளிர்நிறைந்த மாலைகளில் – தேயிலை
இதமான பானம்தான். – ஆனாலும்
அதன் ஒவ்வோர் துளியையும்
ருசியார்க்கும் போதும்
உனக்குத் தெரியுமா,
பசியால் வீறிடும் குழந்தையின் குரலொன்று
காதில் இரைந்திட,
முதுகில் கூடைசுமந்த பெண்ணொருத்தி,
பனியடர்ந்த தேயிலைப் பரப்பினைக்
கைகளால் துலவியபடி
ஒவ்வொரு நாளுக்கும்
வாழ்வினைத் தேடுவது..

தெரியுமா? இந்தப் பெண்களுக்குப் பெண் விடுதலையின் அரிச்சுவடி புரியுமா? அவர்களின் விடுதலைக்கு எங்கிருந்து தொடங்கவேண்டுமென்பது எங்கள் பெண் விடுதலை அமைப்புகளுக்குத் தெரியுமா? தெரிந்திருந்தால் மூன்று நூற்றாண்டுகளாக் இன்றுவரை இப் பெண்களின் அடிமைச் சங்கிலிகள் அசையவே இல்லையே?

அளவுக்கு மேலாக ஆட்கள் ஏறியும்
புறப்படவில்லை புகையிரதங்கள்

என்று இவர்கள் வாழும் லயன்களைச் சொல்கிறது ஒரு ஹைக்கூ கவிதை. பெற்றோரும் பிள்ளைகளும் அவர்களின் கணவன் மனைவிகளும் அவர்தம் குழந்தைகளும் மந்தைக்கூட்டம்போல் ஒன்றடி மன்றடியாகத் தூங்கும் அந்த எட்டடிக் காம்பிறாக்களுக்குள் நுழைந்து ஆண் பெண் சமத்துவம் பேச யார் முன்வருவார்?



புலம்பெயர்ந்த தமிழ்ப் பெண்களின் நிலைமைதன்னும் மகிழ்சியுறக் கூடியதாக இருக்கிறதா? மனைவியோ மகளோ தன்னந் தனியே வேலைக்குச் சென்று இரவிரவாக வீடுதிரும்ப முடிகிறது என்பதும்,



விரும்பியவாறு உடுத் தவும் ஆங்கிலக் கெட்ட வார்த்தையில் வெடுக்கெனப் பதிலளிக்கவும் முடிகிறதென்பதும் பெண்விடுதலையை உத்தரவாதப்படுத்திவிட்டதாகிறதா? கனடாவில் உள்ள சமூகங்களின் சனத்தொகையோடு வீதாசாரமாக ஒப்பிட்டுப் பார்த்தால் தற்கொலை செய்து கொள்ளும் பெண்களில் தமிழ்ப் பெண்களின் விகிதம்தான் அதிகமாக இருப்பதாக ஒரு ஆய்வு சொல்கிறது. இவ்வளவு சுதந்திரம் இருந்தும் இந்த மன அழுத்தம் எப்படி ஏற்படுகிறது? மேற்குலகில் கலந்துவிட்ட எம் கலாசார மாற்றம், பல தமிழ் இளைஞர்களைத் தமக்கான மணப்பெண்ணை இலங்கையிலிருந்தே இறக்குமதி செய்ய எண்ணவைக்கிறதேயன்றி, இங்குள்ள தமிழ்ப் பெண்களுக்கு என்ன அங்கீகாரம் வழங்கியுள்ளது? பெண் சுதந்திரத்தை திருமணப் புள்ளியில் நிறுத்தி எடைபார்க்கும் எம் சமூகக் கண் இன்னும் வேவுபார்த்துக்கொண்டிருக்கும்போது எப்படி மேற்கத்தய பெண்ணியக் கருத்துக்கள் எம் பெண்களுக்குக் கைகொடுக்கப் போகின்றன? அதையும் மீறி நிகழ்கின்ற காதல் திருமணங்களும் சில மாத-வார-நாள்களுக்குள்ளேயே முறிந்துவிடுவது இப்போ பொதுவிடயமாகிவிட்டதே. பெண் சுதந்திர உணர்வுகளை ஜீரணிக்கக்கூடிய பக்குவம் தமிழ் இளைஞர்களிடம் வளரவில்லை என்பதும் இதற்குப் பெருங் காரணியல்லவா? மேற்கத்தைய ஜோடிகள் திருமண பந்தத்தில் இணைவதற்கான ஒரே வழிமுறையாக இருக்கின்ற "டேட்டிங்" முறையையில் அவர்கள் கடைப்பிடிக்கும் தர்மங்கள் என்னவென்ற புரிதலுடனா, அதைப் பின்பற்றி டேட்டிங் செய்யும் எம் சோடிகள் எடுத்துக்கொள்கிறார்கள்? "பழகிப் பார்ப்போம், பிடிக்கலைனா ஃபிரண்ட்ஸ்சாவே இருந்திடுவோம்," என்று சிவாஜி படத்தில் சொலமன் பாப்பையா சொல்வதுபோல் அத்தனை லைட்டா எடுத்துக்கொள்ள முடிகிறதா இவர்களால்? பிடிக்காது பிரிந்து சென்றாலும் அவரவர் உரிமையை மதித்து அந்தரங்கத் தன்மைகளை பேணுகின்ற பக்குவத்துடன் நடந்துகொள்கிறார்களா? முன்னர் டேட்டிங் செய்த பெண்களை ஏற்றுக்கொள்வதில் மனத்தடை கொண்ட இளைஞர்களின் "தமிழ் மனம்" மாறாத இக் கலாசார மாற்றத்தில் பெண்விடுதலை சாத்தியமா? நிலையில் சமூகத்தை விட்டு வெளியே பறந்துவிடும் தப்பித்தல் ஒன்றுதான் வழியானால் அது புலம்பெயர்ந்த மொத்தத் தமிழ்ப் பெண்களுக்கும் தீர்வாக முடியுமா?

நிஜவாழ்க்கை என்ன சொல்கிறது பார்த்தீர்களா? இப்படியிருக்க, பெண் விடுதலையை எம் வாழ்க்கையிலிருந்து தொடங்காமல், வேறெங்கிருந்து தொடங்குவது? எம் தமிழ் சமுதாயத்தில் பெண்களின் நிலைமையை மதிப்பீடு செய்து அங்கிருந்து ஏதும் செய்ய முடியுமா என்றல்லவா முயற்சிக்க வேண்டும்?

பெண்விடுதலை என்பது ஆணிலிருந்து பெண் விடுதலையடைவதல்ல, ஆணாதிக்க சமுதாயத்திலிருந்து பெண் விடுதலை பெறுவதுமல்ல. இந்த சமுதாயத்திலிருந்து விடுதலை பெற்று பெண் எங்கும் சென்றுவிட முடியாது. இவ் ஆணாதிக்க சமுதாயத்தை ஆண் பெண் சமத்துவம்கொண்ட சமுதாயமாக மாற்றியமைப்பதே பெண்விடுதலை. ஆண்-பெண் சமத்துவமென்று கூறுகையில் ஆண்கள்போல் பெண்கள் நடந்துகொள்வதென்று கொள்வது கொச்சையான அர்த்தமாகும். ஆணும் பெண்ணும் சேர்ந்த ஒரு முழுமையில் ஆணின் பங்கும் பெண்ணின் பங்கும் சம பெறுமாணங்களுடன் சமுதாயத்தில் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்பதே இச் சமத்துவத்தின் அடிப்படை. ஆனால் எல்லா சமுதாயங்களும் ஒரேமாதிரி இல்லை. அந்தந்த சமுதாயத்துக்கு ஏற்ப பெண்விடுதலைக்கான முன்னெடுப்புகளும் மாறுபட்டதாக அமைய வேண்டும். தமிழ் சமுதாயத்தைப் பொறுத்தவரை, இலங்கையின் வடக்கு கிழக்குத் தமிழ்ப் பெண்களும், முஸ்லிம் பெண்களும், மலையப் பெண்களும், புலம்பெயர்ந்த நாட்டுப் பெண்களும் வெவ்வேறான சமூக நிலைமைகளை எதிர்கொள்கிறார்கள். அவற்றை வெவ்வேறாகவே அணுக வேண்டும். பெண்கள் தினமென்று கூறுவதை அர்த்தப்படுத்தக்கூடிய சிந்தனையாக இது இருந்தால் மகிழ்ச்சி!

– கௌசல்யா –

சமவுரிமை புகட்டிய காலனித்துவம்...





முதியோர் நலன் பற்றிய இந்தப் பக்கத்தில் இதுவரை பல உபயோகமான விடயங்களைப் பகிர்ந்தபடியே தற்போது முதியோர் ஆரோக்கியம் பற்றிய விடயங்களில் கவனம் செலுத்தி வருகிறோம். இந்தவகையில் சில நோய்களுக்கான சிகிச்சை வசதிகள் பற்றி கடந்த சில இதழ்கள் பேசின. இவ்விதழில் நாம் எமது மருத்துவ உதவிக்கான ஒன்டாரியோ அரசாங்கத்தின் இலவச சேவையான ஓஹிப் எனப்படும் ஒன்டாரியோ ஹெல்த் இன்சூரன்ஸ் பிளான் பற்றி நாம் அறிந்திருக்க வேண்டிய விடயங்களை நோக்குவோம். நீங்கள் நாளாந்தம் மருத்துவ உதவிக்காகப் பயன்படுத்தும் "ஓஹிப் கார்ட்" எவற்றையெல்லாம் வளங்குகிறதென்பதை நீங்கள் அறிந்திருக்க வேண்டாமா?

முதியோர் ஆரோக்கியமும் ஓஹிப் அட்டையும்

ஒன்டாரியோ ஹெல்த் இன்சூரன்ஸ் பிளான் எனப்படும் ஓஹிப் திட்டம், ஒன்டாரியோ வாசிகளுக்கு மருத்துவரீதியாகத் தேவைப்படும் பல்வேறு ஆரோக்கிய சேவைகளுக்கு காப்பளிக்கிறது. இச் சேவையைப் பெற நீங்கள் செல்லுபடியாகக்கூடிய ஓஹிப் கார்ட் ஒன்றை வைத்திருக்க வேண்டும்.

ஓஹிப் கார்ட் செல்லுப்படியாவதற்கு:

உங்கள் ஓஹிப் கார்ட் எப்போது செல்லுபடியகுமென்றால், நீங்கள் ஒன்டாரியோ வாசியாகியதையடுத்து முதல் வரும் 183 நாட்களில் குறைந்தது 153 நாட்களாவது ஒன்டாரியோ மாகாணத்தில் வசித்திருக்கவேண்டும். அத்தோடு பின் எந்தவொரு 12 மாத காலத்திலும் குறைந்தது 153 நாட்கள் ஒன்டாரியோவில் வசித்திருக்கவேண்டும். எனவே, வெளிநாடு, வெளி மாகாணம் செல்பவர்கள் இந்த நாட் கெடுவுக்கேற்ப தங்கள் பயணத்தைத் திட்டமிட்டுக்கொள்ள வேண்டும். இல்லையேல் திரும்பி வந்தபின் ஓஹிப் நலன்களைப் பெறுவதில் சிக்கல்களை எதிர்நோக்கலாம்.

அத்தோடு புதிதாக ஒன்டாரியோவில் வசிக்க வந்த ஒருவருக்கு 3 மாதங்களின் பின்னரே, ஓஹிப் பாதுகாப்பு கிடைக்கும். அதுவரை மருத்துவ உதவிகளுக்கு அவர் வேறு காப்புறுதிகள் மூலமே தன்னைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

காலாவதி:

இரண்டு வகை ஓஹிப் அட்டைகள் உண்டு. சிகப்பு வெள்ளை நிற அட்டைக்கு காலாவதி கிடையாது. உங்கள் படத்தைக் கொண்ட அட்டைக்கு ஒரு காலாவதி தேதி குறிக்கப்பட்டிருக்கும். அதற்கு 6 மாதங்களுக்கு முன்னதாகவே நீங்கள் விரும்பின் அட்டையைப் புதுப்பிக்கலாம். இல்லையேல், இரண்டு மாதத்துக்கு முன் அதைப் புதுப்பிக்கும்படியான அறிவுறுத்தல் உங்களுக்கு அனுப்பப்படும். சேர்விஸ் ஒன்டாரியோ நிலையமொன்றுக்குச் சென்று புதிய புகைப்படம் எடுத்து அதை நீங்கள் புதுப்பிக்க வேண்டும். 80 வயதுக்கு மேற்பட்டவரானால் தபால் மூலம் புதுப்பிக்கலாம்.

ஓஹிப் கார்ட் வழங்கும் பராமரிப்புகள்:

வைத்திய சேவைகள்:

உங்கள் குடும்ப வைத்தியரின் காப்புறுதியளிக்கப்பட்ட சேவைகளுக்கு அரசாங்கம் நிதி வழங்குகிறது. ஆனால் நீங்கள் ஒரு அப்பொயின்மென்டைத் தவறவிட்டால், அல்லது உங்கள் ஓஹிப் அட்டை காலாவதியாகியபின் ஒரு வைத்திய சேவை பெற்றால் வைத்தியர் கட்டணம் அறவிடலாம்.

கண் பராமரிப்பு:

20 வயதுக்குட்பட்டவர்களும் 65 வயதுக்கு மேற்பட்டவர்களும் வருடத்திற்கு ஒருமுறை இலவச கண் பரிசோதனை செய்துகொள்ள ஓஹிப் நிதி வழங்குகிறது. ஏனையோர் கட்டணம் செலுத்தவேண்டுமாயினும் கண் தொடர்பான நோய்கள் கொண்டிருப்பின் நோயாளி என்ற வகையில் இலவச கண் பரிசோதனை செய்துகொள்ள அனுமதி பெறலாம். மேலும் இவ் வகையில் ஒன்டாரியோ டிஸ்ஸபிலிட்டி சப்போர்ட், ஒன்டாரியோ வேர்க்ஸ், அல்லது ஃபமிலி பெனிபிட்ஸ் திட்டங்களின் உதவி பெறுவோருக்கும் இரண்டு வருடத்திற் கொருமுறை கண்பரிசோதனை செய்ய ஓஹிப் நிதி வழங்குகிறது.

வேறு சுகாதார சேவைகள்:

பாதங்களைப் பராமரிக்கும் போடியற்றில் சேவைக்கு ஓஹிப் பகுதியாக நிதி வழங்குகிறது. உடற்சிகிச்சையான பிசியோதிரபிக்கு, பெறப்படும் சிகிச்சைக்கேற்ப அது முழுமையாகவோ பகுதியாகவோ நிதி வழங்குகிறது.

வைத்தியசாலை பல் பராமரிப்பு:

வைத்தியசாலையில் நடைபெறும் சில பல்சார்ந்த அறுவைச் சிகிச்சைகளுக்கு ஓஹிப் நிதி வழங்குகிறது. ஆனால் பல்வைத்தியரது நிலையத்தில் மேற்கொள்ளப்படும் வழமையான பற் சிகிச்சைகளுக்கு நீங்களே கட்டணம் செலுத்த வேண்டும்.

பிற மாகாணங்களில் ஓஹிப் கார்ட்:

ஓஹிப் கார்ட்டால் பெறும் பயன்களில் பெரும்பாலானவற்றை நீங்கள் பிற மாகாணங்களுக்குச் செல்லும்போதும் பெறலாம். அங்கு நீங்கள் பெறும் மருத்துவ சேவைக்கான கட்டண விபரம் பெரும்பாலும் ஒன்டாரியோவுக்கு நேரடியாகவே அனுப்பிவைக்கப்படும். ஏதேனும் மருத்துவ சேவைக்கு நீங்கள் கட்டணம் செலுத்த நேரிடின், உள்ளூர் அமைச்சில் அந்த ரசீதை சமர்ப்பித்து, அப் பணத்தைத் திரும்பப்பெற விண்ணப்பிக்கலாம். ஆனால் மருத்துவரின் சீட்டின் பிரகாரம் மருந்துக் கடைகளில் வாங்கும் மருந்துகள், வீட்டுப் பராமரிப்பு சேவைகள், அம்பியூலன்ஸ் சேவைகள் போன்றவற்றுக்கு ஓஹிப் உதவியளிக்காது.

வெளிநாட்டில் ஓஹிப் சேவை:

வெளிநாடு செல்பவர்களுக்கு அமைச்சு ஒரு குறிப்பிட்ட அளவு தொகையை அவசரநிலை மருத்துவ சேவைகளுக்காக வழங்குகிறது. எனினும் வெளிநாடுகளில் நீங்கள் பெறும் அவரசநிலை மருத்துவ சேவைகள் ஓஹிப் ஒதுக்கிய நிதியைவிட மேலதிகமாக இருக்கக்கூடுமாகையால் நீங்கள் மேலதிக காப்புறுதி செய்துகொள்வது உசிதம். அத்தோடு அங்கு அம்பியூலன்ஸ் சேவைகளுக்கு ஓஹிப் பணமளிக்காது.

ஓஹிப் கார்ட் காப்பளிக்கும் சேவைகள் பற்றிய, அல்லது அதுதொடர்பான உங்கள் ஐயங்கள் பற்றிய தெளிவைப் பெற நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய நிலையம்:

சேர்விஸ் ஒன்டாரியோ (Service Ontario)

1-866-532-3161

TTY: 1-800-387-5559

www.ontario.ca/exi2



Oorbook.com
யாதும் ஊரே...
ஊருக்கும் உறவுகளுக்குமான சமுகவலைத் தளம்


"Make Your Dream Home Come True"
416-230-1107
RIGHT AT HOME REALTY INC BROKERAGE
RIGHT AT HOME REALTY INC., BROKERAGE
HOME OFFICE:
401-7045 EDWARDS BLVD
MISSISSAUGA, ONT.L5S 1X2
PH# 905-565-9200
MAIN OFFICE:
202-895 DON MILLS ROAD
TORONTO, ONT.M3C 1W3
PH# 416-391-3232
PARAM GNANASWARAN
REAL ESTATE BROKER


ONTARIO FINANCIAL CENTRE
உங்கள் அனைத் துவிதமான மோட்கேஜ்
தேவைகளுக்கும் என்னை நாடுங்கள்
Rohan Rajah
Financial Advisor Agent
Cell: 416 457 2050
Office: 416 410 4633
Fax:416 410 3063
1825, Markham Road, Scarborough On. M1B 4Z9


HomeLife Today Realty Ltd., Brokerage
Independently Owned and operated
Higer Standard Agents... Higher Results
HOMELIFE
HIGHER STANDARDS
Parathan Navaratnam
Sales Representative
Business: 416-298-3200 Direct: 647-524-7655
210-31 Progress Ave., Toronto ON. M1P 4S6


அடமானக்
என் பணி கடன் செய்து கொடுப்பதே!
GTA Square
EXECUTIVE MORTGAGE
VERICO
MORTGAGE BROKERS NETWORK
Dir : 416-543-6614
Tel : 416-299-0003 Fax: 416-299-0043
dasn@executivemortgagecanada.com
http://das.executivemortgagebroker.com
FSCO LICENCE # M08007147/12286
DAS NARAYANASAMY
MORTGAGE BROKER


Dr.S.Raveendran and Associates
Dentel Centre
Dental Surgeons
Dr. Sabapathy Raveendran
B.D.S., M.S., F.D.S.R.C.S. (Eng)
Dr. Mujeed Qazi
B.D.S., D.D.S.
Dr.Swati Surapaneni
B.D.S., D.M.D.
Dr. Vathany Sivakumaran
B.D.S., D.M.D.
General Dentistry
Implant Supported Teeth
Braces Treatment
Cosmetic Dentistry
Oral Surgery
Root Canal/Crown/
Bridge Treatment
Oral Diseases
Mississauga Office
905 270 7844
102-3025 Hurontario Street
Mississauga ON L5A 2H1
(Hurontario & Dundas E)
Scarborough Office
416 283 9000
1139 Morningside Ave., Suite 25
Scarborough ON M1B 0A7
(Morningside & Sheppard)
www.raveendrandentist.com


Buying - Selling - Investing
RESIDENTIAL COMMERCIAL INVESTMENTS
TOP 5% Sales Rep In Canada
Honest & Professional Services
HELEN ANTHONIPILLAI
Sales Representative
416-830-5724
helen.exatina@gmail.com
www.helenhomes.ca
HomeLife/Future Realty Inc., Brokerage*
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: (905) 201-9977 Fax: (905) 201-9229


BUYING / SELLING REAL ESTATE
ஒரு அழகான வீட்டை வாங்க, விற்க...
NANDA KANDASAMY
Sales Representative
Dir: 416-457-4509
*Independently Owned and operated
Higher Standard Agents... Higher Results
HomeLife Today
Realty Ltd., Brokerage*
Off: 416-457-4509


CANAM.V.FINANCIAL SERVICES.
GTA Square
For All Your Mortgage Needs, Call
Vyra Karunananthan
Financial Advisor
Tel : 416-410-7373
Fax : 866-243-2410
416-261-0070
416-264-9647
Cell: 416-277-3818
email : vyrakaru@rogers.com
5215 Finch Ave. E, Suite 217, Scarborough, ON. M1S 0C2


Tam Sivathasan
Broker of Record
Dir.: 416.804.3443
VEEDU REALTY INC. BROKERAGE
நாமார்க்கும் குடியல்லோம்!
இருபது வருடங்கள் நேர்த்தியான சேவை
வீடு
வாங்குதல் - விற்றல் - அடமானம் பெறுதல்
VEEDU REALTY INC.
BROKERAGE
416.759.6000
WWW.VEEDU.COM


HIS MASTER'S LEGAL
His Master's Legal Services
Professional Corporation
Rajan Mahavalirajan B.A
Commissioner of Oaths - Licensed Paralegal
Law Society of Upper Canada
Traffic Tickets- Provincial Offences | Small Claims Court | Employment Law |
Criminal Law- Summary Conviction | Human Rights Law | Landlord Tenant Board |
Immigration Law |
Tel:416-757-2525 Fax:905-430-1627
info@masterslegal.com www.masterslegal.com
1193 A Brimley Road, Suite 5, Toronto, ON. M1P 3G5
GET UP AND CALL US, DON'T GIVE UP YOUR RIGHTS !